இன்றைய காலநிலை



கூடிய வெப்பநிலை 28 °c

குறைந்த வெப்பநிலை 24 °c

மழையுடன் கூடிய காலநிலை எதிர்பார்க்கப்படுகின்றது.



ஸ்ராலினுக்குப் பாது காப்பு கோருகின்றார் கருணாநிதி பக். 6


சீனாவைப் பின் தள்ளி முன் னேறியது அமெ. பக். 7


கரைச்சிக் கிரிக்கெட் உதயசூரியன் சம்பியன் பக். 22


ஐ.பி.எலில் இந்த வருடம் பங்குபற்ற மாட்டார் சங்கா பக். 23



# உதயன்

பக்கம் : 24

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 கதிர்: 065 வள்ளுவர் ஆண்டு: 2045 தை 17, வியாழன் 30.01.2014


# எந்தவொரு விசாரணையும் சர்வதேசத் தரத்தில் இல்லை

## இலங்கை அரசைக் கடுமையாகச் சாடுகிறது பிரிட்டன்

கொழும்பு, ஜனவரி30
இலங்கை அரசால் இதுவரை நிறுவப்பட்ட எந்தவொரு ஆணைக்குழுவின் விசாரணைகளும் சர்வதேச தரத்துக்கு ஏற்புடையதாக இல்லை என்று சாடியுள்ள பிரிட்டன், சர்வதேச தரத்துக்கு ஏற்புடைய உள்ளக விசாரணைகளை இலங்கை ஆரம்பிக்குமானால் அதற்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

பிரிட்டன் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற விவாதத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீபன் ரிம்ஸ் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே வெளியுறவு, பொது நலவாயப் பணியகத்தின் இணை அமைச்சர் ஹுகோ ஸுவைர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அமைச்சர் ஹுகோ ஸுவைர்

எந்தவொரு உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையும், நம்பகமானதாக – சுதந்திரமானதாக வெளிப்படைத் தன்மை கொண்டதாக, சர்வதேச சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளத் தக்கதாக இருக்க வேண்டும். இன்று வரை இலங்கை அரசு செயற்படுத்திய நல்லிணக்க ஆணைக்குழு உள்ளிட்ட எந்த

21 ஆம் பக்கம் பார்க்க

# 55



நேற்றைய மீட்புப் பணி

மன்னார்,ஜன 30
மன்னார் திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழி நேற்று மீண்டும் தோண்டப்பட்டபோது அதிலிருந்து மேலும் இரு மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

இவற்றுடன் சேர்த்து இதுவரை புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட மனித எலும்புக் கூடுகளின் எண்ணிக்கை 55 ஆக உயர்ந்துள்ளது.

21 ஆம் பக்கம் பார்க்க

## அரச அதிபர் - தளபதி மீள்குடியமர்வு குறித்துச் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன.30
யாழ்.மாவட்டத்தின் மீள்குடியமர்வு நடவடிக்கைகள் தொடர்பில் யாழ்.அரச அதிபருக்கும்,இராணுவக் கட்டளைத் தளபதிக்கும் இடையில் அடுத்த வாரம் சந்திப்பு ஒன்று இடம் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

யாழ்.மாவட்டத்தின் புதிய இராணுவத் தளபதியாக மேஜர்

21 ஆம் பக்கம் பார்க்க

# இலங்கைப் பயணத்தின் பின்னர் ஜெனிவா விரைகிறார் பிஸ்வால்

கொழும்பு, ஜன.30
இலங்கைக்கு நாளை வருகை தரும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால், இலங்கைப் பயணத்தை முடித்துக் கொண்டு பிரிட்டனுக்கும் பின்னர் ஜெனிவாவுக்கும் செல்லவுள்ளார் என



நிஷா தேசாய் பிஸ் வால்

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சர்வதேச விசாரணையைக் கோரவுள்ளதாக எச்சரித்துள்ள பிரிட்டனுக்கு, இலங்கை தொடர்பிலான தற்போதைய நிலைமைகளை உதவிச் செயலர்

21 ஆம் பக்கம் பார்க்க

# இடம்பெயர்ந்தோர் குறித்து ஜனாதிபதியும் செயலரும் முரண்பாடான கருத்துக்கள்

*யாழ்ப்பாணம், ஜன.29*
*இலங்கையில் இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பில், ஜனாதிபதியும், ஜனாதிபதியின் செயலாளரும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட வகையில் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.*

*இலங்கையில் அகதிகள் என்று எவருமே இல்லையென்றும் இடம்பெயர்ந்தவர்கள் அனைவரும் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர் எனவும் கடந்த 2012 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 25 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.*

*இந்நிலையில்,இடம்பெயர்ந்த 3 லட்சம் மக்களில் 2 லட்சத்து 50 ஆயிரம் பேர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர் எனவும் எஞ்சிய 50 ஆயிரம் பேர் மீளக்குடியமர்த்தப்பட வேண்டி*

21 ஆம் பக்கம் பார்க்க

# 25 ஆயிரம் வீடுகள் குடாநாட்டில் தேவை

யாழ்ப்பாணம், ஜன.30
யாழ்.மாவட்டத்தில் மூன்றாம் கட்ட இந்திய வீட்டுத் திட்டத்தில் 6 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளபோதும், இன்னமும் 25 ஆயிரத்துக்கும் அதிகமான வீடுகளுக்கான தேவை யாழ்ப்பாணத்தில் இருப்பதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் இந்திய அரசின் அனுசரணையுடன்,

21 ஆம் பக்கம் பார்க்க

# ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஜெனிவாவில் பதில் கூறும் நிலை

## *ஜனாதிபதி மஹிந்த சொல்கிறார்*

கொழும்பு, ஜன.30
போர் முடிவடைந்த பின்னர் இலங்கை பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து வருவதாகத் தெரிவித்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை ஜெனிவாவுக்குப் பதிலளிக்க வேண்டிய நிலையில் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று மாலை புதிய விளையாட்டுத் திடலைத் திறந்து வைத்த பின்னர் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார்.

போர் முடிவடைந்த பின்னர் இலங்கை பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து வரு

21 ஆம் பக்கம் பார்க்க

# ஜெனிவா செல்வதை தவிர்த்தார் அனந்தி

யாழ்ப்பாணம், ஜன.30
பல்வேறு சிக்கல்கள் காரணமாக எதிர்வரும் ஐ.நா மனித உரிமைகள் கூட்டத் தொடருக்குச் செல்வதைத் தான் தவிர்த்துக் கொள்வதாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் அமர்வு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. இதன் போது ஜெனிவாவுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களும் செல்லவேண்டும் என்ற பிரேரணையை

21 ஆம் பக்கம் பார்க்க

# இந்திய வீடு வழங்கலில் மோசடியென வவுனியாவில் மக்கள் ஆர்ப்பாட்டம்

வவுனியா,ஜன 30
இந்திய வீட்டுத் திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவின் போது மோசடிகள் இடம்பெற்றுள்ளதாகக் குற்றம் சாட்டி வீட்டுத் திட்டத்தில் புறக்கணிக்கப்பட்ட கிராமங்களின் மக்கள் நேற்று வவுனியாவில் பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போரினால் இடம்பெயர்ந்து வவுனியாவில் ஓமந்தை, சேமமடு, கற்பகபுரம், மற்றும் ஏனைய இடங்களில் தற்காலி

21 ஆம் பக்கம் பார்க்க



வவுனியாவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள்

# இந்தியக் குழு யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஜன.30
இந்திய அரசின் நிதியுதவியில் வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சின் விசேட செயலாளர் சுஜாதா மேத்தா தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்தனர்.

இந்திய அரசின் நிதியுதவியில் வடபகுதியில் வீட்டுத் திட்டம், கைத்தொழில் பேட்டை உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தித்

21 ஆம் பக்கம் பார்க்க

# புல்மோட்டை மீனவர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்

## *களப்புத் தொழில் தடையை நீக்கக்கோரி*

மூதூர்,ஜன 30
திருகோணமலை புல்மோட்டையில் களப்புத் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் பாரம்பரிய மீன்பிடி முறை மூலம் கொக்கிளாய் களப்புப் பிரதேசத்தில் தொழில் செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளமையைக் கண்டித்துக் கவனயீர்ப்புப் போராட்டத்தை நேற்று ஆரம்பித்தனர்.

புல்மோட்டையில் உள்ள திருமலைச் சந்தி என்னும் இடத்தில் நேற்று ஆரம்பமான இந்

21 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜே.வி.பியின் புதிய தலைவர் ரில்வின்?

கொழும்பு,ஜன.30

ஜே.வி.பி. கட்சியின் புதிய தலைவராக கட்சியின் செயலரான ரில்வின் சில்வா நியமிக்கப்படுவதற்கு அதிக வாய்ப்புக்கள் இருக்கின்றன என கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதற்கமைய, ரில்வின் சில்வாவுக்குப் பதிலாக செயலர் பதவி தொடர்பாக அந்தக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்படக்கூடும் என்றும் கட்சியின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எனினும் எதிர்வரும் 2 ஆம் திகதி கூடவுள்ள கட்சியின் பொது மாநாட்டில் ஜே.வி.பி. கட்சியில் பல மாற்றங்கள் இடம்பெறக்கூடும் என்று தெரியவந்துள்ளது.



ரில்வின் சில்வா

அதன்போது கட்சியின் அரசியல் குழு மற்றும் மத்திய செயற்குழு தொடர்பாக நியமிக்கப்படும் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் யோசனைகள் உள்ளன என்று கட்சி வட்டராங்கள் தெரிவித்தன. (ச-22)

# 200 சிங்கள குடும்பங்களுக்கு மணலாறில் இந்திய வீடுகள்

## தமிழ் மக்களுக்கு எதுவுமில்லை எனக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன.30

மணலாறு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சாளம்பைக் குளம் கிராமத்தில் குடியேற்றப் பட்டுள்ள சிங்களக் குடும்பங்கள் 200 பேருக்கு இந்திய வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டுள்ள நிலையில், அங்கு மீளக்குடியமர்ந்துள்ள தமிழ் மக்களுக்கு எந்தவொரு வீட்டுத் திட்டங்களும் வழங்கப்படவில்லையென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடக்கு கிழக்கு மாகாணத்தின் எல்லைக் கிராமமான தென்னமரவாடிக்கு அருகில் முல்லைத்தீவு மாவட்டத்தின் மணலாறு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சாளம்பைக்குளம் கிராமம் அமைந்துள்ளது. கிராமத்தின் பெயரும் தற்போது அலம்பவேவ என்று மாற்றம் செய்யப் பட்டுள்ளது.

**சிங்கள குடியேற்றம்**

தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்து வந்த அந்தக் கிராமத்தில் தற்போது, சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். அவர்களில் 200 இற்கும் மேற்பட்டோருக்கு இந்திய வீட்டுத்திட்டம்வழங்கப்பட்டுள்ளது. அதற்கு அருகாமையில் உள்ள இன்னொரு கிராமத்திலும் குடியேற்றம் நடைபெறுவதற்கு ஏதுவாக சிறிய சிறிய கொட்டில்கள் போடப்பட்டுள்ளன.

கடந்த 2011 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தின் இறுதிப் பகுதியில் குறித்த கிராமத்தில் தமிழ் மக்கள் மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். அன்றிலிருந்து தாம் தற்காலிகக்கொட்டில்களிலேயே வசித்து வருவதாகத் தெரிவித்த மக்கள், தமக்கு இன்னமும் மீள்குடியேற்றக் கொடுப்பனவான 25 ஆயிரம் ரூபாவும் முழுமையாக வழங்கப்படவில்லை என்று கூறினர்.

**உதவிகள் இல்லை**

ஆரம்பத்தில் மீளக்குடியமர்ந்த 85 குடும்பங்களுக்கு மட்டும் 6 மாத கால நிவாரணம் வழங்கப்பட்டபோதும் ஏனையவர்களுக்கு அவை வழங்கப்படவில்லை. தற்போது சுமார் 150 தமிழ்க் குடும்பங்கள் வரை அங்கு வசித்து வருகின்றன. அந்த கிராமத்தைச் சொந்த இடமாகக் கொண்ட குடும்பங்கள் அங்கு வந்து மீளக்குடியமர்வதற்குத் தயாராக உள்ளபோதும், உதவிகள் எதுவும் வழங்கப்படாமையினால் அவர்கள் பின்னடித்து வருகின்றனர். எனவே அந்த மக்களுக்கு உரிய வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் - என்றார். (து-5)

# வவுனியா பாடசாலைகளுக்கு குடிதண்ணீர் சுத்திகரிப்பு உபகரணம்

வவுனியா, ஜன.30

வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகளுக்கு குடி தண்ணீர் சுத்திகரிப்பு உப கரணம் வழங்க கல்வித் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

பாடசாலைகளில் குழாய் கிணறு மற்றும் திறந்த வெளிக் கிணறுகள் என்பவற்றில் உள்ள சுகாதார ரீதியான பிரச்சினைகளை இனங்காணும் பொருட்டு சகல பாடசாலை களுக்கும் இந்தக் குடிதண்ணீர் சுத்திகரிப்பு உபகரணம் வழங் கப்படவுள்ளது.

ஒவ்வொரு பாடசாலைகளிலும் உள்ள கிணற்று நீர் பரிசோதிக்கப்படவுள்ளன. எனவே தெற்கு வல யத்துக்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் அரை லீற்றர் தண்ணீரைப் போத்தலில் அடைத்து எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்பாகக் கோட்டக் கல்விப் பணிமனையில் ஒப்படைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராசா அறிவித்துள்ளார். (து-400-402)

# தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களை விசாரணைக்குட்படுத்தத் திட்டம்

## பாதுகாப்பு அமைச்சு திரைமறைவில் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன.30

இலங்கை அரசுக்கு எதிராகச் சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கு ஆதரவு திரட்டப் போவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பகிரங்கமாக அறிவித்துள்ள நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை பாதுகாப்பு அமைச்சு விசாரணைக்கு உட்படுத்தப்போவதாகவும், கடந்த காலத்தில் கூட்டமைப்புக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான உறவு குறித்து விசாரணை மேற்கொள்ளப் போவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாக, கொழும்பிலிருந்து வெளியாகும் ஐலண்ட் ஆங்கில ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

**ஏகப்பிரதிநிதிகளுக்கான அங்கீகாரம்**

'விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக அரசியல் அங்கீ காரம் அளிக்கும் வகையில், 2001 இன் பிற்பகுதி தொடக்கம் விடுதலைப் புலிகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட நெருக்கமான உறவை மையப்படுத்தியே இந்த விசாரணை நடத்தப் படவுள்ளது.

இந்த விசாரணையின் முடிவுகளின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவுள்ளது.

போரின்போது தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் புலி ஆதரவுச் செயற்பாடுகள் குறித்து, சர்வதேசச் சமூகத்துக்குத் தகவல் வழங்கப்படும்.

**மூத்த உறுப்பினர்களை விசாரிப்போம்**

நாடாளு மன்றத்திலும், மாகாண சபைகளிலும் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த உறுப்பினர்களை நாம் விசாரிக்க உத்தேசித்துள் ளோம்.

2006 நடுப்பகுதியில், போருக்கு இட்டுச் சென்ற விடுதலைப் புலிகளின் தந்திரத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எத்தகைய செல்வாக்குச் செலுத்தியது என்பது குறித்து அவர்களிடம் விசாரிப்பதே எமது நோக்கமாக உள்ளது என்று அந்த அதிகாரி தெரிவித்தாக ஆங்கில ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

**ஆதாரங்கள் உண்டு**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரங்கள் உள்ளதா என்ற கேள்வியைக் குறித்த ஆங்கில ஊடகம் அவரிடம் எழுப்பியுள்ளது. அதற்குப் பதிலளித்த பாதுகாப்பு அமைச்சின் மூத்த அதிகாரி,

2001 நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர், ஐரோப்பிய ஒன்றியக் கண் காணிப்பாளர்கள் குழு வெளியிட்ட அறிக்கையில், வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிக ஆசனங்களை வெற்றிகொள்வதற்கு விடுதலைப் புலிகள் பின் புலத்தில் இருந்தனர் என்று கூறப் பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் சிறுவர் போராளி கள் பயிற்சி முடித்து வெளியேறும் நிகழ் வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த பிரதிநிதிகள் சிலர் கலந்து கொண் டுள்ளனர். அது பற்றிய ஒளிப்பட ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன.

***தேர்தல் புறக்கணிப்பு***

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் உத்தர வுக்கமைய, தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு தமிழ் மக்களிடம் கோரிய சூழ்நிலை குறித்தும் அவர்களிடம் நாம் விசாரணை நடத்தவுள்ளோம்.

அவர்கள் இந்த அறிவிப்பை 2005 ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆம் திகதி கிளிநொச்சியில் வைத்து வெளியிட்டி ருந்தனர்.

2001.2004 நாடாளுமன்றத் தேர்தல்களில் விடுதலைப் புலிகளுடன் நெருக்கமாகப் பணியாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, 2010 ஜனாதிபதித் தேர்தலின் போது, முன்னாள் இராணுவத் தளபதி ச[illegible] பொன்சேகாவுக்கு ஆதரவாகச் செயற்பட்டது என்றும் குறித்த அதிகாரி தெரிவித்ததாக, ஆங்கில ஊடகம் குறிப்பிட்டுள்ளது. (து-5)

# அரச பண்ணைக் காணியில் பஸ் நிலையம் வேண்டாம்

## வவுனியா வரியிறுப்பாளர்கள் முதலமைச்சருக்கு கடிதம்

வவுனியா, ஜன.30

வவுனியா - யாழ். வீதியில் உள்ள அரச பண்ணைக்குரிய காணியில் அமையவிருக்கும் தனியார் பஸ் நிலையத்துக்கான வேலைகளை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கம் வடக்கு முதலமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு மாகாண முதலமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு கோரப் பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த சில தினங்களாக தனியார் பஸ் தரிப்பு நிலையத்துக்கென்று மேற்கூறப்பட்ட இடத்தில் உள்ள அரச காணியில் பல கட்டட வேலைகள் முன்னெடுத்துச் செல்லப்படுவதையிட்டு வரியிறுப்பாளர் சங்கமாகிய நாம் நகரசபை செயலாளரிடமும் நகர அபிவிருத்தி அதிகார சபையுடனும் தொடர்புகொண்ட போது, இது தொடர்பாக தங்களுக்கு எதுவித அறிவித்தல்களும் தரப்படவில்லை எனவும் இது கொழும்பிலிருந்து அதிகார மட்டத்தினால் செய்யப்படும் நடவடிக்கை என்றும் தெரிவிக்கின்றனர். இதுதொடர்பாக வவுனியா மக்கள் பெரும் குழப்பமடைந்துள்ளார்கள்.

இந்தபஸ் தரிப்பு நிலையமானது அரச பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து ஒரு கிலோமீற்றர் தொலைவில் இருப்பதால் பொது மக்கள் மிகவும் அசௌகரியங்களை எதிர்நோக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளாக நேரிடும்.

குறிக்கப்பட்ட காணித் தொகுதியானது அதன் ஒருபக்க எல்லையாக காமினி மகாவித்தியாலய பாடசாலையை உள்ளடக்கியுள்ளதால் அங்கு கல்வி கற்கும் மாணவர்களின் கல்விக்கு பெரும் குந்தகமாக அமையலாம்.

குறிப்பிட்ட காணியை சுற்றியும், எதிர் திசையிலும் மக்கள் செறிவாக வாழ்கின்றார்கள். எனவே அமையப்போகும் இந்த பஸ் தரிப்பிடம் அவர்களுக்கு சுற்றாடல் பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. இதன் மூலம் கிராமப்புற விவசாயிகள் தாங்கள் உள்ளூர் உற்பத்திப் பொருள்களை சந்தைக்கு எடுத்துசெல்லுதல் மிகவும் சிரமமாக இருப்பதுடன் அவர் கள் அந்த இடத்திலிருந்து இன்னுமோர் வாகன ஒழுங்கு செய்ய வேண்டிய நிலை உருவாகும்.

எனவே தற்போது உள்ள அரச பஸ் தரிப்பிடத்துக்கு பின்னால் உள்ள அரச ஊழியர் விடுதிகளை (உள்வட்ட வீதி) குறிப்பிட்ட இடத்துக்கு மாற்றி அமைத்து விட்டு உள்வட்ட வீதியில் உள்ள காணியில் தனியார் பஸ் தரிப்பு நிலையத்தை அமைப்பது சாலச் சிறந்தது என நாம் கருதுகின்றோம்.

எனவே தாங்கள் தயவு கூர்ந்து உரிய நடவடிக்கைகளை எடுத்து ஓர் நல்ல முடிவை தருவீர்கள் என வேண்டி நிற்கின்றோம் என்றுள்ளது. (து-400)

# மந்திகை காவலரண் மூடப்பட்டது

வடமராட்சி, ஜன. 30

மந்திகைச் சந்தியில் இருந்து வந்த இராணுவக் காவலரண் மூடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலைக்கு அருகில் சாவகச்சேரி பருத்தித்துறை வீதி, வல்லிபுரம் மந்திகை வீதிச் சந்தியில் 1987ஆம் ஆண்டு லிபறேசன் ஒப்பரேசன் காலம் தொட்டு இராணுவ முகாமாகவும் காவலரணாகவும் இந்த இடம் இருந்து வந்தது.

இடையில் வந்திருந்த இந்திய இராணு வமும் இங்கு முகாம் அமைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

காவலரணைமுற்றாக அப்புறப்படுத்திய படையினர் காவரண் இருந்த வீட்டை உரிமையாளரிடம் கையளித்துள்ளனர். (து-173)

# மேல், தென் மாகாண சபைகளுக்கு இன்று முதல் வேட்பு மனுக்கள் ஏற்பு

## விசேட பாதுகாப்பு வழங்கவும் ஏற்பாடு

கொழும்பு, ஜன.30

மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல்களுக்கான வேட்புமனுக்கள் இன்று வியாழக்கிழமை முதல் கையேற்கப்பட உள்ளதோடு இதனையொட்டி விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தேர்தல் திணைக் களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப் பிரிய பொலிஸ் உயரதிகாரிக ளுடன் கலந்துரையாடியுள்ளதோடு வேட்பு மனு கையேற்கும் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை மற்றும்ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகங்களுக்கு அருகில் விசேட பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு மாகாண சபைகளுக்குமான வேட்பு மனுக்கள் இன்று முதல் பெப்ரவரி 6 ஆம் திகதி வரை ஏற்கப்பட உள்ளதோடு கட்டுப்பணம் செலுத்துவதற்கு 5 ஆம் திகதி வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை தேர்தலுக்கான பாதுகாப்பு மற்றும் வேட்புமனு ஏற்கும் மாவட்ட செயலகங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து பொலிஸ் பொறுப்பதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் கூறியுள்ளது.

ஊர்வலம் சென்று வேட்பு மனு தாக்கல் செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ள தோடு வேட்பு மனுதாக்கல் முடிவு திகதியில் இருந்து ஒரு வாரம் வரை இந்த தடை இருக்கும்.

வேட்புமனு தாக்கல் செய்வதற்கு கட்சி செயலர் அல்லது தலைவருடன் முதன்மை வேட்பாளர் அடங்கலான சிலருக்கு மட்டுமே அனுமதி வழங்கப் படவுள்ளது என்று தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தாருங்கள்

*மருதங்கேணி பிரதேச செயலருக்கு மனு*

வடமராட்சி, ஜன.30

அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்து வரும் அம்பன் கிழக்கு கிராம மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்து தருமாறு வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி பிரதேச செயலருக்கு கையளிக்கப்பட்ட மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பன் கிழக்கு சிவனொளி சனசமூக நிலையம், விளையாட்டுக் கழகம் என்பன இணைந்து வழங்கிய குறித்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அம்பன் கிழக்கு கிராம மானது வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் முதலாவதாக மீள்குடியேற்றப்பட்டு மூன்று வருடங்கள் கடந்த நிலையில் 14 மலசலகூடங்களும், பாது காப்பற்ற பத்து வீடுகளும் படையினரால் அமைத்து தரப்பட்டுள்ளன.

வடமராட்சி கிழக்கில் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடும் போது எமது கிராமம் அபிவிருத்தியில் புறக்கணிக்கப்படுவதாக உணர்கின்றோம். சைக்கிளில் கூடச் செல்ல முடியாத வீதிகளுடனும், பாதுகாப்பற்ற வீடுகளிலுமே எந்தவித அடிப் படை வசதிகளுமின்றி வாழ்ந்து வருகின்றோம்.

> “ ”
> 14 மலசலகூடங்களும், பாது காப்பற்ற பத்து வீடுகளும் படையினரால் அமைத்து தரப்பட்டுள்ளன.

எமது அடிப்படை வசதியீனங்கள் தொடர்பில் பல தடவைகள் தங்களுக்கு கடிதம் மூலமும் நேரடியாகவும் கோரிக்கை விடுத்தும் தாங்கள் எந்தவித நடவடிக்கைகளையும் இது வரை மேற்கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வீட்டு வசதிகள், மலசலகூட வசதிகள், குடியிருப்பு வீதிகள், மின்சாரம், கடற்கரைக்குச் செல்லும் வீதி அமைத்தல், கிணற்று வசதிகள், விளையாட்டு மைதானம் மற்றும் வாழ்வாதார உதவிகள் ஆகிய அடிப்படைத் தேவையான 8 கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தருமாறு வேண்டுகின்றோம்- என்றுள்ளது. (வ-173)

# அம்பன் கிழக்கு கிராம மக்கள் நேற்று கவனவீர்ப்பு போர்

வடமராட்சி, ஜன.30

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் முதன் முதலாக மீள் குடியேற்றம் இடம்பெற்ற அம்பன் கிராமத்தில் இதுவரை எந்தவிதமான அபிவிருத்திகளும் மேற்கொள்ளப்படாததைக் கண்டித்து அந்தக் கிராம மக்கள் மருதங்கேணி பிரதேச செயலக குடத்தனை உப அலுவலகம் முன்பாக நேற்றுக் காலை 10.45 மணி முதல் 11.45 மணி வரை கவனவீர்ப்புப் போராட்டத் தில் ஈடுபட்டனர்.



கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள்.

அம்பன் கிழக்கு சிவனொளி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டோர் சுலோக அட்டைகள், பதாகை என்பவற்றைத் தாங்கியிருந்தனர்.

அடிப்படை வசதிகள் ஏதுமின்றி வாழ்க்கையைத் தொடர முடியாத நிலையில் மீள்குடியமர்த்தப்பட்ட அம்பன் கிழக்கு மக்களின் கவனவீர்ப்புப் போராட்டம் என்று பதாகையிலும் "களிமண் வீதியில் கூட நடப்பதற்கு எங்களுக்குத் தகுதி இல்லையா, அம்பன் கிழக்கு அபிவிருத்தி தவிர்க்கப்பட்ட பிரதேசமா," "குப்பி விளக்குகளில் தானா எமது வாழ்க்கை", அம்பன் கிழக்கு அபிவிருத்தி விடயத்தில் பிரதேச சபை அலட்சியமா, சோம்பலா நித்திரையா அல்லது செத்துவிட்டதா" ஆகிய வாசகங்கள் சுலோக அட்டைகளிலும் பொறிக்கப்பட்டிருந்தன.

வெயில், மப்பு மந்தாரத்துக்கு மத்தியில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தோரின் பிரதிநிதிகள் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் கே.கணேசமூர்த்தியைச் சந்தித்து மனு ஒன்றைக் கையளித்து இது தொடர்பில் விவரமாக எடுத்துக் கூறினர். குறித்த பகுதி அபிவிருத்தி தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் நிர்வாக உத்தியோகத்தர் விளக்கினார்.

இறுதியில் போராட்டக்காரர் மத்தியில் நிர்வாக உத்தியோகத்தர் கருத்துத் தெரிவிக்கையில்;

அபிவிருத்தி தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பது குறித்து கலந்துரையாடல் ஒன்று ஏற்படுத்தப்பட்டு பிரதேச செயலாளரால் உங்களுக்கு விரைவில் தெளிவுபடுத்தப்படும். பிரதேச செயலகத்தால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன- என்றார். (வ-173)

# ஆர்வத்துடன் ஆதனவரி செலுத்தும் வரியிறுப்பாளர்

தென்மராட்சி, ஜன.30

சாவகச்சேரி நகரசபையில் இந்த வருடத்துக்குரிய ஆதன வரியைச் செலுத்த பெருமளவு வரியிறுப்பாளர்கள் குவிந்ததால் ஆதனவரிப் பிரிவில் கடமையாற்றுவோர் சிரமம் பாராது வரியிறுப்பாளர்களின் தேவையை நிறைவு செய்தனர்.

நாளை வரை இந்த வருடத்துக்குரிய ஆதனவரியைச் செலுத்துவோருக்கு 10 வீத கழிவு வழங்கப்படும் என்பதால் மக்கள் வெள்ளம் அலை மோதியது.

ஆதனவரி பிரிவு கணினிமய சேவைகள் என்பதால் உடனுக்குடன் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு வருகிறது. வட்டார ரீதியாக கணினிகளில் பதிவு மேற்கொள்ளப்படுவதால் மக்கள் முண்டியடித்து பணம் செலுத்துவதைக் காணமுடிகிறது.

இதேவேளை செலுத்தப்படும் ஆதனவரிக்கு கழிவு வழங்குவது நாளையுடன் முடிவடையும் நிலையில் பெருமளவானோர் வரி செலுத்துவதால் வரியிறுப்பாளர் நலன்கருதி ஒருவார கால நீடிப்பு வழங்குமாறு கோரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# வடக்கு மாணவர்களின் உயர்தர பெறுபேற்றை மேம்படுத்தத் திட்டம்

அச்சுவேலி, ஜன.30

வடக்கு மாகாண மாணவர்களின் ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சை அடைவு மட்டத்தை இந்த வருடம் மேல் நிலைப் படுத்துவதற்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சும் மாகாண கல்வித் திணைக்களமும் விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளன.

ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புகள் உள்ள பாடசாலைகள் தோறும் நேரடியாகப் பயணம் செய்து வகுப்பறைச் செயற்பாடுகள் மற்றும் பரீட்சைக்கு மாணவர்களை தயார்படுத்தும் நடைமுறைகள் தொடர்பாக விசேட கண்காணிப்பு நடவடிக்கையையும் மேற்கொள்ளவுள்ளன.

வடக்கு மாகாண மட்டத்தில் முன்னோடிப் பரீட்சையை நடத்தி விடைத்தாள் மதிப்பீடு மற்றும் 'இசற் புள்ளி' என்பனவற்றை கணிப்பீடு செய்து பொதுப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களை மேலதிக தயார்படுத்தலுக்கு உள்ளாக்குவதோடு, தேசிய ரீதியில் வடக்கு மாகாணத்தின் தர நிலையை மேல்நிலைப்படுத்துவதற்குதீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் கடந்தவாரம் நடைபெற்றது. கலந்துரையாடலில் வடக்கு மாகாண கல்வி அமைச்சு அதிகாரிகள், மாகாணக் கல்வித் திணைக்கள கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், உயர்தர வகுப்பு நடைபெறும் பாடசாலைகளின் அதிபர்கள், தனியார் கல்வி நிலையங்களின் நிர்வாகிகள் பாடத்துறை ரீதியிலான முன் னணி ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தால் நடத்தப்படும் பரீட்சைக்குப் புறம்பாக வடக்கு மாகாண மட்டத்தில் ஜி.சீ.ஈ. உயர்தர முன்னோடிப் பரீட்சை நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-11)

# போர் வடுக்கள் நீங்கும் வேளை இன ஒற்றுமை மிகவும் அவசியம்

*யாழ். அரச அதிபர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜனவரி, 30

போர் வடுக்கள் விலகிச் செல்லும் இத்தருணத்தில் இனங்களுக்கு இடையே ஒருமுகப் படுத்தப்பட்ட ஒற்றுமை மேம்பாடு அவசியமாகின்றது. இது தொடர்பில் தேசிய ஒற்றுமை மற்றும் சமூக ஒற்றுமைப் பாட்டு அமைச்சினூடாக பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும் என்று தெரிவித்தார் யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம்.

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவால் அரச கரும மொழிக் கொள்கை, அதன் பாவனை மற்றும் இனங்களுக்கிடையான நல்லிணக்கம் என்ற தலைப்பில் நடத்தப்பட்ட வட மாகாணத்தின் அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான விவாதப் போட்டித் தொடரின் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. அங்கு கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்:-

கடந்த காலங்களில் ஏற்பட்ட முரண்பாட்டுக்கு முக்கிய காரணிகளாக இரு விடயங்களைக் குறிப்பிட முடியும். அவை தேசிய மொழிக் கொள்கை மற்றும் சமூக ஒருமைப்பாடு ஆகியனவே ஆகும். மொழியை வளர்த்துக் கொண்டால் ஒருமைப்பாடு ஏற்படும். அதே மொழி மூலம் சமாதானமாக வாழமுடியும். இதற்காகவே இந்த அமைச்சால் பல திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

குறித்த ஒரு மொழியை குறித்த மற்றொரு இனத்தின் மீது திணிக்க முடியாது. மொழியை விருப்பத்தின் அடிப்படையில் பிரயோகிக்க முற்படும்போதே அது பூரண திருப்தி அளிக்கும். நாடளாவிய ரீதியில் விருப்பத்தின் அடிப்படையில் மொழியைப் பிரயோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எமது நாட்டைப் பொறுத்தவரை தமிழ்மொழியும் சிங்களமும் அரசகரும மொழிகள். அதேவேளை ஆங்கிலம் இணைப்பு மொழியாகவே காணப்படுகின்றது.


அமைச்சானது அரச கரும மொழித்திணைக்களம், அரச கரும மொழி ஆணைக்குழு மற்றும் தேசிய மொழிக்கருவி பயிற்சி நிறுவனம் ஆகிய மூன்று அடிப்படை நிறுவனங்களை அமைத்துள்ளது. இவற்றின் மூலமாகவும் இன முரண்பாடுகள் தீர்க்கப்படுகின்றன.

இனங்களுக்கு இடையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த மனப்பாங்கு அவசியமாகின்றது. அதை எம்மிடையே வளர்த்துக்கொள்ள வேண்டும். இதுவே இன நல்லுறவுக்கு முக்கியமாகின்றது.

சிறுவர்கள் மனதிலேயே இன நல்லுறவைப் பேணுவதற்கான விடயங்களை ஏற்படுத்தப்பட வேண்டும். பாடசாலையில் மொழி மற்றும் மதம் என்ற வேறுபாடு நிலவுவது தெரிந்த விடயம். இவைகூட இன நல்லுறவில் விரிசலை ஏற்படுத்த வல்லவை. நாட்டிலுள்ள மக்களுக்கு இலங்கை விழுமியங்களை மதித்தல், சூழலைப் பாதுகாத்தல் போன்ற கடமைகள் முக்கியமானவையாக உள்ளன. யாருக்கும் இங்கு தனித்தனியான இடங்கள் இல்லை. யாரும் எங்கும் சென்று பணியாற்றலாம்.

வாய்ப்பேச்சால் எதையும் சாதிக்க முடியாது என்பதை அமைச்சு நன்றாக அறிந்தே அவற்றைச் செயற்படுத்துகின்றது. இவ்வாறான செயற்றிட்டங்கள் மூலம் ஏனைய கலாசாரங்களை அறிந்து கொள்ள முடியும். மும்மொழிப் பாவனையை மேம்படுத்த முடியும்-என்றார். (வ-10)

# புனரமைப்புப் பணியின்போது வெடிக்காத நிலையில் ஷெல் மீட்பு



வெடிக்காத நிலையில் ஷெல்

தென்மராட்சி.ஜன.30

சாவகச்சேரி அஞ்சலக வீதியில் படையினர் வெளியேறிய வீடுகளில் புனரமைப்புப் பணியில் ஈடுபட்டவர்கள் வெடிக்காத நிலையில் ஷெல் இருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர். படையினரால் பயன்படுத்தப்பட்ட குடியிருப்பின் உரிமையாளர் வேலி அமைப்பதற்காக நேற்று முன்தினம் குழிதோண்டிய போதே வெடிக்காத நிலையில் ஷெல் இருப்பது தெரியவந்தது. இது தொடர்பாக படைப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை சின்னராசா



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப் பிட மாகவும் கொண்ட செல்லத்துரை சின்னராசா நேற்று (29.01.2014) புதன் கிழமை கால மானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சின்னத்தம்பி புலவர் வீதி,
இணுவில் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கந்தையா வல்லிபுரம்



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் ஸ்ரீ பரமானந்தா சிறுவர் முதியோர் இல்லத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வல்லிபுரம் நேற்று (29.01.2014) புதன் கிழமை மாலை 05.00 மணியளவில் கால மாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2014) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் ஸ்ரீபரமானந்தா இல்லத்தில் நடைபெற்று மு.ப.11.00 மணியளவில் பூத வுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறி வித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீ பரமானந்தா
சிறுவர், முதியோர் இல்லம்.
வ்திரி, கரவெட்டி.

தகவல்:
தர்மகர்த்தா சபையினர்.

## மரண அறிவித்தல்

### அருட்சகோதரி மேரி கொலம்பா சிங்கராயர் - தி.கு



பெரிய விளானைப் பிறப்பிட மாகக் கொண்டவரும், யாழ். திருக் குடும்ப சபையைச் சேர்ந்தவரு மான அருட்சகோதரி மேரி கொலம்பா சிங்கராயர் நேற்று (29.01.2014) புதன்கிழமை இறைபதம் இணைந்து விட்டார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.01.2014) வியாழக்கிழமை பி.ப 3.00 மணிக்கு இளவாலை திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர். இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள், உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

121, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (44152) (10)

தகவல்:
அருட் சகோதரி கிறிஸ்ரா மரியதாஸ்
மாகாணத் தலைவி.

# VACANCIES

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the under mentioned posts in the Sports Science Unit up to 10.02.2014

Visiting Lecturer/Instructor in **Hockey**

**Rate of payment**

| **Post** | **Rate** |
|---|---|
| Visiting Lecturer | Rs.300/- per hour |
| Visiting Instructor | Rs.150/- per hour |

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, on a payment of Rs.100/- per form at the People's Bank, University Branch or at the Shroff's counter of the University of Jaffna. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with **a self –addressed stamped envelope** 23x10 c.m. in size.

Those who wish to apply **for more than one post/ field** should make **separate applications.**

Applicants from the University System/Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Heads of respective Institutions. Applications received after the closing date will be rejected without intimation. Only those applicants who possess the qualifications and experience will be called for an interview.

**Registrar**
**2014-01-29**

(C/11338)(2.6)

## அலங்கார உற்சவம்

வண்ணை வெள்ளாந்தெரு நல்ல தண்ணீர்க் கிணற்றடி ஸ்ரீ ஞான வைரவர் ஆலய அலங்கார உற்ச வம் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது. தினமும் மாலை 5.30 மணிக்கு விசேட அபிஷேக பூசைகளைத் தொடர்ந்து வசந்த மண்டப பூசை நடைபெற்று சுவாமி உள் வீதி வருதல் இடம் பெறும்.

இறுதி நாளான பெப்ரவரி 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு 108 சங்கா பிஷேகம், சொற்பொழிவு, மாகேசுர பூசை ஆகியன இடம்பெறும். அன்று மாலை நடை பெறும் பூசையை யடுத்து திருவூஞ்சலும் சுவாமி உள்வீதியுலாவும் இடம்பெறவுள்ளன. (த)

## கசிப்பு மற்றும் சாராயத்தை விற்றவர்களுக்கு தண்டம்

கிளிநொச்சிப் பகுதியில் கசிப்பு மற்றும் அனுமதிப் பத்திரம் இல்லாது அரச சீல் சாராயத்தை விற் பனை செய்தவர்களு க்கு கிளிநொச்சி மாவ ட்ட நீதிவான் நீதிமன்றத் தினால் 85 ஆயிரம் ரூபா தண்டமாக விதிக் கப்பட்டுள்ளது.

கைது செய்யப் பட்ட வர்கள் 27 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதி மன்றத் தில் நீதிவான் எம்.ஐ. வகாப்தீன் முன் னிலை யில் முன்னிலைப் படுத்தப்பட்டனர். இவர் களுக்கே தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இராமநாத புரம் பகுதியில் 750 மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்த ஒருவ ருக்கும், அதேநாள் மருதநகர்ப் பகுதியில் அதே அளவு கசிப்பை வைத்திருந்த ஒருவ ருக்கும் பன்னாங் கண் டிப் பகுதியில்750மில்லி லீற்றர் கசிப்பு வைத்தி ருந்த ஒருவருக்கும் தலா 15 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட் டது.

அத்துடன் மருதநகர்ப் பகுதியில் அனுமதிப் பத்திரம் இல்லாமல் அரச சீல் சாராயம் விற் பனை செய்த ஒருவ ருக்கு 40 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக் கப்பட்டது. (க-55)

## கூட்டுறவுச் சங்கங்களுக்கு இரவு நேரக் காவலாளிகள்

*திருட்டுகளை அடுத்து நடவடிக்கை*

யாழ். குடாநாட்டில் உள்ள சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்க ளின் கிளை விற்பனை நிலையங் களைப் பாதுகாக்கும் பொருட்டு இரவுக் காவலாளிகளை உடனடி யாக நியமிக்குமாறு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் சங்க நிர்வாகிகளைக் கோரியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரி விக்கையில்;

குடாநாட்டின் பல இடங்களிலும் சங்கக் கிளை நிலையங்கள் இரவு வேளைகளில்திருடர்களால் உடைக் கப்பட்டுப் பெறுமதி வாய்ந்த பொருள்கள் சூறையாடப்படு கின்றன.

ஏற்கனவே நட்டத்தில் செயற்பட்டு வரும் சங்கங்கள் திருடர்களின் கைவரிசை காரணமாக மேலும் சிக்கலுக்குள் தள்ளப்பட்டுள்ளன.

எனவே சங்க விற்பனை நிலை யங்களைப் பாதுகாக்கும் வகையில் உடனடியாக இரவுக் காவலா ளிகளை நியமிக்குமாறு அறிவுறுத் தப்பட்டுள்ளது- என்றார்.

நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இரண்டு ' கோப்சிற்றி' நிலையங்கள் அடுத்தடுத்து உடைக் கப்பட்டு பொருள்கள் சூறையாடப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

(த-17)

## மரண அறிவித்தல்

### *கார்த்திகேசு சிவனேசன்*



*வண்ணார் பண்ணை மதவடி லேனை பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சிவநேசன் (29.01.2014) புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.*

*அன்னார் காலஞ் சென்றவர்களான கார்த்திகேசு - பரமேஸ்வரி தம்பதியரின் மகனும் தமிழ்ச்செல்வி அன்ரியின் அன்புக் கணவரும் ஹரி, மேனகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ் சென்றவர்களான கனகசபாபதி - அம்பிகை தம்பதியரின் மருமகனும், சிவதாசன், கணேஸ்வரி, ரூபாதேவி ஆகியோரின் சகோதரனும் காயத்திரி - சிவபாலன், காலஞ்சென்ற கதிர்காமநாதன் மற்றும் வாணி. காலஞ்சென்ற நிர்மலா, தேவமனோகரி, ஸ்ரீகரன், காலம் சென்ற ஸ்ரீதரன் ஆகியோரின் மைத்துனரும், மகேஸ்வரனின், சகலனும் ரவிசங்கர், விஜோஜா, நிருபன் சாம்பவி அன்பு மாமனாரும் தனஞ்ஜெயனின் பெரியப்பாவும் பிரசன்னா, பிரதீப் ஆகியோரின் சிறிய தகப்பனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (30.01.2014) வியாழக்கிழமை 24/1, சிவப்பிரகாசம் வீதி, வணணார்பண்ணை யாழ்ப் பாணத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 4.00 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.*


*இந்த அறிவித்தலை உற்றார், உறவிணர்கள்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

*ஐயனார் கோவிலடி,*
*21, சிவப்பிரகாசம் வீதி.*

*தகவல்:*
*சிவதாசன், பரன்,மகேஸ்வரன்*

## மரண அறிவித்தல்

### *மாணிக்கம் சுந்தரம்பிள்ளை*




குமரகோட்டம் கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் சுந்தரம்பிள்ளை (25.01.2014) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் -செல்லம்மா தம்பதியரின் அன்பு மக னும், காலஞ்சென்ற சின்னத்துரை -வள்ளிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மரு மகனும், சுபத்திரையின் அன்புக் கணவரும், ஏகா னந்தராஜாவின் (ஜேர் மனி) அன்புத் தந் தையும், சுபத்திராவின் அன்பு மாமனும், கார்த்தீபன், செந்தூரன், பிரணவன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற வர்களான கந்தையா- அன்னமுத்து, கனகலிங்கம், ஆச்சிமுத்து, இராசலிங்கம், அப்புதுதுரை, அன்னலட்சுமி மற்றும் தம்பிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோ தரனும், காலஞ்சென்ற சிவசாமி மற்றும் இராசமணி, காலஞ் சென்றவர்களான பரா சக்தி, சரஸ்வதி, மற்றும் மங்கையர்க்கரசி, பொன்னுச் சாமி, மகேஸ்வரி, மயில் வாகனம், நல்லலட்சுமி, தங்கம்மா, பூபதி, இராஜேஸ் வரி (ஓய்வு நிலை உப அதிபர்), சற்குணதேவி, காலஞ்சென்ற யோகராசா ஆகி யோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னார் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2014) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக் கிரி யைகளுக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல் லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
021 320 5364

## மரண அறிவித்தல்



### நீக்கிலாப்பிள்ளை செல்வரெத்தினம்

மண்டைத்தீவைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாக வும் கொண்ட நீக்கிலாப்பிள்ளை செல்வரெத்தினம் கடந்த 27.01.2014 திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நீக்கிலாப்பிள்ளை-சலமைப்பிள்ளை தம் பதியரின் பாசமிகு மகனும், றெஜினாவின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற கில்டா, கில்பேட் (லண்டன்), எமில்டா, சிமோல்டா, கிறிஷாந்தன் (பிரான்ஸ்), கியோ மார் (இத்தாலி), பதல்டா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சின்ராசா, சுயாத்தா, மெசியா, யூட்தாஸ், சிந்து, எட்மதேவன் ஆகியோரின் பாசமிகு மாமனும், ஜனிஸ், யசோ, அனுசியா, அபித்தா, அஜித்தா, தர்ஷன், தர்சினி, தர்சிபன், யூட்சினி, கவிதாஸ், கிஷானி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு ஆனைக்கோட்டை அவரது இல்லத் தில் இருந்து நல்லடக்கத்திற்காக மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்தில் காலை 9.00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, மண்டைதீவு புனித பேதுருவானவர் சேமக்காலையில் நல் லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3ஆம் வட்டாரம், மண்டைதீவு. (44154)(10)

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூவருக்கு அபராதம்

தென்மராட்சி, ஜன.30
கசிப்பு மற்றும் சாராயம் என்பவற்றை சட்டவிரோதமாக விற்பனைக்கு வைத்திருந்த மூவருக்கு 85 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
மிருசுவில் தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த ஒருவர் அனுமதிப் பத்திரமின்றி அரச சாராயம் விற்பனை செய்ததாக பொலிஸாரால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகையைச் செலுத்தத் தவறின் ஆறு மாதக்காலச் சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார்.
மீசாலை மேற்கைச் சேர்ந்த இருவர் சட்ட விரோத கசிப்பு வைத்திருந்ததாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான் ஒருவருக்கு 30 ஆயிரம் ரூபாவும் மற்றவருக்கு 25 ஆயிரம் ரூபாவும் அபராதம்விதித்தார். இதேவேளை - அனுமதிப் பத்திரமின்றி வாகனத்தில் மணல் ஏற்றி வந்த கச்சாயைச் சேர்ந்த ஒருவருக்கு எதிராக கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சாரதிக்கு 25 ஆயிரம் ரூபாஅபராதம் விதிக்கப்பட்டது (வ-9)

# சாவகச்சேரியை அண்மித்தது தண்டவாளம் அமைக்கும் பணி

தென்மராட்சி, ஜன.30
வடபகுதிக்கான ரயில் சேவை ஏப்ரல் மாதம் முதல் இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் பளையிலிருந்து ரயில் பாதை அமைக்கும் பணி துரிதகதியில் இடம்பெற்று வருகிறது. அந்த வகையில் பளையிலிருந்து தண்டவாளம் அமைக்கும் பணி சாவகச்சேரியை அண்மித்துள்ளது.
வவுனியா - ஓமந்தை வரையும் நடத்தப்பட்டு வந்த வட பகுதிக்கான ரயில் சேவை கடந்த செப்ரெம்பர் மாதம் 4 ஆம் திகதி ஜனாதிபதியால் கிளிநொச்சி வரை நீடித்து வைக்கப்பட்டது.
இந்தச் சேவையை மேலும் நீடிப்பதற்கு பளை வரையுள்ள 30 கிலோ மீற்றர் தூரம் வரையான வீதி வேலைகள் கடந்த நவம்பர் மாதம் முடிவடைந்த போதிலும், பளை, ஆனையிறவு, பரந்தன் ஆகிய ரயில் நிலையங்கள் அமைக்கும் பணிகள் துரிதமாகநடைபெற்று தற்போதுதான் முடிவடைந்துள் ளன.
பளை வரைக்குமான ரயில் சேவை பெப்ரவரி மாதம் நடை



துரிதகதியில் இடம்பெற்றுவரும் தண்டவாளம் அமைக்கும் பணிகள்

பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், பளையிலிருந்து தண்டவாளம் அமைக்கும் பணிகள் சுமார் 25 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள சாவகச்சேரி வரை நடைபெற்று வருகிறது.
பளைக்கும், சாவகச்சேரிக்கும் இடையில் உள்ள எழுதுமட்டுவாழ், மிருசுவில், கொடிகாமம், மீசாலை, சங்கத்தானை, சாவகச்சேரி ஆகிய இடங்களில் ரயில் நிலையங்கள் அமைக்கும் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.
சாவகச்சேரி, கொடிகாமம், மிரு சுவில் போன்ற ரயில் நிலையக் கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துள்ள போதிலும் மேடை அமைக்கும் பணிகள் மற்றும் இலத்திரனியல் சமிக்ஞை ஆகியவை பொருத்தும் பணிகள் இடம் பெற்று வருகின்றன. மார்ச் மாத இறுதிக்குள் யாழ்ப்பாணம் வரையான ரயில் பாதை அமைக்கும் பணிகள் முடிவடையலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# 787 பஸ் சேவை நிறுத்தம்

### *நகர்ப்புறப் பாடசாலைகளுக்குச் செல்வோர் சிரமம்*

யாழ்ப்பாணம்.ஜன. 30
யாழ்ப்பாணம் - மாதகலுக் கு இடையிலான சேவையில் ஈடுபட்ட 787 இலங்கைப் போக்கு வரத்துச் சபையின் பஸ் சேவை, இடை நிறுத்தப்பட்டுள்ளதால் நகர்ப்புறப் பாட சாலைகளுக்கு வருகை தரும் மாணவர்கள் போக்குவரத்தில் பெரும் இடையூறுகளைச் சந்தித்து வருகின்றனர்.
மாதகல், சித்தன்கேணி, சங்கானை, மற்றும் சண்டிலிப்பாய், மானிப்பாய் ஆகிய பகுதிகளில் இருந்து யாழ். நகர்ப்பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகளை நம்பி பருவகால பயணச் சீட்டுக்களைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.
இந்த நிலையில் 782 இலக்க பஸ்ஸில் காலை நேரத்தில் அதிகளவிலான பயணிகள் ஏறுவதால் பாடசாலை மாணவர்கள் அதனைத்தவிர்த்து வருகின்றனர். எனினும் 787 இலக்க பஸ் சேவையில் ஈடுபட்டபோது பாடசாலை மாணவர்களே குறித்த பஸ் சேவையைப் பயன்படுத்தி வந்தனர்.
தற்போது குறித்த பஸ் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதால் பருவகால பயணச்சீட்டை பெற்ற மாணவர்களும் தனியார் பஸ்களை நாட வேண்டி உள்ளது. அதனால் உரிய நேரத்துக்கு பாடசாலைக்குச் செல்லமுடியாத நிலைக்கு மாணவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.
இதனைவிடஅரச உத்தி யோகத்தர்களும் தனியார் நிறுவனங்களில் தொழில் புரிபவர்களும் தனியார் பஸ்களையே அதிகமாகப் பயன்படுத்த வேண்டியுள்ளது.
குறித்த சேவை நிறுத்தப்பட்டமை தொடர்பாக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ். சாலை முகாமையாளர் என். குலபாலசெல்வத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது;
குறித்த பஸ் சேவை ஆரம்பத்தில் இடம்பெற்றபோது போதியளவு பயணிகள் பயன்படுத்தவில்லை. தற்போது சாரதிகள் மற்றும் பஸ்கள் தொடர்பில் பற்றாக்குறை நிலவுகிறது. அவை நிவர்த்தி செய்யப்பட்டால் பஸ் சேவை நடத்துவது தொடர்பாக முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்தார். (வ-14)

## இரு தடவைகள் சேவையில் 771 இலக்க இ.போ.ச.பஸ்

யாழ்ப்பாணம்.ஜன.30
மருதனார்மடத்திலிருந்து தாவடி ஊடாக யாழ்ப்பாணத்துக்கான சேவையில் ஈடுபடும் இலங்கைப் போக்குவரத்து சபையின் 771 இலக்க பஸ் சேவை பாடசாலை நாள்களில் தினமும் இரு தடவைகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.
குறித்த பஸ் சேவையில் பயணிகள் எண்ணிக்கை குறைவாக இருந்தமையால் சிறிது காலம் சேவை இடை நிறுத்தப்பட்டிருந்தது. எனினும் மருதனார்மடம், உடுவில், மானிப்பாய், சுதுமலை, தாவடி, கொக்குவில் ஆகிய பகுதி மாணவர்கள் குறித்த பஸ் சேவையைப் பயன்படுத்தி வந்தனர். மாணவர்களது கோரிக்கைக்கு அமைவாக பஸ் சேவை மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.
பாடசாலை நாள்களில் காலை 6.30 மணிக்கும் பிற்பகல் 2.30 மணிக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து கே.கே.எஸ் வீதி, தாவடியூடாக மானிப்பாய் சென்று- மருதனார்மடத்துக்கும் அங்கிருந்து அதே வழித்தடம் ஊடாக காலை 7.15 மணிக்கும் பிற்பகல் 3.30 மணிக்கும் யாழ்ப்பாணத்துக்குமான சேவைகள் இடம் பெற்றுவருகின்றன. (வ-14)

## மின்சாரப் பணிகளுக்காக 1.5 மி.செலவில் வாகனம்

### *கொள்வனவு செய்ய மாநகர சபை தீர்மானம்*

யாழ்ப்பாணம்.ஜன.30
யாழ்.மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களில் மின்சாரப்பணிகளுக்காக 1.5 மில்லியன் ரூபா செலவில் புதிய வாகனத்தை கொள்வனவு செய்ய யாழ். மாநகர சபையால் தீர்மானிக் கப்பட்டுள்ளது.
யாழ்.மாநகர சபையில் ஏற்கெனவே உள்ள வாகனம் தற்போது பழுதடைந்த நிலையில் இருப்பதால் திருத்தப்பணிகளுக்கென அடிக்கடி மாநகர சபையின் நிதி வீணடிக்கப் படுவது தொடர்பில் யாழ். மாநகர சபை ஆணையாளரால் உறுப்பினர்கள் முன்னிலையில் கருத்து முன்வைக் கப்பட்டது.
இதற்கு அமைவாக புதிய வாகனத்தைக் கொள்வனவு செய்தால் அவ்வாறானதொரு தடை ஏற்படாமல் சீரான முறையில் மின்சார விநியோகப் பணிகளை மேற்கொள்வதற்கு

> "–"
> நகரின் அபிவிருத்திக்கு மின் சாரம் சீராக வழங்க வேண்டியுள்ளதால் புதிய வாகனத்தை கொள்வனவு செய்யலாம் என்று உறுப்பினர்கள் தெரிவித்திருந் தனர்.

இலகுவாக இருக்கும் என்று பொறியியலாளரால் தெரிவிக்கப் பட்டது.
நகரின் அபிவிருத்திக்கு மின் சாரம் சீராக வழங்க வேண்டியுள்ளதால் புதிய வாகனத்தை கொள்வனவு செய்யலாம் என்று உறுப்பினர்கள் தெரிவித்திருந் தனர். இதற்கமைவாக 1.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக் கீட்டில் புதிய வாகனத்தை மாநகர சபை கொள்வனவு செய்ய வுள்ளது. (வ-14)

# இயங்க முடியாத நிலையில் வலி.கிழக்கு பிரதேச சபை

### *முதலமைச்சர் பாராமுகம் எனக் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம், ஜன.30
வலி.கிழக்குப் பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளதால், பிரதேச சபையின் ஊழியர்களுக்கு இந்த மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. அத்துடன் சபை நடவடிக்கைகளும் முடங்கி யுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
இதுதொடர்பில்வடக்குமாகாண உள்ளூராட்சி அமைச்சரான, முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்றும், இதனால் நிலைமை மேலும் சிக்கல் அடைந்து வருகிறது எனவும் குற்றஞ்சாட் டப்பட்டுள்ளது.
வலி.கிழக்குப் பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம், கடந்த நவம்பர் மாதம் முதல் தடவையாக சமர்ப்பிக்கப்பட்டது. அதன் போது ஆளுங் கட்சி உறுப்பினர்களாலேயே அது தோற்கடிக்கப்பட்டிருந்தது.

***தவிசாளர் பதவியிழப்பு***

இரண்டாவது வாசிப்பிலும் வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால், சபைத் தலைவர் பதவியிழப்பார் என்ற நிலையில், இரண்டாவது வாசிப்பை தவிசாளர் தன்னிச்சையாக நடத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டது.
இந்த நிலையில் இரண்டாவது அமர்வு மீளவும், யாழ்ப்பாண பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் நடத்தப்பட்டது. இதன்போதும் ஆளுங் கட்சி உறுப்பினர்களும், எதிர் கட்சி உறுப்பினர்களும் இணைந்து வரவு - செலவுத் திட்டத்தை தோற்கடித்திருந்தனர்.
இதனால் சபையின் நடப் பாண்டுக்குரிய வரவு செலவுத் திட்டம் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. இதனால் சபை ஊழியர்களுக்கு ஜனவரி மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் இன்னமும் வழங்கப்படவில்லை. அத்துடன் சபையூடாக எந்தவொரு வேலைத் திட்டங்களையும் முன்னெடுக்க முடியாத நிலை தோன்றியுள்ளது.
கிழக்கு மாகாணத்தில் வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்ட 3 பிரதேச சபைகளின், பொறுப்புக்களை, கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சர் அந்தந்த பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர்களிடம் பாரப்படுத்தியுள்ளார். இதன் மூலம் அந்தச் சபைகளின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
இந்த நடவடிக்கை குறித்து, வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சரும் முதலமைச்சருமான க.வி.விக் னேஸ்வரனுக்கு உள்ளூராட்சிஆணையாளரினால் தெரியப்படுத்தப் பட்டுள்ளபோதும் இதுவரை அவரால் எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கப்படவில்லை என குற்றஞ்சாட்டப்படுகின்றது. (ஜ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிக நேரம் உணவு அருந்தினால் பணி நீக்கம்

புதுடில்லி, ஜன.30

உத்திரப்பிரதேச மாநிலத்தில் பணிபுரியும் அரச ஊழியர்கள் பணியிலிருக்கும்போது மதிய உணவு இடைவேளைக் காக நீண்ட நேரம் எடுத்துக் கொண்டால் பணிநீக்கம் செய்யப்படுவார்கள் என்று எச்சரித்துள்ளார் அந்த மாநில முதலமைச்சர் அகிலேஷ்யாதவ். இந்த நடவடிக்கைக்கு ஊடகத் துறையினரின் ஒத்துழைப்பையும் அவர் கோரியுள்ளார்.

"எந்த அரச ஊழியராவது பணி நேரத்தில் தனது இருக்கையில் இல்லாதிருந்தால் எனக்குத் தகவல் கொடுங்கள். நான் அவர்களை பணி இடைநீக்கம் செய்கிறேன்" என்றுஅவர்கூறியுள்ளார்.

சில தினாங்களுக்கு முன் அந்த மாநில பொதுப்பணித்துறை அமைச்சரான சிவபால் யாதவ்வினால் மதிய உணவுக்காக அரசு ஊழியர்கள் யாரும் தங்களதுஇல்லங்களுக்குச் செல்லக் கூடாது என உத்தரவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

## பஸ் விபத்தில் 8 பேர் சாவு

மகாராஷ்டிரா மாநிலம் தாணே மாவட்டத்தில் சொகுசு பஸ் ஒன்று எரிபொருள் பவுசர் வாகன மொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் 8 பேர் உயிரிழந்துள்ளனர். 14 பேர் படுகாயமடைந்தனர்.

அகமதாபாத்தில் இருந்து புனே நோக்கிச் சென்ற சொகுசு பஸ் ஒன்றே எரிபொருள் பவுசர் வாகனத்துடன் நேருக்கு நேர் மோதியது. அதில் இரண்டு வாகனங்களும் தீப்பிடித்துக் கொண்டன. தீயில் சிக்கி 8 பேர் உயிரி ழந்துள்ளனர்.

விபத்தில் உயிரிழந்த 8 பேரும் பஸ்ஸில் பயணித்த வர்கள் என்பது உறுதிபடுத்தப்பட்டுள்ளது. சடலங்கள் கருகிய நிலையில் இருப்பதால் அடை யாளம் காண்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் கூறுகின்றனர்.

விபத்து நடந்த பகுதியில், கடந்த ஆண்டு மே மாதம் இதேபோன்று சொகுசு பஸ் ஒன்றும், எரிபொருள் பவுசர் வாகனமும் விபத்துக்குள்ளாகியதில் 14 பேர் உயிரிழந்தனர். 40க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். (ற)

# கருத்தொற்றுமையுள்ள கட்சிகளுடன் கூட்டணி

### ஜி.கே.வாசன் தெரிவிப்பு

சென்னை, ஜன.30

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் ஒத்த கருத்துடனான கட்சிகளுடன் காங்கிரஸ் கட்சி கூட்டணி அமைத்துப் போட்டியிடும் என்று தெரிவித்துள்ளார் மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜி.கே வாசன்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி இல்லை என்ற தி.மு.க. தலைவர் கருணாநிதியின் முடிவு குறித்து கட்சி மேலிடத்துக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

நாடாளு மன்ற தேர்தலுக்கு இன்னமும் காலம் இருப்பதால், நன்கு ஆலோசித்த பிறகு கூட்டணி குறித்து காங்கிரஸ் கட்சி அதிகாரபூர்வமாக அறிவிப்பை வெளியிடும் " என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

## 'பியர்' போத்தலுக்குள் இறந்த நிலையில் தவளை; கொதித்தெழுந்த 'குடிமகன்' நடத்தினார் பத்திரிகை மாநாடு

சென்னை, ஜன.30

'பியர்' போத்தலுக்குள் தவளை கிடந்ததால் கொதித்தெழுந்த 'குடிமகன்' ஒருவன் பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தும் அளவுக்குச் சென்றுவிட்டார்.

சென்னையைச் சேர்ந்தவர் தென்னரசு. இவர் அரச மதுபான விற்பனை நிலையத்துக்குச் சென்று ஒரு போத்தல் 'பியர்' வாங்கியுள்ளார். இது இறுதியாகக் 'குடிமக்களுக்காகக்' களமிறங்கப்பட்ட பின்லாந்துத் தயாரிப்பாகும்.

படு ஆவலோடு போத்தலைத் திறந்தபோது உள்ளே ஒரு தவளை செத்துக் கிடந்ததைப் பார்த்து வாந்தி வராத குறையாக கடுப்பாகிவிட்டார் தென்னரசு. உடனே தொலைபேசியை எடுத்துத் தனது வழக்கறிஞரை அழைத்தார். இருவரும் சேர்ந்து பத்திரிகையாளர் சந்திப்புக்கு ஏற்பாடு செய்தனர்.

பத்திரிகையாளர் சந்திப்பில் தென்னரசுவின் வழக்கறிஞர் திருநாவுக்கரசு புள்ளிவிவரங்களுடன் பேசியுள்ளார். அவர் கூறுகையில், "தமிழக அரச மதுபானக் கடையில் அரசுக்கு கிடைக்கும் ஆண்டு வருமானம் ரூபா 20 ஆயிரம் கோடி. தமிழ்நாட்டில் குடிப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வருகிறது. தமிழகத்தில் பள்ளி, கல்லூரி மாணவர்கள் கூடக் குடிக்கும் அவல நிலை உருவாகி உள்ளது. அரசுக்கு முக்கிய வருமானம் ஈட்டித் தரும் மதுபான நிறுவனத்தை நடத்தும் தமிழக அரசுக்கு மக்களுக்கு வழங்கும் மதுபானம் தரமானதாக இருக்க வேண்டும் என்பதில் அக்கறையும், கடமையும், பொறுப்பும் உண்டு. ஆனால் மதுபான நிறுவனமும் அரசும் அக்கறை செலுத்தாததால் பொதுமக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் வகையில் மது தயாரிக்கப்படுகிறது. இவ்வாறான மதுபான நிறுவனங்களைத் தடை செய்ய வேண்டும் என்றும் எனது கட்சிக்காரர் தென்னரசுக்கு தகுந்த நஷ்டஈடு வழங்க வேண்டும் என நீதி மன்றத்தில் வழக்கு தொடர உள்ளோம்" என்று தெரிவித்துள்ளார்.

தென்னரசுவின் இந்த நடவடிக்கைஅங்குள்ள பட்டிதொட்டியெல்லாம் பரவிப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ற)

## அழகிரி நீக்கத்தில்பின்புலம் உள்ளது

### இல.கணேசன் கூறுகின்றார்

சென்னை, ஜன.30

தி.மு.கவின் முக்கிய பொறுப்பில் இருந்த மு.க.அழகிரியை நீக்கியமை மீதான அக்கட்சித் தலைமையின் நடவடிக்கையில் அரசியல் பின்புலம் இருக்கிறது என நம்புகின்றோம் என்று தெரிவித்துள்ளார் பாரதிய ஜனதாக் கட்சியின் தேசிய செயற்குழு உறுப்பினர் இல.கணேசன். சேலத்தில்நடைபெற்ற பாரதிய ஜனதாகட்சியின் மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தில் செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தி.மு.கவின் முக்கிய பொறுப்பில் இருந்து மு.க.அழகிரி நீக்கப்பட்ட நடவடிக்கையில் அரசியல் பின்புலம் இருக்கின்றது என்றே நாம் கருதுகின்றோம். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்காக தி.மு.கவின் தலைமை நடத்தும் நாடகமே இது என்ற சந்தேகம் எழுந்துள்ளது." என்று தெரிவித்துள்ளார். (ற)

## ஸ்ராலினுக்குப் பாதுகாப்பு கோருகின்றார் கருணாநிதி



ஸ்ராலின், தயாநிதிமாறன், அழகிரி

சென்னை, ஜன.30

தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்ராலினுக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் கோரிக்கை விடுத்துள்ளார் அந்தக் கட்சியின் தலைவர் மு.கருணாநிதி.

இந்தியப் பிரதமருக்கு அவர் எழுதியியுள்ள கடிதத்திலேயே இது குறித்துக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது.

"எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலுக்கான தி.மு.கவின் பரப்புரைகளுக்கு ஸ்ராலின்தான் தலைமைதாங்கி முன்னெடுத்துச் செல்பவர். அதனால் அவரது பாதுகாப்புக் குறித்து நான் மிகவும் கவலையடைந்துள்ளேன். அவருக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும்." என்று கூறப்பட்டுள்ளது.

அதேவேளை, தி.மு.க மக்களவை தலைவர் டி.ஆர். பாலு இது தொடர்பாக கடந்த ஒரு மாதத்திற்கு முன்னரே பிரதமரைச் சந்தித்து ஸ்ராலினுக்கான பாதுகாப்பை அதிகரிக்குமாறு கேட்டுக் கொண்டார் என்று தி.மு.க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

2006 ஆம் ஆண்டு ஸ்ராலினை மதுரை ரயில் நிலையத்தில் ஒருவர் கத்தியால் குத்த முயற்சித்தார். அன்றிலிருந்து ஸ்ராலினுக்கு மத்திய பாரா மிலிட்டரி கமாண்டோக்களின் பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிலையிலேயே கூடுதல் பாதுகாப்புக் கோரி பிரதமருக்கு கருணாநிதி கடிதம் எழுதி உள்ளார். (ற)


பூநகரி மண்ணின் மைந்தன்

Best Wishes தா.அரியரத்தினம் Best Wishes

அவர்கள் "சாமஸ்ரீதேசமானிய", "சாமஸ்ரீ தேசகீர்த்தி" ஆகிய இரட்டை விருது பெற்றமையை பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது இல்லத்தின் உறுப்பினரும் எமது இல்லக் குழந்தைகளுக்கு அளப்பெரிய சேவை ஆற்றி வருபவரும், பூநகரி ப.நோ.கூட்டுறவு சங்கத்தின் நெறியாளர் குழு உறுப்பினரும், வவுனியா மேல் நீதிமன்ற வலய பிரசித்த நொத்தாரிசும், சமாதான நீதிவானும், பூநகரி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரியும், கிளிநொச்சி லயன் கழக உறுப்பினரும், செட்டிய குறிச்சி திகிரி விநாயகர் ஆலயத்தின் செயலாளரும்,பூநகரி மறவர் குறிச்சி பத்தினியார்காடு சித்தி விநாயகர் ஆலயத் தலைவருமான தாமோதரம்பிள்ளை அரியரத்தினம் அவர்களுக்கு அகில இன நல்லுறவு ஒன்றியத்தால் அவரது பொதுச் சேவையைப் பாராட்டி கௌரவித்து 23.11.2013 இல் திருகோணமலையில் நடைபெற்ற விழாவின் போது "சாமஸ்ரீ தேசமானிய" விருது வழங்கப்பட்டும் மீள அதற்கு மேலாக 19.01.2014 இல் மாத்தறை மாவட்டத்திலுள்ள பௌத்த சர்வதேச பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற விருது வழங்கல் நிகழ்வின் போது "சாமஸ்ரீதேசகீர்த்தி" விருது வழங்கியும் கௌரவிக்கப்பட்டுள்ளார். மிகக் குறுகிய காலத்தில் இரட்டை விருதுபெற்று மிளிரும் நிலையில் அவர் மேன்மேலும் பல சிறப்புக்கள் பெற்று மக்களுக்கு மேலும் சேவை செய்து நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

தி.இராசநாயகம் தலைவர், பணிப்பாளர்கள், இல்லக்குழந்தைகள், மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம், ஜெயந்திநகர், கிளிநொச்சி.

(C/11336)(10.6)



தேவை

Mahindra Maxximo (Full Body)நீண்டகால வாடகைக்குத் தேவை.

தொடர்பு:077 113 7560



வீடு வாடகைக்குண்டு

ஸ்ரான்லி வீதி, அத்தியடியில் சகல வசதிகளுடன் (5 அறைகள் உட்பட) வாடகைக்குண்டு.

தொடர்பு:077 959 0692/077 985 6359



ஜேர்மன்

காலம்2மாதம் வகுப்புக்கள்

ஒரே தடவையில் சித்தியடைந்து பின்பு பணம் செலுத்தவும்

வினா விடை வகுப்பு10 PAPERS- கடிதவகுப்பு75X3

APSC-URUMPIRAI-0778361718



micro tec

Computer wholesaler

கனடாவிலிருந்து இறக்குமதிசெய்யப்பெற்ற...

Branded கணினிகள், மடிக் கணினிகள் மற்றும் அனைத்து கணினி பாகங்களையும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

For whole sale... Laptop:Rs. 15,000/- Rs.40,000

15" - Rs.3,600/- | PD, PIV, D.core,C2D,

17" - Rs.4,200/- | I3, and I5, computers

19" - Rs.5,200/- | Rs. 6,000 -Rs.40,000



No.170, Palaly Road, Kondavil East, Jaffna. Hot Line 077 912 0842



பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர்திரு.

கந்தையா சண்முகலிங்கம்

- BA (Cey.)

(முகாமையாளர், மக்கள் வங்கி, சாவகச்சேரி)

Best Wishes

மீசாலை கிழக்கு சித்திரவேலாயுதர் ஆலய பரிபாலனசபைத் தலைவரும், தென்மராட்சி பிரதேச வளர்ச்சியில் பெரும்பங்காற்றிய உயர்திரு. கந்தையா சண்முகலிங்கம் அவர்கள் வங்கிச் சேவையில் இருந்து இன்று (30.01.2014) ஓய்வுபெறுவதை இட்டு அவர் பிரதேச மக்களுக்கு ஆற்றிய அளப்பரிய சேவைகளைப் பாராட்டுவதுடன் தனது ஓய்வு காலத்தில் சமூக, ஆன்மீகப் பணிகளில் ஈடுபட்டு பல்லாண்டுகாலம்சிறந்த உடல், உள ஆரோக்கியத்துடன் வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

மடத்துடி கிழக்கு,சாவகச்சேரி. (33096)(45.6) VVS கழகம்



மாந்தை கிழக்கு பிரதேச சபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான மீள் அறிவித்தல்

மாந்தை கிழக்கு பிரதேச சபையின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 07.01.2014ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்ட அறிவித்தலில் **வேலை/ வெளிக்களத் தொழிலாளி, சுகாதாரத் தொழிலாளி, சாரதி** ஆகிய பதவிகளிற்கான அடிப்படைக் கல்வித் தகைமை 8ஆம் வகுப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டுமென திருத்தம் செய்யப்பட்டு மீள் விண்ணப்பங்கள் ஏற்கனவே **விண்ணப்பிக்காத** தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து மட்டும் கோரப்படுகின்றது.

| பதவி | பதவி இல |
|---|---|
| வேலை/வெளிக்களத் தொழிலாளி | 02 |
| சுகாதாரத் தொழிலாளி | 03 |
| சாரதி | 06 |

**அடிப்படைக்கல்வித்தகைமை:**

1. வகுப்பு 08 இல் சித்தி.

**விண்ணப்பமுடிவு திகதி:- 17.02.2014**

விண்ணப்பப் படிவங்கள் 30.01.2014 ஆம் திகதி தொடக்கம் அலுவலகத்தில் ரூபா.100/= இனை செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் யாவும் பூரணப்படுத்தப்பட்டு 17.02.2014ஆம் நாள் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். அதற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

**குறிப்பு:- ஏற்கனவே உரிய பதவிகளிற்கு விண்ணப்பித்தவர்கள் மீளவும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.**

29.01.2014

செயலாளர்,
மாந்தை கிழக்கு பிரதேச சபை.

(C/11333)(10.6)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சீனாவைப் பின்தள்ளி முன்னேறியது அமெ.

### ஜனாதிபதி பராக் ஒபாமா பெருமிதம்


பராக் ஒபாமா

வொஷிங்டன், ஜன.30
சீனாவைப் பின் தள்ளி அமெரிக்கா வெளிநாட்டு முதலீடுகளில் முதலிடத்தைப் பெற்றுள்ளது என்று தெரிவித்துள்ளார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா .
இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,
"2014ஆம் ஆண்டு அமெரிக்கப் பொருளாதாரம் நிச்சயம் வளர்ச்சி பெறும். பொருளாதாரத்தில் நிலையற்ற தன்மையைச் சீராக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
பெண்களுக்கு வேலைக் கேற்ற ஊதியம் அளிக்கப்பட வேண்டும். பெண்கள் முன்னேறினால் தான் அமெரிக்காவும் வளர்ச்சி அடையும். வெளிநாடுகளின் முதலீடுகளை பெறுவதில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. எனது அதிகாரங்களை தொழிலாளர்களின் நிலையை உயர்த்தப் பயன்படுத்தப் போகின்றேன். ஆப்கானிஸ்தானில் இருந்து இந்த ஆண்டு இறுதிக்குள் அமெரிக்க படைகள் வெளியேறும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## பெண்களின் காதல் மெய்யானதா? கண்டறிய வந்தது மார்புக் கச்சை!

டோக்கியோ, ஜன.30
பெண்களின் மன நிலையை அறிந்து அவர்களிடம் உண்மையான காதல் உள்ளதா? என்பதைக் கண்டறியும் அதிநவீன தொழில் நுட்ப மார்புக் கச்சை ஜப்பானில் உருவாக்கப்பட்டுள்ளது. அதை ஒரு தனியார் உள்ளாடை நிறுவனம் வடிவமைத்துள்ளது.
அதை அணியும் பெண்களின் மன நிலையை அறிய அதில் உணர்வு கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. அவை பெண்ணின் இதய துடிப்பு மற்றும் உடலின் வெப்பநிலையை கணக்கிட்டு அந்தத் தகவல்களை 'வயர்லஸ்' தொலைபேசி மூலம் கைத்தொலைபேசிக்கு அனுப்பும். அதன் மூலம் அப்பெண்ணின் மனதில் உண்மையான காதல் உள்ளதா என்பதை கண்டறிய முடியும் என்று அதன் தயாரிப்பாளர்கள் கூறுகின்றனர். இந்த மார்புக் கச்சை தற்போது விற்பனைக்கு விடப்படவில்லை. எனினும் அந்த உள்ளாடையின் செயற்றிறன் பற்றி காணொலியை வெளியிட்டுள்ளது அந்த உள்ளாடை தயாரிப்பு நிறுவனம்.
இந்த மார்ப்புக் கச்சை விற்பனைக்கு வெளிவந்ததும் பெண்களை விடவும் ஆண்களே அவற்றை வாங்கி தமது துணைகளுக்குக் கொடுக்க முண்டியடிப்பார்கள் என்பது திண்ணம். (ற)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மூளைக்குள் தவறுதலாக பசை சிறுமிக்கு நேர்ந்த கொடூரம்

லண்டன், ஜன.30
பிரிட்டனில் பிரபல குழந்தை கள் மருத்துவமனை ஒன்று தவறுதலாக சிறுமியின் மூளைக்குள் பசை போன்ற திரவத்தை செலுத்திய தகவல் தற்போது வெளியாகிப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
2010ஆம் ஆண்டு மூளை நரம்புகளில் ரத்தக் கசிவு ஏற்பட்ட காரணத்திற்காக மய்ஷா நஜீப் (வயது-10) என்ற சிறுமி லண்டன் ஆர்மண்ட் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு மூளை நரம்பு ரத்தக் கசிவைச் சரி செய்ய அறுவை சிகிச்சை செய்யப் பட்டது, அதில் மூளை நரம்பில் உள்ள ரத்தக்கசிவை நிறுத்துவதற்காக பசை போன்ற மருந்து ஒன்று செலுத்தப்பட்டது.
ஆனால் அது தவறுதலாக அவ ரது இடது பக்க மூளைக்குள் சென்று விட்டது. அதனால் அறுவைச் சிகிச்சை முடிந்த சில தினங்களில் அவரது உடல் உறுப்புகள் செயலிழக்கத் தொடங்கின.
அதனைத் தொடர்ந்து சிறுமி சார்பில் மருத்துவமனை நிர்வாகம் மீது வழக்குத் தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி வில்லியம் பிர்ட்லெஸ், சிறு மிக்கு 33 கோடியே 53 லட்சம் இழப்பீடு வழங்க உத்தரவிட்டுள்ளார். அத்துடன் சிறுமிக்கு 18 வயது ஆகும் வரை ஆண்டு தோறும் 4 கோடியே 59 லட் சத்து 45 ஆயிரத்து நானூற்று நாற்பத்திரண்டு ரூபாவும், 18 வயது முடிவடைந்து 19 வயது தொடங்கும் போது இந்த தொகையை 5 கோடியே 9 லட்சத்து 64 ஆயிரத்து முப்பத் தொன்பது ரூபாவாக உயர்த்தி வழங்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளார். இந்தச் சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ற)

## பறவைக் காய்ச்சல் அச்சம்: ஏராளம் கோழிகள் அழிப்பு'

### ஹொங்கொங் அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கை

பீஜிங், ஜன.30
ஹொங்கொங்கில் பறவைக் காய்ச்சலின் அறிகுறி கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளது அந்த நாட்டு அரசு. இதையடுத்து அங்கு அதிக எண்ணிக்கையில் கோழிகள் அழிக்கப் பட்டு வருகின்றன.
முன்னெச்சரிக்கை நடவடிக்கை யாக அடுத்த மூன்று வாரங்களுக்கு . சீனாவில் இருந்து கோழி இறக்குமதி தற்காலிகமாக நிறுத்தப்படும் என்றும் மேலும், இருபதாயிரம் கோழி கள் வரை அழிக்கப்படும் என் றும் அரசு அறிவித்துள்ளது.
கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக இது போன்று பறவை காய்ச்சல் பாதிப்பால் கோழிகள் பெரும் அளவில் அழிக்கப்பட்டன. அதேவேளை இந்த வருட சீன புத்தாண்டு கொண்டாட்டங்கள் வழமைக்கு முன்ன தாக வருகிறது. சீனப் புத்தாண்டு கொண்டாட்டத்தில் கோழிகள் தான் பெரும்பாலும் உணவாக உண்ணப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## பணயத் தொகை கொடுப்பதை நிறுத்துங்கள்

### ஐ.நா. பாதுகாப்புச் சபை கோரிக்கை

நியூயோர்க், ஜன.30
பயங்கரவாதக் குழுக்களுக் குப் பணயத் தொகை கொடுப்பதை நிறுத்த வேண்டும் என்று உலக நாடுகளை ஐ.நா. பாதுகாப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.
அல்-குவைதா மற்றும் அதனு டன் தொடர்புடைய குழுக்கள் பணயக் கைதிகளுக்கான ஈட்டுத்தொகையாக. கடந்த மூன்றரை ஆண்டுகளில் மட்டும் குறைந்தது 10 கோடியே 50 இலட்சம் டொலரைப் பெற்றுள்ளன என்று பிரிட்டன் ஐ.நா. தூதுவர் மார்க் லயல் கிராண்ட் தெரிவித்துள்ளார். அத்துடன் மூன்றாண்டுகளுக்கு முன்னர் நைஜரில் கடத்தப்பட்ட மூன்று பிரெஞ்ச் குடிமக்களுக்கான பணயத் தொகையாக, கடந்த ஒக்ரோபர் மாதம் 2 கோடி யூரோ கொடுக்கப் பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆயினும் இதற்கு பிரான்ஸ் அரசு மறுப்பு தெரிவித்துள்ளது.
பயங்கரவாதக் குழுக்களுக்கு நாடுகள் பணயத் தொகை செலுத்துவதை தடை செய்யும் ஒப்பந்தம், கடந்த 2001 ஆம் ஆண்டிலேயே கொண்டுவரப்பட்டது. எனினும் தற்போது ஐ.நா. பாதுகாப்புச் சபையில் கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானத்தில் சட்டரீதியான புதிய ஒழுங்கு முறைகள் எதுவும் சேர்க்கப்படவில்லை. இந்த நிலையிலேயே ஐ.நா. பாதுகாப்புச் சபை உலக நாடுகளிடம் இவ்வாறு வலியுறுத்தியுள்ளது. (ற)

நாளை முதல் வெளிவருகின்றது.
இதோ உங்கள் குடும்ப முன்னேற்றத்திற்கான
பெப்ரவரி மாத இதழ்
OLIARAZI
மாத சஞ்சிகை
ஒளிஅரசி
இல்லத்தரசிகளின் தோழி
ஒளி - 01 இதழ் - 03
பெப்ரவரி 2014
பக்கங்கள்:60




தொடர்புகளுக்கு
0714273035
0716182182
உள்ளடக்கங்கள்:
- குடும்பத்தின் குல விளக்கு பெண்.
- றொமான்ஸ் இரகசியங்கள் - 02 (புதிய பகுதி)
- சரியாக திட்டமிட ஒரு வாய்ப்பு
- உள்ளத்தை உருக்கிய நிகழ்வு.
- புரிந்துணர்வுடன் வாழ்ந்தால் மகிழ்ச்சிகிட்டும்.
- பெண் தலைமைத்துவமும் சவால்களும்.
- மருத்துவ ஆலோசனை - பெண்களின் வளர் இளம் பருவத்துக்கு பின் மருத்துவ பராமரிப்பு.
- காதலி தேடிக்கொடுத்த மனைவி (தொடர் கதை)
- உளத் தூய்மையின் அழகு.
- உலக வெற்றியாளர் றொபின் ஷர்மாவின் அனுப தொடர் அசாதாரண வெற்றியின் பின்னணியில். (புதிய பகுதி)
- பெண்கல்வியின் முக்கியத்துவம்.
- சுவைக்க சமைப்பது எப்படி?
- சுயதொழில் முயற்சிக்கு தயாராகுங்கள். (புதிய பகுதி)
- இம்மாத முஸ்லிம் மங்கை - சமூக சேவைகளினால் ஆத்ம திருப்தி அடையலாம்.
- குழந்தை வளர்ச்சியில் தந்தையின் கடப்பாடுகள்.
- வீட்டுப்பராமரிப்பை சீராக்க.
- பெண்களால் எதுவும் முடியும் - பாரதீ.
- உள்நாட்டு குத்துச்சண்டை வீரர்களுக்கு வாய்ப்பு.
- இம்மாத இராசி பலன்.
- தமிழன் என்று சொல்லு தலை நிமிர்ந்து நில்லு.
- கொலைப்பாதகம் என்பது கொலை செய்தல் மட்டுமல்ல - பல வாழ்க்கைத் தத்துவ வினாக்களுக்கான விடைகள்.
- காலத்தால் அழியாத தெய்வீக காதல்.
- இயற்கை பொலிவுக்கு யோகா.
- விலைகொடுத்து வாங்கும் நோய்கள் - பள்ளி மாணவர்களே அவதானம்.
- சிரிப்பு ஒரு மருந்து - பழக்க தோஷம் ஏற்படுத்திய விபரீதம்.
- ஆண்களை உங்கள் பக்கம் திரும்பச் செய்வது எப்படி?
- அம்முவின் கேள்வி பதில் - பழைய காதலியுடன் பேசலாமா?
- சமய அனுஷ்டானங்கள் - மஹா சிவராத்திரி.
- சிறுவர் பூங்கா. (10 பக்கங்கள்)
- தொழுகை அட்டவணை.
- A/L இணைந்த கணிதம்.
- தரம் 04, 05 - சிந்தனை திறனை அதிகரிக்கும் மூளைக்கு வேலை (புதிய பகுதி)

(C/11654)
பத்திரிகை முகவரிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாந்தை மேற்கு பிரதேச சபையில் நிலவும் அட்டவணைப்படுத்தப்படாத வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் -2014

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 01.01.2013ஆம் திகதி முதல் மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி விவரங்களுக்கமையவும், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 08.02.2013ஆம் திகதிய NP/05/01/GE6/UNS/RQk; இலக்க கடிதத்திற்கமைவாகவும் கீழ்க் குறிப்பிடப்படும் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய ஆள்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | **சாரதி** | 06 |
| 2 | **வீதி/வெளிக்களத்தொழிலாளி** | 03 |
| 3 | **காரியாலய காரியசகாயர்** | 02 |
| 4 | **சுகாதாரத்தொழிலாளி** | 08 |
| 5 | **மின்னியலாளர்** | 01 |
| 6 | **நூலகப்பணியாளர்** | 01 |

1.சாரதி- சம்பள தொகுதி -PL3-2006A-12470-10x130-10x145-10x160-12x170-18860
2.காரியாலய காரிய சகாயர்- சம்பளதொகுதி -PL1-2006A-11730-10x120-10x130-10x145-12x160-17600
3.சுகாதார தொழிலாளி -சம்பள தொகுதி -PL1-2006A-11730-10x120-10x130-10x145-12x160-17600
4.வீதித் தொழிலாளி -சம்பள தொகுதி -PL1-2006A-11730-10x120-10x130-10x145-12x160-17600
5.மின்னியலாளர் -சம்பள தொகுதி -PL2-2006A-12210-10x130-10x145-10x160-12x170-18600
6.நூலகப் பணியாளர்- சம்பள தொகுதி -PL1-2006A-11730-10x120-10x130-10x145-12x160-17600

**சேவை நிபந்தனைகள்**

1. பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதும் ஆகும்.
2. ஊழியர் விதவைகள்/அனாதைகள் ஓய்வூதியத்திற்கு அளிப்புச்செய்தல் வேண்டும்
3. நியமனம் பெறுபவர்கள் மூன்று வருட தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

**அடிப்படைத் தகைமைகள்**

1. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்
2. விண்ணப்ப முடிவு திகதியின் போது 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 45 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்
3. எமது அதிகாரப் பிரதேசத்திற்குள் குறைந்தது 5 வருடங்களாவது நிரந்தரமாக வசித்திருந்ததற்குரிய கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழ் பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்டு பெறப்பட்டிருத்தல் வேண்டும் அல்லதுவாக்காளர் இடாப்பு பட்டியலின் மூலப் பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**கல்வித் தகைமை - நூலகப் பணியாளர் , மின்னியலாளர்**

1. க.பொ.த.சா/த பரீட்சையில் 2 அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் 2 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். ஒரு அமர்வில் 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**கல்வித் தகைமை-சாரதி, சுகாதாரத் தொழிலாளி, வீதித் தொழிலாளி, காரியாலய காரிய சகாயர்.**

1. க.பொ.த.சா/த பரீட்சையில் 2 அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் 2 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். ஒரு அமர்வில் 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாத பட்சத்தில் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை ஒன்றில் தரம் 8 சித்திபெற்றிருத்தல் கவனத்தில் கொள்ளப்படும்.

**வேறுதகைமைகள்**

1. மேலதிக தகைமைகள், அனுபவம் விசேட தகைமையாக கருத்தில் கொள்ளப்படும்.

**1.சாரதிக்குரிய பிற தகைமைகள்**

**தொழில் சார் தகைமை**

1. இலங்கை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பார ஊர்தி ஓட்டுவதற்கான சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல். (Class C,C1)
2. சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றதிலிருந்து குறைந்தது 3 வருடங்களாவது தொழில் சார் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**தெரிவுசெய்யப்படும் முறை**

1. அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு தெரிவுகள் இடம்பெறும்.
2. சாரதிப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் செயன்முறைப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

**விண்ணப்பிக்கும் முறை**

1. மாந்தை மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் ரூபா.100ஐ செலுத்தி விண்ணப்பப்படிவத்தை பெற்று உரிய திகதிக்கு முன்பதாக எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் **செயலாளர், மாந்தை மேற்கு பிரதேச சபை, அடம்பன்** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.
3. பதவிக்கு தேவையான சகல தகைமைகளும் விண்ணப்ப முடிவு திகதியன்று பூர்த்தியாக்கப் பட்டிருத்தல் வேண்டும்.
4. வழங்கப்படும் தகவல்கள் பொய்யானதென உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனம் இரத்துச்செய்யப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி -13.02.2014**

ச.ஜெனிங்ஸ்,
செயலாளர்,
மாந்தை மேற்கு பிரதேச சபை,
அடம்பன்.

(C/11331)(10.6)

## ஒன்று கூடல்

யாழ்ப்பாணம், ஜன.30

ஊர்காவற்றுறை பிரதேச சபை ஊழியர் நலன்புரி சங்கத்தின் வருடாந்த ஒன்று கூடல் இன்று வியாழக் கிழமை முற்பகல் 11.30 மணிக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் சங்கத் தலைவர் ப.குகநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரினும் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரும் கலந்துகொள்வர்.

சிறப்புவிருந்தினர்களாக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கொன்ஸ்ரன்ரைன் ஜக்சீல், ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி அன்ரன் யோகநாயகம் ஆகியோர் கலந்து கொள்வர். (வ)



வவுனியா நகரில் பொது இடங்களில் புகைப்பிடித்தல் அதிகரித்துள்ள நிலையில் பொது இடம் ஒன்றில் வைக்கப்பட்டுள்ள குப்பைக் கூடையில் காணப்படும் சிகரெட் கட்டைகள். (வ-402)

## "ஞானச்சுடர்" ஆன்மிக சஞ்சிகை 17 ஆவது ஆண்டு முதல் இதழ் வெளியீடு

வடமராட்சி, ஜனவரி, 30

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ சமய பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான "ஞானச்சுடர்" ஆன்மிக சஞ்சிகையின் 17 ஆவது ஆண்டு முதல் இதழ் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

பேரவை நிர்வாக உறுப்பினர் எஸ்.அருணகிரிநாதன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள் வழங்குவார். வெளியீட்டுரையை ஆறு.திருமுருகனும், மதிப்பீட்டுரையை அதிபர் ஆ.சிவநாதனும் நிகழ்த்துவார்கள்.

இறுதியில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் சுயதொழிலை மேற்கொண்டுள்ளவர் ஒருவருக்கு சைக்கிளும் புலோலி மெ.மி.த.க.பாடசாலையைச் சேர்ந்த 300 மாணவர்களுக்கு தண்ணீர்ப் போத்தல்களும் சமூக சேவைத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும். (வ-173)

## அபிராமிப்பட்டர் குருபூசை விழா

யாழ்ப்பாணம், ஜன.30

தீவகப் பிரதேச அறநெறி ஒன்றியமும் தான்தோன்றி மனோன்மணி அம்பாள் ஆலய சைவ மகா சபையினரும் இணைந்து நடத்தும் அபிராமிப்பட்டர் குருபூசை விழா இன்று வியாழக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு குறித்த ஆலயத்தில் இந்துசமய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி உதயகலா ஜெயந்திரன் தலைமையில் நடைபெறும். நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக நாரந்தனை கணேச வித்தியாசாலை அதிபர் திருமதி பிரேமவல்லி சற்குணராசா கலந்து கொள்வார். (வ)

## உற்பத்தித்திறன் விருதுக்கான தெளிவூட்டல் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜன.30

தேசிய உற்பத்தித் திறன் விருதுக்கான தெளிவூட்டல் செயலமர்வு யாழ்.மாவட்ட செயலகத்தால் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை நடத்தப்படவுள்ளது.

காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் முற்பகல் 11 மணி வரை பாடசாலைத் துறைக்கும் முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை அரசுத்துறைக்கும் பிற்பகல் 2 மணி முதல் மாலை 4 மணி வரை தனியார்துறைக்கும் என்ற வகையில் தெளிவூட்டல் செயலமர்வு இடம்பெறும்.

தேசிய உற்பத்தித் திறன் போட்டி தொடர்பாக தேசிய உற்பத்தித் திறன் மேம்பாட்டு அமைச்சின் உற்பத்தித் திறன் செயலகத்தின் ஏற்பாட்டில் இந்தத் தெளிவூட்டல் செயலமர்வு நடத்தப்படுகிறது. இந்தச் செயலமர்வில் மேற்குறித்த துறை சார்பில் பிரதிநிதி ஒருவரைக் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளது. (வ-7)

**விற்பனைக்கு**
கிறேட் டேன் பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு.
தொடர்பு:077 605 3845

**நிதி முகாமையாளர் தேவை**
(Finance Manager)
தகைமைகள்:
1) வயது 30-45 இற்கு இடைப்பட்டவர்கள் (ஆண்கள்)
2) அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் கணக் காளருக்கான பட்டம் பெற்றவர்.
3) ஐந்தாண்டுகள் நிதி முகாமையாளராக பணியாற்றிய அனுபவம்.
4) யாழ் மாநகர சபைக்கு அண்மையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
மேற்படி தகைமையுடைய விண்ணப்பதாரிகள் தங்களது சுயவிவரக்கோவையை பின்வரும் முகவரிக்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
**அன்னை நாகா பூட் சிற்றி**
இல. 175, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி: annainagaa@yahoo.com
தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
(சி/11330)(7.6)


**DIPLOMA IN ENGLISH**
(LISTENING, SPEAKING, WRITING, READING)
யாழ் மாவட்டத்தில் ஆங்கிலமொழி கற்பிக்கும் முதன்மை நிறுவனம்
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன......
01.02.2014 காலை 9.30 மணி
(சனி/ஞாயிறு தினங்களில் காலை 9.30-12.00 வரை)
பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன........
IELTS Test Registration & Preparation Classess
U.K க்கான விசாவில் செல்பவர்களுக்கானது
A1,B1
E-CITY FEEL BRILLIANT FUTURE
COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT
Srilanka's NO.#1 English, Other Languages and Computer Training Centre
நாங்கள் உங்களை நம்பிக்கையாக ஆங்கிலம் பேச வைக்கிறோம்.
இல.372(1ஆம் மாடி) ஆனைப்பந்தி, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (வீரமாகாளி அம்மன் கோவில் அருகில்)
0212217106 :: 0774924166 :: 0773400418 :: 0770610271
(C/11328)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியமராதோரின் தொகையை கண்டறிவதற்கு கலந்துரையாடல்

## *கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா செயலகங்களில்*

முல்லைத்தீவு, ஜன. 30
வன்னி மாவட்டங்களில் இதுவரை மீள்குடியமர்வு செய்யப்படாமல் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன.
முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் இதுவரை மீள்குடியமர்வு செய்யப்படாமல் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை தொடர்பில் மாறுபட்ட கருத்துக்கள் வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில் இந்தக் கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன.
இந்தக் கலந்துரையாடல்கள் கடந்த 23 ஆம் திகதி வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்டத்திலும், மறுநாள் வெள்ளிக்கிழமை வவுனியா மாவட்டத்திலும், 25 ஆம் திகதி சனிக்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்ட செயலகங்களில் இடம்பெற்றன.
மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடல்களில் ஜனாதிபதி செயலணியினர் மற்றும் யூ.என்.எச்.சீ.ஆர் பிரதிநிதிகள், மாவட்டச் செயலர்கள், பிரதேச செயலர்கள் என மட்டுப்படுத்தப்பட்ட குழுவினர் கலந்துகொண்டிருந்தனர். இதுவரை காலமும் மீள்குடியமர்வு செய்யப்படாமல் எவரும் இல்லை என்று கூறிவந்த அரசின் கூற்று இக் கலந்துரையாடல்கள் மூலமாகப் பொய்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் 61 குடும்பங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 87 குடும்பங்களும், வவுனியா மாவட்டத்தில் 661 குடும்பங்களும் மீள்குடியமர்த்தப்பட வேண்டிய நிலையில் உள்ளதாக இந்தக் கலந்துரையாடல்கள் மூலமாகத் தெரியவந்துள்ளது. இதை அரச தரப்பினரும் ஏற்றுக் கொண்டுள்ளதாகச் சொல்லப்பட்டது.
இந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கேப்பாபிலவு கிராமத்தில் வசித்து வந்த சுமார் 203 குடும்பங்கள் படைத்தரப்பினால் அவர்களின் வசிப்பிடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டு அந்தக் கிராமத்தின் அருகில் உள்ள வேறொரு பிரதேசத்தில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இந்த மக்களின் வாழ்வாதார நிலை இதுவரை மேம்படுத்தப்படாத நிலையில் உள்ளதோடு அவர்களின் காணிகளுக்கு இதுவரை உரிய நட்டஈடு அரசினால் வழங்கப்படாத நிலையே காணப்படுகின்றது.
இவர்களையும் இடம்பெயர்ந்தவர்களாகக் கருதப்படல் வேண்டும் என யூ.என்.எச்.சீ.ஆர். தரப்பில் கலந்துரையாடலின் போது வலியுறுத்தப்பட்டது.
இருந்தும் இந்தக் கோரிக்கைகள் தொடர்பில் சாதகமான நிலை இதுவரை காணப்படவில்லை எனக் கூறப்படுகின்றது. கேப்பாபிலவு மக்களுக்கு முன்பு சராசரியாக ஒருவருக்கு 2 ஏக்கர் தொடக்கம் 4 ஏக்கர் வரை காணிகள் இருந்ததாகவும் தற்போது ஒரு குடும்பத்துக்கு தலா கால் ஏக்கர் காணி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.
(க-122)



*சுவிஸ் அபிவிருத்தி நிறுவன ஆலோசகர் எட்வேட் ஆச்சிபோல்ட், பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்கின்றார். அருகில் யுனிசெப் நிறுவனத் தின் பிரதிநிதியான உனாமிக் கௌலி, .*

## ஜெயபுரம் பாடசாலையில் கட்டடத் தொகுதி திறப்பு

பூநகரி, ஜன.30
பூநகரி ஜெயபுரம் மகா வித்தியாலயத்தில் ஆஸ்திரேலிய அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட புதிய கட்டடத் தொகுதிகளைத் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.
பாடசாலையின் அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா நாடாவை வெட்டி கட்டடத்தைத் திறந்து வைத்தார்.
வகுப்பறைகளை சுவிஸ் நாட்டின் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான அபிவிருத்தி நிறுவன ஆலோசகர் எட்வேட் ஆச்சிபோல்ட், வடமாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வராஜா, யுனிசெப் நிறுவனத்தின் பிரதிநிதியான உனாமிக் கௌலி, பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.தர்மரட்ணம், பூநகரிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், அந்தப் பகுதிக்கான இராணுவ அதிகாரி ஆகியோர் திறந்து வைத்தனர்.
இங்கு வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் உரையாற்றுகையில்;
எந்தப் பாடசாலைகளில் வசதிகள் உள்ளனவோ அங்கு தமது பிள்ளைகளைப் பெற்றோர் இணைத்துக் கொள்ளும் நிலை உருவாக வேண்டும்- எனத் தெரிவித்தார்.

**எந்தப் பாடசாலைகளில் வசதிகள் உள்ளனவோ அங்கு தமது பிள்ளைகளைப் பெற்றோர் இணைத்துக் கொள்ளும் நிலை உருவாக வேண்டும்- எனத் தெரிவித்தார்.**

மேலும் அவர் உரையாற்றுகையில்;
ஜெயபுரம் மகா வித்தியாலயத்தின் புதிய கட்டடத் தொகுதிகளை அமைக்க நிதியுதவி வழங்கிய ஆஸ்திரேலிய அரசுக்கும் நிதியுதவியைப் பெற்றுத் தந்த யுனிசெவ் நிறுவனத்துக்கும் வட மாகாண கல்வி அமைச்சின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இந்தப் பகுதி மக்களுக்கும் பிள்ளைகளுக்கும் அழகான கட்டடத் தொகுதி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. எல்லா வசதிகளும் தற்போது இந்தப் பாடசாலையில் உருவாக்கப்பட்டுள்ளன- என்றார். (க-18)

## விவசாயத்துக்கு பாதிப்பு

முல்லைத்தீவு, ஜன.30
முல்லைத்தீவு மாவட்டம் அலைகல்லு போட்ட குளத்தின் கீழ் செய்கை பண்ணப்பட்ட விவசாயம், நீர் இல்லாததால் பாதிக்கப்பட்டு வருவதாக விவசாயிகள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.
அலைகல்லுப் போட்ட குளமானது, முறிகுளமாக உள்ளதோடு புனரமைக்கப்படாத நிலையில் காணப் படுவதால் குளத்தில் நீர் தங்காது வெளியேறி விடுகின்றது. இதனால் செய்கை பண்ணப்பட்ட விவசாயத்தைக் கைவிட வேண்டிய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளதாக விவசாயியான வேதயாபரன் தெரிவித்தார்.
இந்தக் குளத்தைப் புனரமைக்குமாறு உரியவர்களுக்கு அறிவித்தும் பயன் கிட்டவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.
இது போன்று மேலும் பல குளங்கள் உடைப்பெடுத்த நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (க-500)

## ஊற்றுப்புலம் வர்த்தகர்களின் காணிப் பிரச்சினைக்குத் தீர்வு

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஊற்றுப் புலம் சந்தி வர்த்தகர்களிடையே நிலவி வந்த காணிப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.
கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஊற்றுப்புலம் சந்தியில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் வியாபாரிகள் பல தடவைகள் போரினால் பாதிக்கப்பட்டு மீள் குடியமர்வின் பின்னர் தமது வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். ஆனால் இவர்களது வர்த்தக நிலையங்கள் அமைந்துள்ள காணிகள் பிரதேச சபைக்குச் சொந்தமானவையென்றும், வர்த்தகர்கள் வரி செலுத்த வேண்டுமெனவும் பிரதேச சபையால் வற்புறுத்தப்பட்டு வந்தது. குறித்த காணி விடயம் தொடர்பாக பிரதேச செயலர் மற்றும் காணி உத்தியோகத்தர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்து, கடந்த மாதம் இந்தப் பகுதியில் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர், பிரதேச செயலர் ஆகியோர் வர்த்தகர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர். அதன் போது குறித்த காணிகள் அரசுக்குரியவை எனவும், நீண்ட கால குத்தகையடிப்படையில் வர்த்தகர்களுக்கு இவற்றை வழங்குவதெனவும் முடிவு எடுக்கப்பட்டது. அதன் பிரகாரம் காணி ஆவணங்களை வழங்குவதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (க-55)

**காணி விடயம் தொடர்பாக பிரதேச செயலர் மற்றும் காணி உத்தியோகத்தர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்து கடந்த மாதம் இந்தப் பகுதியில் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர், பிரதேச செயலர் ஆகியோர் வர்த்தகர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.**


## குளத்திலிருந்து நீர் விநியோகம்

*நெற் பயிர்களைக் காப்பாற்றும் பொருட்டு*

முல்லைத்தீவு, ஜன.30
முத்துஐயன் கட்டுக் குளத்திலிருந்து விவசாயத்துக்கு நீர் திறந்து விடப்பட்டுள்ளது.
போதிய மழை வீழ்ச்சி இல்லாததால் நெற் பயிர்களைக் காப்பாற்றும் பொருட்டு குளத்து நீர் திறந்து விடப்பட்டுள்ளது. போதியளவு மழைவீழ்ச்சி இல்லாததால் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள குளங்களின் நீர்மட்டம் உயரவில்லை. இதனால் விவசாயச் செய்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.
இடையிடையே சிறு சிறு மழை பெய்தாலும் கதிர் வந்த நிலையில் காணப்படும் நெற் பயிர்கள் பாதிக்கப்படும் நிலையில் காணப்பட்டன. முத்துஐயன் கட்டுக் குளத்திலும் குறைந்த அளவில் நீர் உள்ள போதிலும், நீர் திறந்து விடப்பட்டதால் ஓரளவாவது குளத்தை அண்டிய விவசாயத்தைக் காப்பாற்றலாம் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.
ஆனால் மானாவாரிச் செய்கைகள் கேள்விக்குறியாகவே உள்ளன. முத்துஐயன்கட்டு குளத்தின் கீழ் சுமார் 5,000 ஏக்கர் காணியில் விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.
(க-500)

## ஒட்டுசுட்டானில் வேலைத் திட்டங்கள்

முல்லைத்தீவு, ஜன.30
ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மின்சார விநியோகத்துக்கான வேலைத் திட்டங்கள் இடம்பெற்று வரும் அதேவேளை, ஒட்டுசுட்டான் புதுக்குடியிருப்பு வீதியின் புனரமைப்புப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
மின்னிணைப்பு, வீதிப் புனரமைப்பு ஆகிய இரண்டு விடயங்களும் நீண்டகாலமாகக் கவனிப்பாரற்றுக் கிடந்த நிலையில் தற்போது இவையிரண்டுமே இடம்பெற்று வருகின்றன.
புதுக்குடியிருப்பு பிரதேசத்திலிருந்து வீதிப் புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகித் தொடர்ந்து இடம்பெறுகின்றன.
இந்த வீதிப் புனரமைப்பு மக்களின் பயன்பாட்டுக்கு மிகவும் பயன் உள்ளதாக அமையுமென மக்கள் தெரிவிக்கின்றனர். (க-500)



## மாணவருக்கு பால் வழங்கல்

பாடசாலைகளில் அறிமுகம் செய்யப்பட்டு வரும் பாடசாலை மாணவர்களுக்கு பால் வழங்கும் நிகழ்வு அண்மையில் வவுனியா முருகனூர் சாரதா வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டபோது அதில் கலந்து கொண்ட வவுனியா நகர கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.பி. நடராஜா வைபவ ரீதியாக மாணவர்களுக்குப் பால் வழங்கி வைத்தார். பாடசாலையின் அதிபரும், ஆசிரியை ஒருவரும் அருகில் காணப்படுகின்றனர். (க-421)

## நிறைவேற்றப்படாத தேவைகள்

முல்லைத்தீவு மாவட்டத்தின் மீள்குடியமர்வுப்பணிகள் கடந்த 2012 செப்ரெம்பர் மாதத்துடன் நிறைவடைந்துள்ள போதிலும் மக்களின் ஏராளமான தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் இருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.
அண்மையில் விசுவமடுவுக்கு வருகை தந்த அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில் ;
முல்லைத்தீவு மாவட்டத்தில் 2010 ஆம் ஆண்டு விசுவமடுப் பகுதியில் முதலாவது மீள் குடியமர்வு ஆரம்பிக்கப்பட்டு, 2012 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்துடன் நிறைவு பெற்றது.
மேலும், முல்லைத்தீவு மாவட்டத்தின் ஆறு பிரதேச செயலர் பிரிவுகளான மாந்தை கிழக்கு, துணுக்காய், ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, கரைதுறைப் பற்று, வெலிஓயா ஆகிய பகுதிகளில் மீள்குடியமர்ந்த மக்களின் தேவைகள் ஏராளமாக உள்ளன. அவை படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் தெரிவித்தார். (க-55)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்த்தக நிலையத்துக்கு வெள்ளியில் விடுமுறை

மட்டக்களப்பு.ஜன.30
அக்கரைப்பற்று மாநகரசபை நகர பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையங்களில் தொழில் புரியும் தொழிலாளர்களின் நன்மைகருதி வெள்ளிக்கிழமை தோறும் வர்த்தக நிலையங்களை மூடி அன்றையதினம் தொழிலாளர்களுக்கு விடுமுறை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
அக்கரைப்பற்று வர்த்தக சங்க தலைவர் எம்.எம்.லியாக்கத் தலி தலைமையில் அட்டாளைச்சேனை பிரதான வீதியில் அமைந்துள்ள ஐ.சி.பி.எஸ். கல்வி நிலை யத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெற்ற கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.
இந்தக் கூட்டத்தில் அக்கரைப்பற்று மாநகர முதல்வர் ஏ.அகமட் ஸகீ, அக்கரைப்பற்று பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ. றாஸீக் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ச)



திருகோணமலை கல்வி வலயத்தைச் சேர்ந்த வலயக்கல்விப் பணிப்பாளர் என்.விஜேந்திரன் தலைமையிலான உயரதிகாரிகள், பெரியகல்லாறு மெதடிஸ்த மிஷன் பெண்கள் பாடசாலைக்கு வருகைதந்து வகுப்பறைகளைப் பார்வையிட்டனர்.

## உயிரிழந்த நிலையில் யானை மீட்பு

வாகரை பிரதேச செயலர் பிரிவில் யானை ஒன்று உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டது என்று வாகரை பிரதேச செயலர் செல்வி ஆர்.ராகுலநாயகி தெரிவித்தார்.
திங்கட்கிழமை பிற்பகல் பொதுமக்கள் யானை ஒன்று புனானை கிழக்குகிராம சேவகர் பிரிவில் ஓமடியாமடு கிராமத்தில் 26 ஆம் வாய்க்கால் பகுதியில் உயிரிழந்த நிலையில் காணப்படுவதாக கிராம சேவை உத்தியோகத்தருக்குத் தெரியப்படுத்தியதையடுத்து வாகரை மற்றும் வாழைச்சேனை பொலிஸார், மட்டக்களப்பு வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் ஆகியவற்றுக்கு தகவல் வழங்கப்பட்டது என்று அவர் கூறினார். (ச)

## தென்கிழக்கு பல்கலையில் இதழியல் டிப்ளோமா

மட்டக்களப்பு.ஜன.30
தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் இதழியல் டிப்ளோமா பாடநெறியை ஆரம்பிக்குமாறு அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் தலைவர் மீரா. எஸ்.இஸ்ஸடீன், துணை வேந்தர் எஸ்.எம்.எம்.இஸ்மாயிலிடம் விடுத்த வேண்டுகோளை ஏற்று இதழியல் டிப்ளோமா பாட நெறியை ஆரம்பிக்க அவர் இணக்கம் தெரிவித்துள்ளார்.
அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்களினதும், ஊடக ஆர்வலர்களினதும் நலன் கருதி தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இதழியல் டிப்ளோமா பாடநெறியை ஆரம்பிக்குமாறு அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் தலைவர் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய பல வருடங்களுக்குப் பின்னர் இந்தவருடம் இதழியல் டிப்ளோமா பாடநெறி ஆரம்பிக் கப்படவுள்ளது.
பல வருடங்களுக்கு முன்னர் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இதழியல் டிப்ளோமா பாடநெறி நடைபெற்று வந்த போதிலும் அது இடைநடுவில் நிறுத்தப்பட்டது.
இதனால் அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஊடகவியலாளர்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டு, சிலர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இதழியல் பாடநெறியை தொடர வேண்டிய சூழ் நிலைக்குத் தள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# புதிய படைப் பிரிவுக்கு கிழக்கில் தலைமையகம்

### இராணுவத் தளபதி திறந்து வைத்தார்

ஏறாவூர்.ஜன.30
இலங்கை இராணுவம் புதிதாக உருவாக்கிய 24ஆவது பிரிவின் புதிய தலைமையகம் அம்பாறை மாவட்டத்தில் உள்ள மல்வத்தையில் இலங்கை இராணுவத் தளபதியால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.



புதிதாக உருவாக்கிய 24ஆவது பிரிவின் புதிய தலைமையகத்தை அம்பாறையில் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் தயா ரத்நாயக்க திறந்து வைத்தார்.

கிழக்கு படைத் தலைமையகத்தின் கீழ் இலங்கை இராணுவத்தின் 24ஆவது பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.
ஏற்கனவே திருகோணமலையில் 22ஆவது பிரிவும், மட்டக்களப்பு, குடும்பிமலையில் (தொப்பிகல) 23ஆவது பிரிவுமாக இலங்கை இராணுவத்தின் இரண்டு பிரிவுகள் கிழக்கில் நிலைகொண்டுள்ளன.
இந்தநிலையில், அம்பாறை மாவட்டத்திலுள்ள மல்வத்தையில் புதிதாக உருவாக்கப்பட்ட 24ஆவது பிரிவின் தலைமையகம் அமைக்கப்பட்டுள்ளது.
நேற்றுமுன்தினம் வெலிகந்தையில் உள்ள கிழக்குப் படைத் தலைமையகம், குடும்பிமலையில் (தொப்பிகல) உள்ள 23 ஆவது பிரிவு தலைமையகம் ஆகியவற்றுக்குச் சென்ற இலங்கை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் தயா ரத்நாயக்க, மல்வத்தையில் உள்ள 24 ஆவது பிரிவுக்கும் சென்றுள்ளார்.
இதன்போதே அவர், 24ஆவது பிரிவின் புதிய தலைமையகத்தை திறந்து வைத்துள்ளார்.
போர் முடிவுக்கு வந்த பின்னர், இலங்கை இராணுவம் உருவாக்கியுள்ள முதலாவது பிரிவுத் தலைமையகம் இதுவாகும். (ச)


## மரண அறிவித்தல்




## திருமதி பராசக்தி (துரையம்மா) கதிரவேலு

சரவணையைப் பிறப்பிடமாகவும், கேசாவில் பிள்ளையார் கோயிலடி, தலையாளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி (துரையம்மா) கதிரவேலு 28.01.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற கதிரவேலுவின் மனைவியும், பரமேஸ்வரன், இராஜேஸ்வரி, புவனேஸ்வரி, பத்மாவதி, பிரபாகரன், இராஜமலர் ஆகியோரின் தாயும், ராஜேஸ்வரி, குமாரசாமி, காலஞ்சென்ற இராஜேந்திரம் மற்றும் தில்லைநாதன், நிர்மலா, தேசகுமார் ஆகியோரின் மாமியும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், கமலம், துரைராசா, ஸ்ரீதேவி, கமலாதேவி, கருணா மற்றும் துரைமணி ஆகியோரின் சகோதரியும், மதுரா, கல்பனா, சந்திரமோகன், சோபனா, நித்தியலக்சுமி, மகாலக்சுமி, விஜயலக்சுமி, கலைவாணி, யாழினி, தமிழினி, குமுதா, வினோபன், கீர்த்தீபன், நிதுஷா, பிரதீப், நிவேதிகா, நிருத்திகா, குருபரன், சரவணன், ஆகியோரின் பேர்த்தியும், இந்துஜன், விதுஷன், அஷ்வினி, ஆரபி, சஹானா, நிலேஷ், அஷ்வந், அக்ஷதா, யஸ்வின், மனோஜ், அஷ்வினி, அஷாந்தி, ஜானவி, யதுஷன், விதுஷா, விகாஷ், ஹாசினி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2014) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் பிற்பகல் 4 மணிக்கு இடம்பெற்று, பூதவுடல் தகனத்துக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.
இல.38, அச்சுக்கூட ஒழுங்கை,
கொக்குவில். (44132)(2.6)
தகவல்: குடும்பத்தினர்.


## அஷ்ரப் ஆதார வைத்தியசாலைக்கு தன்னியக்க நவீன உபகரணம்

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த ஆதார வைத்தியசாலையின் கண் சிகிச்சைப் பிரிவுக்கென, கொமர்ஷல் வங்கியின் சமூகப் பொறுப்பு நிதியம் முக்கிய நவீன உபகரணமொன்றை அன்பளிப் புச் செய்துள்ளது.
கொமர்ஷல் வங்கியின் கல்முனைக் கிளையின் முயற்சியால் இந்தக் கண்சிகிச்சைப் பிரிவுக்கு முக்கிய தேவையாக இருந்த கண்ணாடிப் பரிசோதனைக் கான தன்னியக்க நவீன உபகரணமே அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
பன்னிரண்டு லட்சம் ரூபா பெறுமதியான இந்த நவீன தன்னியக்க உபகரணத்தின் கையளிப்பு வைபவம் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த ஆதார வைத்திய சாலை மண்டபத்தில் திங்கட்கிழமை வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ஏ.என்.எம்.நஸீர் தலைமையில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் கல்முனை கொமர்ஷல் வங்கிக் கிளையின் முன்னாள் முகாமையாளர் எம். எஸ்.ராஜன், புதிய முகாமையாளர் ஜே.எம்.சித்திக், பிரதி முகாமையாளர் ஐ.எம். பாயிஸ், வங்கி உத்தியோகத்தர் எம்.கே. எம். றத்தீப் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச-30)



கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த ஆதார வைத்தியசாலை கண் சிகிச்சைப் பிரிவுக்கு நவீன உபகரணம் ஒன்றை கொமர்ஷல் வங்கியின் கல்முனைக் கிளை முக்கியஸ்தர்கள், வைத்தியசாலை அத்தியட்சகர் ஏ.எல்.எம். நஸீரிடம் கையளித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## போதைப்பொருளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

போதைப்பொருள், எத்தனோல், சட்டவிரோத நடவடிக்கைகள் மற்றும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையை இரத்துசெய்வதற்கு எடுக்கப்படும் முயற்சி ஆகியவற்றுக்கு எதிராக ஜனநாயக கட்சியின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் கொழும்பு ஐந்துலாம்பு சந்தியிலிருந்து தொழிநுட்பக் கல்லூரிச் சந்தி வரை நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது. (ச)

## ஜனாதிபதியின் மாளிகைக்குள் நுழைய முயன்றவர் கைது

கொழும்பு, ஜன.30

கண்டியிலுள்ள ஜனாதிபதியின் மாளிகைக்குள் நேற்றுமுன்தினம் மாலையில் நுழைய முயன்ற கட்டுகஸ்தோட்டையை சேர்ந்த ஒருவரை அங்கிருந்த பாதுகாப்புத் தரப்பினர் பிடித்து தம்மிடம் ஒப்படைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தனது பிள்ளையைப் பாடசாலையில் தரம் ஒன்றுக்கு சேர்க்காமை தொடர்பில் ஜனாதிபதியிடம் முறையிடவேண்டும் என்றே தாம் அங்கு சென்றதாக கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் தெரிவித்துள்ளார்.

குறித்த நபர் கண்டி, மனநல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச)

# தேர்தலில் போட்டியிடும் எண்ணம் எனக்கில்லை

### சந்திரிகா தெரிவிப்பு

கொழும்பு, ஜன.30

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராகப் போட்டியிடுமாறு சில அரசியல் கட்சிகள் என்னைக் கோரியுள்ளன.

எனினும் நான் அதற்கு உடன்படவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போதே இந்தக் கருத்தை அவர் வெளியிட்டார்.

தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் தமது எண்ணத்தில் மாற்றங்கள் ஏற்படலாம்.



சந்திரிகா குமாரதுங்க

எனினும் தற்போதைய சூழ்நிலையில் அதற்கு வாய்ப்பில்லை என்று சந்திரிகா குறிப்பிட்டார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள அச்சமான சூழ்நிலை காரண

"-"

**இலங்கையில் ஏற்பட்டுள்ள அச்சமான சூழ்நிலை காரணமாக எவரும் இலங்கை தொடர்பில் பேச முன்வருவதில்லை.**

மாக எவரும் இலங்கை தொடர்பில் பேச முன்வருவதில்லை என்றும் அவர் கூறினார். (ச)

# மின் நிலையத்தைச் சீர்செய்ய உதவிகள் வழங்குகிறது சீனா

### நிபுணர் குழுவை அனுப்பவும் இணக்கம்

கொழும்பு, ஜன.30

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் தொடர்ந்து ஏற்படும் கோளாறு தொடர்பில் தீர்வு காண்பதற்குத் தேவையான சகல உதவிகளையும் வழங்க சீனா உறுதியளித்துள்ளது. இதற்குத் தேவையான நிபுணர் குழுவொன்றை இலங்கைக்கு அனுப்பவும் இணக்கம் தெரிவித்துள்ளது.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் தற்போதைய நிலைமை குறித்து மின்சக்தி எரிசக்தி அமைச்சருக்கும் சீன தூதரக அதிகாரிகளுக்குமிடையில் நேற்றுமுன்தினம் விசேட பேச்சு இடம்பெற்றது. மின்சக்தி எரிசக்தி அமைச்சில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் நுரைச்சோலை அனல் மின் நிலையத்தை செயற்திறன் மிக்கதாக மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டது.

மின் நிலைய பிரதான இயந்திரம் மற்றும் உபகரணங்களின் நிலைமை குறித்து ஆராயவும், அவற்றிலுள்ள கோளாறுகளை அடையாளம்கண்டுதிருத்தவும் இதன்போது இணக்கம் காணப்பட்டது என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

# தேர்தலில் தனித்தே போட்டி

### ரவூப் ஹக்கீம் உறுதி

கொழும்பு, ஜன. 30

தேர்தலில் அரசுடன் இணைந்தே போட்டியிடவேண்டும் என ஜனாதிபதி கேட்டுக்கொண்ட போதிலும் தனித்துப் போட்டியிடும் முடிவை நாம் திட்டவட்டமாக ஜனாதிபதிக்கு தெரிவித்துவிட்டோம் என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கொழும்பு, ஹனேமுல்ல முகாம் பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் கண்டி மாவட்டத்தில் தேர்தல் வேட்பாளராக நின்ற போது பல பாதுகாப்பு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கவேண்டி ஏற்பட்டது. அவ்வேளை என் பாதுகாப்பை உறுதிப்படுத்தியது ஹனேமுல்ல மக்கள்தான்.

முஸ்லிம் காங்கிரஸின் பலவீனம் அரசில் அங்கமாக இருப்பதுதான் என சிலர் கூறுகின்றனர். இன்று முஸ்லிம்கள் மத்தியில் பிரதானமான பேசுபொருளாக இருப்பது அரசைப் பற்றிய விமர்சனம்தான். அரசுடன் நாம் இணைந்திருப்பது அநேகருக்கு ஜீரணிக்க கஷ்டமாக இருக்கின்றது.

என்னைப் பொறுத்தவரை எமது கட்சியின் பலம் அரசுடன் இருந்துகொண்டே தனித்து தேர்தலில் போட்டியிடுவதற்கான திராணியாகும். தனித்துப் போட்டியிடும் முடிவை நான் ஜனாதிபதிக்கு தெளிவாகக் கூறிவிட்டேன்.

நான் அரசுடன் இருந்து கொண்டே அதனை பலவீனப்படுத்துவதாதகவும் சிலர் தெரிவிக்கின்றனர்.

முஸ்லிம்களுக்கு எதிரான விடயங்களில் நான் உள்ளிருந்து கொண்டே போராடுவதால் ஜனாதிபதிக்கும் அரசுக்கும் சங்கடமாகவுள்ளேன்.

எனது பேச்சுக்களில் கனதியும் பக்குவமும் இருக்க வேண்டும். அதனையே சமூகம் என்னிடம் எதிர்பார்க்கின்றது.

அமைச்சரவையில் நடப்பவற்றை எல்லாம் தெருவில் வந்து பேசமுடியாது. அது நாகரீகமற்றது. கூட்டுப்பொறுப்பை மீறும் செயல் மட்டுமன்றி சம்பிரதாயத்துக்கு விரோதமானதும் கூட. அரசைவிட்டு நான் வெளியேறினால் என்னை சில நாள்கள் கொண்டாடுவார்கள். இதனால் எதுவும் நடக்கப் போவதில்லை.

சரியான முடிவை சரியான நேரத்தில் எடுக்க வேண்டும். பிழையான சந்தர்ப்பத்தில் எடுக்கும் சரியான முடிவும் பிழையானதே என மறைந்த எம் தலைவர் கூறியதையே நானும் கூறுகின்றேன்.

நாம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சிந்தித்தே முடிவெடுப்போம்; எடுத்தோம். நாங்கள் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு கிழக்கில் ஆட்சி அமைக்க ஒத்துழைத்திருந்தால் வட மாகாண சபைத் தேர்தலே நடந்திருக்காது. 13ஆவது திருத்தமும் இல்லா தொழிக்கப்பட்டிருக்கலாம்.

மாகாண சபை முறைமை இல்லாதொழிக்க வேண்டுமென அமைச்சரவையில் குறிப்பிட்ட போது அதனை நான் வன்மையாக எதிர்த்தேன். அதனை ஒழிக்கக் கூடாதென வாதாடினேன்.

மாகாண சபை முறைமை வேறு மாகாணங்களுக்கு அதிக முக்கியமில்லாது விடாலும் வடக்குக்கு முக்கியமானது.

இந்தச் சந்தர்ப்பத்தில் முஸ்லிம்களின் பிரச்சினையை சர்வதேசமயப்படுத்துவதிலும் நாம் நிதானத்தை கடைப்பிடிக்க வேண்டும்.- என்றார். (ச-10)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வருமுன் காக்கும் பொறுப்பை உதாசீனம் செய்த போக்கின் வினை

மார்ச் மாதம் ஜெனிவா மனித உரிமைகள் சபையில் கொண்டுவரப்படவுள்ள இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஒன்றுக்கு. அனுசரணை வழங்கப்போவதாக அமெரிக்கா கடந்த திங்கட்கிழமை உறுதிப்படுத்தியிருந்தபோதிலும், அனைத்துலக விசாரணை ஒன்றுக்கான அழைப்பை அது விடுக்குமா என்பது குறித்து எதனையும் தெரிவிக்கவில்லை.

ஆனால் வாஷிங்டனிலுள்ள மனித உரிமைகள் கண்காணிப்பகத்துக்கான ஆசிய வழக்காடல் பணிப்பாளர் ஜோன் சிப்டன் தெரிவித்துள்ள கருத்து. அனைத்துலக விசாரணையே அமெரிக்காவின் இறுதி இலக்கு என்பதைப் புலப்படுத்துகிறது. பொறுப்புக்கூறும் கடப்பாட்டை நிறைவேற்றும் எண்ணம் இலங்கை அரசுக்கு இல்லை என்ற யதார்த்த நிலைமையை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும் என்று சிப்டன் தெரிவித்துள்ளார். பொறுப்புக்கூறும் கடப்பாட்டை இலங்கை நிறைவேற்றப் போவதில்லையென்றால். அனைத்துலக சமூகம் அதனைச் செய்யவேண்டி ஏற்படும் என்றும் கூறியுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலைக்கு ஒப்பானது. இதனை அனைத்துலக விசாரணையின் மூலம் அனைத்துலகச் சமூகம் வெளிப்படுத்த வேண்டும் என்று வடமாகாணசபை அதிரடியாகத் தீர்மானம் நிறைவேற்றிய சூடு அடங்குவதற்கு முன்னர், அனைத்துலக விசாரணைக்குச் சார்பாக ஜோன் சிப்டன் வெளியிட்டுள்ள கருத்தும், அனைத்துலக விசாரணை இலங்கையில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தும் என்று வாஷிங்டனில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க விடுத்துள்ள எச்சரிக்கையும் இலங்கை எதிர்நோக்கும் நெருக்கடிகளை எதிர்வு கூறுகின்றன.

மனித உரிமைகள் சபையின் மார்ச் மாதக் கூட்டத்துக்கான நாள்கள் நெருங்கிவரும்போது. வடமாகாணசபையும் இப்போராட்டத்தில் இணைந்துகொண்டு ஏகமனதாக நிறைவேற்றியுள்ள தீர்மானங்களால் தென்னிலங்கையின் பார்வை வடக்கு நோக்கித் திரும்பியுள்ளதுடன், தெற்குப் பேரினவாதிகளின் கடுமையான விமர்சனங்களும் பெருகி வருகின்றன.

வடமாகாணசபை நிறைவேற்றிய தீர்மானங்கள் வருமாறு:-

- இலங்கையில் நடைபெற்று முடிந்த படுகொலைகள் மற்றும் மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்கு இலங்கை அரசின் உள்நாட்டுப் பொறிமுறையை நிராகரிக்கின்ற அதேவேளை, அனைத்துலக சமூகத்தின் பங்களிப்பின்றி நீதியோ அல்லது அரசியல் தீர்வோ கிட்டும் என்பதில் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை இல்லை-

தமிழ் சமூகத்துக்கு எதிராக இலங்கையில் இழைக்கப்பட்டுள்ள போர்க்குற்றங்கள் மானிடத்துக்கு எதிரான குற்றங்கள். இனச் சுத்திகரிப்பு, இனப்படுகொலைக்கு ஒப்பானவை என்று சொல்லப்படும் மனிதப் படுகொலைகளை விசாரணை செய்வதற்காக பக்கச்சார்பற்ற அனைத்துலக விசாரணையை ஐ.நாவின் துணையோடு அனைத்துலக சமூகம் உருவாக்கவேண்டும்.

- முள்ளிவாய்க்காலில் இடம்பெற்றது இனப்படுகொலைக்கு ஒப்பானது என்பதை நிரூபிக்கும் வகையில் அனைத்துலகத்தின் மேற்பார்வையில் காணாமற்போனோர் தொடர்பாக சுயாதீன விசாரணை நடத்தப்படவேண்டும்.
- இறுதிப் போரில் உயிரிழந்த தமிழ் மக்களுக்கு முள்ளிவாய்க்காலில் நினைவுத்தூபி அமைக்கப்படவேண்டும்.

வடமாகாணசபையின் தீர்மானங்களை தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான அமைச்சர் விமல் வீரவன்ஸ தேசத்துரோகம் என்று வர்ணித்துள்ளார். வடமாகாணசபையைக் கலைத்து. 13ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாதொழிப்பதால் மட்டுமே அரசு அழுத்தங்களிலிருந்து விடுபட முடியும் என்றும் ஆலோசனை கூறியுள்ளார்.

நாம் பெற்றுக்கொண்ட வெற்றியையும் சமாதானத்தையும் சீர்குலைக்க வடமாகாணசபை தீர்மானம் நிறைவேறியுள்ளது என்று அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவும், அரசமைப்பை மீறும் வகையிலான செயற்பாடுகளுக்கு அரசு ஒருபோதும் இடமளியாது என்று வெளிவிவகார பிரதி அமைச்சர் நியோமல் பெரேராவும் முழங்கி உள்ளனர்.

வடமாகாணசபையின் தீர்மானங்கள், தென்னிலங்கை அரச தலைவர்கள் தெரிவிக்கும் கருத்துகள் ஆகியவற்றை நோக்கும்போது தெற்குக்கும் வடக்குக்கும் இடையிலான முரண்பாடுகள் மேன்மேலும் அதிகரிக்கவே செய்யும் எனக் கருதமுடிகிறது.

வடமாகாணசபையின் தற்போதைய நிலைப்பாட்டுக்கு ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன் கூறியுள்ளமை போன்று. மஹிந்த அரசே பொறுப்பு.

அனைத்துலக சமூகத்திடம் தீர்வை எதிர்பார்க்கும் நிலைக்கு தமிழ் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். அரச தலைவர்கள் தமிழ் மக்களுக்கும்அனைத்துலக சமூகத்துக்கும் தாம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டு. மாகாணசபைத் தீர்மானம் குறித்துக் கண்டிப்பதும் எச்சரிப்பதும் எவ்வித மாற்றத்தையும் தந்துவிடப் போவதில்லை.

வருமுன் காக்கும் பொறுப்பை உதாசீனம் செய்ததால் வந்த வினை இது.

# ஜெனிவாவில் ஓரவஞ்சனை

## குமுறுகிறார் அமைச்சர்

கந்தவனம் கோணேஸ்வரன்

ஜெனிவா கூட்டத் தொடருக்கு இன்னும் ஆறே வாரங்கள் இருக்கின்ற நிலையில், ஜெனிவாவில் இலங்கையை ஏனைய நாடுகளுடன் சமமாக நடத்துகிறார்களில்லையே என்ற ஆதங்கத்தை வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் வெளியிட்டிருக்கிறார். தமது நாட்டின் ஒருபகுதி மக்களைத் தாங்கள் சமமாக நடத்தவில்லை என்பதை மெத்தப்படித்த பேராசிரியர் பீரிஸ் ஒப்புக்கொள்ளத் தயங்கினாலும், தாங்கள் ஜெனிவாவில் சமமாக நடத்தப்படவில்லை என்கிறபோது தங்களால் உள்நாட்டில் இரண்டாம் பட்சமாக நடத்தப்படுகின்ற மக்களின் வலி அவருக்குத் தெரியாமல் போகாது.

அமெரிக்கா அண்மையில்கூட இலங்கைக்கு ஒரு வாய்ப்பை வழங்கியிருந்தது. வடபகுதியிலிருந்து இராணுவம் அகற்றப்படல் வேண்டும்:மாகாண சபைகளுக்குப் பொலிஸ், காணி அதிகாரங்கள் சட்டஏற்பாடுகளில் காணப்படுகின்றவாறு வழங்கப்படல் வேண்டும். வடக்குக் கிழக்கில் சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்படல் வேண்டும். உயர்பாதுகாப்பு வலயங்கள் இல்லாதொழிக்கப்படல் வேண்டும் ஆகிய நிபந்தனைகளை விதித்து, இவற்றை முறைப்படி நடைமுறைப்படுத்த இலங்கை அரசு உடன் நடவடிக்கை எடுக்குமாயின், வருகிற மார்ச்சில் இடம்பெறவிருக்கும் தீர்மானத்தைத் தளர்த்துவதாக அமெரிக்கா அறிவித்திருந்தது.

அமெரிக்காவின் நிபந்தனைகள் எவையும் கபடமானவையல்ல. ஆணைக்குழுக்களோ அல்லது அறிஞர் குழுக்களோ கூடி முடிவெடுக்கவேண்டிய விடயங்களுமல்ல. ஜனாதிபதியின் உத்தரவு ஒன்றே போதும். அனைத்தும் ஓரிரு வாரங்களில் நடைமுறைக்கு வந்துவிடும். ஆனால், இலங்கைஅரசு இவற்றை ஏற்றுச் செயற்படத் தயாரில்லை. மாறாக, எதுவும் செய்யாமல் தப்பித்துக்கொள்ளும் வழிகளைத் தேடுவதிலேயே மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது.

அமெரிக்காவின் நிபந்தனைகள் பற்றி அமைச்சர் விமல்வீரவன்ச தமது அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார். புலிகளால் போராடிப் பெறமுடியாமற் போனதை, அமெரிக்கா நிபந்தனைகள் மூலம் பெற்றுக்கொள்ள முயல்கிறது என்று குற்றஞ்சாட்டியிருக்கிறார். வட பகுதியிருந்து இராணுவத்தை அகற்றி விட்டால் அது தனிநாடாகப் போய்விடலாம் எனப் பிதற்றியிருக்கிறார். தென்னிலங்கையில் தமிழர்கள் வாழ்கின்றபோது வட பகுதியில் சிங்களவர்கள் வாழக் கூடாதா என்றும் கேட்டு வைத்திருக்கிறார். சிங்களமக்களின் உணர்வுகளைத் தமிழர்களுக்கு எதிராகத் தூண்டக்கூடிய வகையில் தனிநாட்டுக் கோரிக்கை என்றும், சிங்கள மக்களின் வாழ்விட உரிமை மறுக்கப்படுகிறது என்றும் பொருள்படும்படியான விளக்கங்களை அளித்திருக்கிறார்.

இராணுவம் அகற்றப்பட வேண்டும் என்பதன் கருத்து எந்தவொரு இராணுவ வீரனும் வடபகுதியில் இருக்கக் கூடாது என்பதல்ல என்பது விமலுக்குப் புரியாததல்ல. வடபகுதியில் தேவையற்ற அளவில் இராணுவக் குவிப்புகள் இடம்பெற்றிருக்கின்றன. அவற்றை அகற்ற வேண்டும் என்று தான் அமெரிக்கா கூறியிருக்கிறதே தவிர, வட பகுதியில் இராணுவத்தைச் சேர்ந்த எவரும் தங்கியிருக்கக்கூடாது என்று கூறவில்லை. இலங்கையின் ஏனைய பகுதிகள்போல் வடபகுதியிலும் இராணுவம் அளவோடு இருந்தால் போதுமானது என்றுதான் தமிழர்கள் கூறுகிறார்கள். இது இராணுவப் புறக்கணிப்பு ஆகாது.



மஹிந்த ராஜபக்ஷ



விமல்வீரவன்ச

> அமைச்சர் விமல்வீரவன்ச தமது அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார். புலிகளால் போராடிப் பெறமுடியாமற் போனதை அமெரிக்கா நிபந்தனைகள் மூலம் பெற்றுக்கொள்ள முயல்கிறது என்று குற்றஞ் சாட்டியிருக்கிறார்.

சிங்களக்குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையை விமல்வீரவன்ச திரித்துக்கூற விழைந்திருக்கிறார். அரசியல் சட்டப்படியும் தரும நியாயங்களின் படியும் இலங்கைப் பிரசை எவரும் தாம் நினைத்தவாறு இலங்கையின் எந்தப்பகுதியிலும் தமது வாழ்விடத்தை அமைத்துக்கொள்ளும் உரிமையில் யாரும் தவறுகாண முடியாது. ஆனால், அரசோ தமிழர்களின் இனச் செறிவைச் சிதைக்கும் வகையில், தமிழர் நிலங்களில் நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள சிங்கள மக்களை அரச செலவில் கொண்டுவந்து குடியேற்றம் செய்து வருகிறது. இதனை வாழ்விடத் தேர்வுக்கான உரிமையின்கீழ் கொண்டுவர முடியுமா என்பதை விமல் போன்ற அமைச்சர்கள் யோசிக்க வேண்டும். தென்னிலங்கை யில் சிங்களவர்களுக்கு உரித்தான நிலப்பரப்பில் எப்போதாவது தமிழ்மக்கள் இத்தகைய முறையில் அரசசெலவில் குடியேற்றப்பட்டிருக்கிறார்களா என்பதையும் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.


அரசும் விமல்வீரவன்சவின் கருத்தைத்தான் கொண்டிருக்கிறது. வடக்கிலுள்ள இராணுவம் அகற்றப்படமாட்டாது என்றும், காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படமாட்டா எனவும் திட்டவட்டமாக அமெரிக்காவுக்கு எடுத்துக்கூறியிருக்கிறது. மார்ச்சில் அமெரிக்காவால் சமர்ப்பிக்கப்படும் பிரேரணையை எதிர்கொள்ளத் தயார் என்றும் தெரிவித்திருக்கிறது.

ஆயினும் ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க அமெரிக்கா சென்றிருந்தார். அவரது பயணத்தின் நோக்கம், அமெரிக்காவைச் சாந்தப்படுத்தி ஜெனிவாப் பிரேரணையின் கடுமையைத் தளர்த்துவதாகவே இருக்கிறது. ஜெனிவா சென்றிருக்கும் செயலர், அங்குள்ள உயர் அதிகாரிகளுடன் இலங்கையின் நிலைப்பாடு தொடர்பாக பேச்சு நடத்தி வருகின்றார். 2013 ஓகஸ்ட்டில் இலங்கை வந்திருந்த மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அம்மையாரின் அறிக்கை தொடர்பாகவும், அவருடன் பவ்வியமாகப் பேசி வருகிறார் எனத் தெரியவருகிறது. லலித் வீரதுங்க ஜெனிவாப் பிரதிநிதிகளைச் சாந்தப்படுத்தி அவர்களின் செயற்பாட்டு வீரியத்தைக் குறைக்க முயன்றுகொண்டிருக்கின்ற அதே நேரத்தில் மட்டக்களப்பில் பொதுமேடையொன்றில் கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்காவுக்கு சவால் விடுத்திருப்பது லலித் வீரதுங்கவுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இதனால் வெகுண்ட லலித் உடனடியாக ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு கோத்தபாயவின் பேச்சுகளைக் கட்டுப்படுத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

அதற்கேற்றாப்போல் உள்நாட்டிலும் அரசு தனது செயற்பாடுகளை வகுத்து வருகிறது. அவசர அவசரமாக காணாமற்போனோர் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டிருக்கின்றன. முதற்கட்ட விசாரணைகள் கிளிநொச்சியில் இடம்பெற்றிருக்கின்றன. அடுத்து முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெறவுள்ளதாகவும் மீண்டும் அதன் பின்னர் கிளி நொச்சியில் விசாரணை கள் தொடரும் எனவும் காணாமற்போனோர் ஆணைக்குழு தெரிவித்திருக்கிறது.

இதேபோல வடபகுதி இராணுவ முகாம்களின் எண்ணிக்கையை வெகுவாகக் குறைக்கும் நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டு வருகிறது. இதன் நோக்கம் இராணுவத்தினரின் எண்ணிக்கையைக் குறைப்பதாகாது. மாறாக, இராணுவ முகாம்களின் எண்ணிக்கையைக் குறைப்பதன் மூலம் அந்தந்தப் பகுதிகளில் மக்களிடமிருந்து பெறப்பட்ட வீடுகளையும் நிலங்களையும் அவர்களிடமே ஒப்படைக்கும் சாத்தியங்களை அதிகரித்துக்கொள்வதாகும். இராணுவத்தினரை வட பகுதியிலிருந்து மீளப்பெறமாட்டோம் என்று உள்ளூரில் பரப்புரை செய்து கொண்டு. முகாம்களின் எண்ணிக்கையைக் குறைத்து பொதுமக்களின் உடைமைகளை அவர்களிடமே திருப்பி ஒப்படைப்பதன்மூலம் சர்வதேச நாடுகளின் மத்தியில் வடபகுதி இராணுவ நிலவரம் தொடர்பாக ஒருவித மயக்க நிலையைத் தோற்றுவிக்க அரசு முனைகிறது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அகிம்சையைக் கற்றுத் தந்த காந்தியடிகள்

**மகாத்மா காந்தியடிகளின் 66 ஆவது சிரார்த்த தினம் இன்றாகும். அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**

எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி.

காந்திஜி என்ற மாமனிதரைப் பற்றி உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானி ஐன்ஸ்டீன் கூறும்போது "இது போன்ற ஒருவர் இரத்தமும் தசையுமாக இந்த மண்ணில் வாழ்ந்தாரா என எதிர்காலச் சந்ததியினர் வியப்படைவார்கள்" என்றார். ஆம் இன்று நாம் அதிசயிக்கும் அளவுக்கு அவருடைய வாழ்க்கை அமைந்திருக்கிறது.

அவர் தன்னுடைய வாழ்க்கையை "ஒரு சத்திய சோதனை" என்று கூறினார். காந்தி வாழ்நாள் முழுவதும் வாய்மையைக் கடைப்பிடிப்பதில் செலவிட்டார். வாழ்நாளின் இறுதிக் காலம்வரை தொடர்ந்து எத்தனையோ சோதனைகள் வந்தபோதும், அவர் மனம் தளரவில்லை. அவருடைய வாழ்க்கை முழுவதும் போராட்டமாகவே இருந்திருக்கிறது.

இப்படிப்பட்ட மகாத்மா, இதே போன்ற ஒரு நாளில் 1948 ஆம் ஆண்டு அவரை விரோதி என்று எண்ணிய ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்டார். அந்தச் சம்பவம் பற்றிக் குறிப்பிட்ட ஜார்ஜ் பெர்னாட் ஷா, மிகவும் நல்லவராக ஒருவர் இருப்பது எவ்வளவு ஆபத்தான விடயம் என்பதை அந்தச் சம்பவம் உணர்த்துவதாகக் கூறினார்.

காந்திஜி ஒரு வகையில் பிடிவாதக்காரர். தான் நினைப் பதைச் சாதிக்க வேண்டும் என்கின்ற உறுதி படைத்தவர். வாய் இருந்தும் ஊமைகளாக வாழ்ந்த கோடிக் கணக்கான மக்களை, சுதந்திரப் போராட்ட உணர்ச் சிமிக்கவர்களாக உருவாக்கியவர் காந்தி அடிகள். இதற்காக அவர் மேற்கொண்ட முயற்சிகளும், நடத்திய போராட்டங்களும் ஏராளம். இந்திய நாட்டின் பட்டி தொட்டி எங்கும் பயணம் செய்து மக்களின் வாழ்க்கை நிலையைப் புரிந்து கொண்டு, அதற்கு ஏற்றபடி திட்டங்களைத் தீட்டி, மகத்தான வெற்றி பெற்ற மகா புருஷராக அவர் விளங்கினார்.

இவ்வாறு அவர் வெளிக்கொணரப்படுவதற்கு அவரது குடும்பமே அடிப்படையாக இருந்திருக்கிறது. அன்பு, சகிப்புத்தன்மை, சமரசநோக்கு, அனைத்து மதங்களையும் சரிசமனாகப் பார்த்தல், உண்ணா நோன்பு ஆகிய குணங்களை சிறுவயதிலிருந்தே தன் தாயார் புத்லிபாயிடமிருந்து கற்றுக் கொண்டார். புத்லிபாய் வீட்டில் ஒரு சிறிய தவறு நடந்தாலும், உண்ணாவிரதம் இருப்பார். சூரியவழிபாடு செய்த பின்புதான் உணவு உட்கொள்வார். மேகங்கள் சூரியனை மறைத்திருந்தால் சூரியன் வெளிப்படுகின்ற வரை உணவு சாப்பிடமாட்டார். காந்தியும் அவருடைய சகோதர சகோதரிகளும் வெளியில் ஓடி சூரியன் மேகத்திலிருந்து வெளிப்பட்டு விட்டதா எனக் கண்டு பிடித்து தாயாரிடம் ஓடி வந்து சொல்வார்கள். அதன் பின்பே அவர் உணவு உட்கொள்வார். ஒருவேளை சூரியன் வெளியே தெரியாமல் போய்விட்டால். "பரவாயில்லை, கடவுள் நான் சாப்பிடுவதை இன்றைக்கு விரும்பவில்லைப் போலும்" எனச் சொல்லி அன்றைக்கு சாப்பிடாமலே தன்னுடைய வேலைகளைச் சுறுசுறுப்புடன் செய்யத் தொடங்கி விடுவார். காந்தி உண்ணாவிரதம் இருந்த காலத்தில் கொஞ்சமும் சோர்வு இன்றி தன்னுடைய வேலையைக் கவனிப்பார் என்பது குறிப்பிடத்தக்கது. காந்தி தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு உண்ணா விரதத்தை ஓர் ஆயுதமாகக் கையாண்டார்.

காந்தியின் தந்தை கரம் சந்த் காந்தி, போர் பந்தரில் திவானாக இருந்த காலத்தில் தன்னுடைய வீட்டுக்கு அருகில் இருந்த கிருஷ்ணன் கோயிலில் அமர்ந்து நாட்டு நிர்வாகத்தைக் கவனித்ததோடு மனைவி சமைப்பதற்குத் தேவையான காய்கறிகளையும் அரிந்து கொடுப்பாராம். இதே குணங்கள் அவரது மகனான காந்தியிடமும் இருந்தன. காந்தி பிற்காலத்தில் ஆசிரமம் நடத்தியபோது பெரிய மனிதரில் இருந்து சிறிய மனிதர்கள் வரை எல்லோரும் சமையல் வேலையைக் கவனிக்க வேண்டும் என்று வற்புறுத்துவார். அவரே ஓர் ஓரமாக அமர்ந்து சமையலுக்குத் தேவையான காய்கறிகளை நறுக்குவார்.

சாதிகளின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வு காட்டப்படுவது சிறுவயதிலேயே காந்திக்குப் பிடிக்காத விடயமாக இருந்தது. உகா என்ற பெயர் உள்ள தோட்டி ஒருவன், அவருடைய வீட்டில் வேலை செய்து வந்தான். அவனைத் தொட்டால் தீட்டு என்று வீட்டில் உள்ளவர்கள் ஒதுங்கிப் போவார்கள். தவறி அவனைத் தொட்டு விட்டால், தீட்டுப்பட்டு விட்டது எனச் சொல்லி உடனே குளிப்பார்கள். காந்திக்கு இதெல்லாம் வேடிக்கையாக இருந்தது. உகாவை அவர் மிகவும் நேசித்தார். அவனை மற்றவர்கள் ஒதுக்கி வைத்துப் பழகுவது அவருக்குப் பிடிக்கவில்லை. அவ்வாறு நடந்து கொள்வது தவறு என்று பெற்றோரிடம் எடுத்துச் சொன்னார். உகாவும் ஒரு மனிதன் தானே எனக் கேட்டார்.

இதற்கு அவருடைய தாயார் வேடிக்கையாகவும் ஒரு விளக்கம் சொன்னார். உகாவைத் தொட்ட தீட்டு நீங்க குளிக்க வேண்டியது அவசியம் இல்லை. அதற்குப் பதிலாக ஒரு முஸ்லிமைத் தொட்டு அந்தத் தீட்டை முஸ்லிமுக்கு மாற்றிவிடலாம் எனச் சொன்னார். ஏனெனில் முஸ்லிமுக்குத் தீட்டுக் கிடையாது. இதுபோன்ற விடயங்களை காந்தியால் புரிந்துகொள்ள முடிந்ததேயில்லை. சிறுவயதில் மனதில் ஆழமாகப் பதிந்து விட்ட இது போன்ற சம்பவங்களே பின்னர் தீண்டாமையை எதிர்த்துப் போராடுகின்ற உறுதியை காந்தியிடம் ஏற்படுத்தின.

உலகம் இன்று அநியாயம், துன்பப் பீடிப்பு, சுரண்டல் ஆகியவை காரணமாக நிலை மாறி நிற்கின்றது. அதிகாரத்தின் பிடியில் மூச்சுத் திணறிக் கொண்டிருக்கின்றது. போர், ஏவுகணை, அணு குண்டு என்று வல்லரசு நாடுகள் தத்தம் பலத்தைப் பரிசீலித்து வருகின்றன. விஞ்ஞானம், அதிகார வர்க்கத்தினதும் முதலாளித்துவத்தினதும் கைகளில் அகப்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட சூழலிலே மனித இனம் தத்தளித்துக் கொண்டிருக்கும்போது அதிலிருந்து விடுபட மேற்கொண்டிருக்கும் முயற்சியின் சின்னமாகவே காந்திஜி விளங்கினார். காந்தியம் என்றும் விளங்குகிறது. அவர் ஒரு தனி மனிதர் என்ற நிலையில் மட்டுமே மறைந்துள்ளார். ஆயினும் அவர்தம் சிந்தனைகள் நிலைத்திருக்கின்றன. காந்திஜி தந்த சிந்தனைகளைத் தழைக்கச் செய்து இவ்வுலகில் சர்வோதயம் காண்பதே அந்த மகாத்மாவுக்கு நாம் செய்யும் கைம்மாறு ஆகும்.

# 'இந்தியா துணிச்சலுடன் செயற்பட வேண்டிய தருணம் இது'

## 'தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆசிரியர் தலையங்கம்

THE NEW INDIAN EXPRESS

இந்தியாவிலிருந்து வெளிவரும் 'தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாழிதழில் 'இந்தியா துணிச்சலுடன் செயற்பட வேண்டிய தருணம் இது' என்னும் தலைப்பில் நேற்று பிரசுமாகிய ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் இடம்பெற்ற போரின் இறுதி வாரங்களில் இலங்கைப் படையினரால் இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள் குறித்து அனைத்துலக விசாரணை நடத்தக் கோரி, வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம், அரசாங்கத்துக்கும், சிறுபான்மைத் தமிழர்களுக்கும் இடையில் நல்லிணக்கம் ஏற்படுத்தப்படாதுள்ளமையை வெளிப்படுத்தியுள்ளது.

போரின் இறுதிக்கட்டத்தில், சுமார் 40 ஆயிரம் தமிழர்கள், கொல்லப்பட்டதாக குற்றம் சாட்டப்படுகிறது.

மறைந்த விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பதின்ம வயது மகன் கொல்லப்பட்டமை போன்ற குற்றங்களுக்கு ஒளிப்பட ஆதாரங்கள் உள்ளன.

அத்தகைய இனப்படுகொலை இடம்பெறவில்லை என்று இலங்கை அரசு கூறிக் கொண்டாலும் நம்பகமான விசாரணை ஒன்றின் தேவையை அது மறந்து விட்டது.

குற்றச்சாட்டுகளை மூடி மறைப்பதிலே மட்டுமே, கவனம் செலுத்திய அரசு மனிதஉரிமை மீறல்களை விசாரிப்பது குறித்துக் கவலைப் படவில்லை.

பொதுவான தளம் ஒன்றில் இருந்து சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் இடையில் நல்லிணக்கம் உருவாக்கப்பட வேண்டும்.

தென்னாபிரிக்காவில், பேராயர் டெஸ்மன் டுட்டு தலைமையிலான உண்மை நல்லிணக்க ஆணைக்குழு, பெரும்பான்மை கறுப்பர்களுக்கும், சிறுபான்மை வெள்ளையர்களுக்கும் இடையில் நல்லிணக்கத்தை உருவாக்கியது.

ஆனால் அத்தகைய முயற்சிகள் இலங்கையில் மேற்கொள்ளப்படவில்லை.

ஏனென்றால், விடுதலைப் புலிகள் முற்றிலுமாக அழிக்கப்பட்ட பின்னர், தேசிய பாதுகாப்புக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை, எனவே, தமிழர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்று, இலங்கை அரசின் சக்திவாய்ந்த ஒரு பிரிவு நம்புகிறது.

இந்த மனோபாவம், செயல் முறையற்றது. ஒரு சமூகத்தைத் தாழ்த்தும்போது, அது தூண்டி விடப்படும்.

இந்த விவகாரத்தில் இந்தியா துணிச்சலான நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய நேரம் இது. எதிர்வரும் மார்ச் மாதம், ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்தில், இலங்கைக்கு எதிராக, தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நல்லிணக்கம் தொடர்பான தமது கடப்பாடுகளை இலங்கை மதித்து நடக்க வேண்டும் என்று இந்தியாவின் ஆதரவுடன், நிறைவேற்றப்பட்ட முன்னைய இரண்டு தீர்மானங்களும், கோரியிருந்தன.


2009இல் முடிவுக்கு வந்த இன நெருக்கடிக்கு முந்திய, மனிதஉரிமை மீறல்கள் குறித்து அனைத்துலக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அமெரிக்காவும், பிரிட்டனும் கோருகின்றன.

ஆனால் புதுடில்லி இதுவரை மௌனமாகவே இருந்து வருகிறது.

இந்நிலையில், போர்க் குற்றங்களை நிராகரிப்பதுடன் மட்டும் நின்று விடாமல், நல்லிணக்கத்தைத் துரிதமாக ஏற்படுத்த உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, கொழும்புக்கு புதுடில்லி எடுத்துக் கூற வேண்டும்.

இல்லாவிட்டால், குற்றச்சாட்டுகளுக்காக இலங்கை அனைத்துலக அளவில் அவமானங்களை எதிர்கொள்ள நேரிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** பழைய பிரச்சினைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்புக் கூடும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

**இடபம்:** சில விடயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். சிலர் உங்களை மட்டம் தட்டிப் பேசினாலும் உணர்ச்சி வசப்படாதீர்கள். சிலரின் தவறான செயல்களை எண்ணி வருந்துவீர்கள். உத்தியோகத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது.

**மிதுனம்:** எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. வியாபார இலாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.

**கடகம்:** வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களைச் சொல்லித் தருவார்.

**சிங்கம்:** அநாவசியச் செலவுகளைக் கட்டுப்படுத்துவீர்கள். உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். புதிய தொழில் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும்..

**கன்னி:** எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். யோகா, தியானத்தில் மனம் லயிக்கும். பணப் பற்றாக்குறையை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்கள் உதவுவார்கள். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**துலாம்:** சவாலில் வெற்றி பெறுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். பேச்சில் முதிர்ச்சி தெரியும். அரசால் ஆதாயம் உண்டு. சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள்.

**விருச்சிகம்:** இடைநடுவில் நின்ற வேலைகள் முடிவடையும். எதிர்பார்த்த இடத்திலிருந்து தக்க சமயத்தில் உதவிகள் கிடைக்கும். தோற்றப் பொலிவு கூடும். நட்பு வட்டம் விரிவடையும். முன்கோபம் குறையும். உத்தியோகத்தில் தலைமையின் நம்பிக்கையைப் பெறுவீர்கள்.

**தனுசு:** வேலைப்பளு ஏற்படும். சிலர் உங்களிடம் நயமாகப் பேசினாலும் சொந்த விடயங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றப் போராட வேண்டியிருக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் அளவாகப் பழகுங்கள்.

**மகரம்:** ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். அரசு விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம். உறவினர், நண்பர்களுடன் மனத்தாங்கல் வரும். வியாபாரத்தில் புதிய முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும்.

**கும்பம்:** திட்டவட்டமாக சில முடிவுகள் எடுப்பீர்கள். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள்.

**மீனம்:** பழைய நல்ல சம்பவங்களை நினைவுகூர்ந்து மகிழ்வீர்கள். மற்றவர்களுக்காக சில செலவுகளைச் செய்து பெருமைப் படுவீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு அதிகரிக்கும்.

## நாளை

**தை-18 வெள்ளிக்கிழமை | 31.01.2014**

திதி: பிரதமை பி.இ.02.06வரை
நட்சத்திரம்: திருவோணம் பி.ப.03.12 வரை
சுபநேரம்: 06.36-08.06 வரை
இராகுகாலம்:11.06-12.36 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



### தியாகப் பயிற்சி

இதுவரை பக்தியின் தொடக்க நிலையை ஆராய்ந்து பார்த்தோம். இனி பராபக்தி அல்லது பக்தியின் முதிர்ந்த நிலை என்பது பற்றிக் காண்போம். முதற்கண் இப் பராபக்தியைப் பழகிக் கொள்வதற்குத் தேவைப்படும் சில ஆரம்ப சாதனைகளைச் சற்றுக் காண்போம். இச் சாதனைகள் அனைத்தும் ஆன்மாவைத் தூய்மைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டவை. இறைவனின் திருப்பெயர்களை ஓதுவது, வழிபாட்டு முறைகள், நியமங்கள், (திருநீறு பூசுதல் முதலியன) இவையனைத்தும் ஆன்மத் தூய்மைக்காக அமைந்தவையே. இவையனைத்திலும் மிகச் சிறப்புடையது எதுவோ, எதன் துணையின்றிப் பராபக்தியின் எல்லைக்குள் நுழைய முடியாதோ அந்த ஒப்பற்ற பண்புதான் தியாகம் எனப்படும். இந்தச் சொல்லே பலரையும் அச்சுறுத்தி விடுகிறது. ஆயினும் தியாகம் இல்லையெனில் ஆன்மிக வளர்ச்சி சிறிதும் ஏற்படாது. யோகங்கள் அனைத்துக்கும் (பக்தி, ஞானம், கர்மம்) இத் தியாகம் இன்றியமையாதது. இதுவே ஆன்மிக வாழ்க்கைக்கு முதற்படி; சமயப் பண்பாட்டின் மைய அச்சு ; அதன் இதயம். மனிதனுடைய ஆன்மா உலகப் பொருள்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, உள்ளார்ந்த பொருள்களில் கருத்தைச் செலுத்தி எப்பொழுது ஆராய முற்படுகிறதோ, அதாவது உலகப் பொருளை ஆழ்ந்து சிந்திக்கச் சிந்திக்க நாளடைவில் அதுவாகவே மாறிவிட்ட ஆன்மா, அழிவை நோக்கித் தான் விரைந்து கொண்டிருப்பதை உணர்ந்து, தன் உண்மை நிலை என்ன என்பதை அறிந்து, தான் வெறும் ஒரு ஜடமாக மாறிவிட்டதையும் தெரிந்து, இவ்வறிவால் உலகப் பொருள்களைக் காணும்போது முகத்தை எப்பொழுது திருப்பிக் கொள்கிறதோ அப்பொழுது தியாகப் பண்பு தோன்றத் தொடங்குகிறது; உண்மையான ஆன்மிக முன்னேற்றம் உதயமாகிறது.


## எலிகளிலிருந்து பரவும் ப்ளேக் எதிர்காலத்தில் மீண்டும் தோன்றலாம்'

பழங்காலத்தில் இருந்த 'பிளாக் டெத்' எனப்படும் பல லட்ச மக்களைக் கொன்ற ஒரு வகையான கொள்ளை நோயைப் போலவே கொடூரமான ஒரு கொள்ளை நோய் எதிர்காலத்தில் உருவாகலாம் என்று அமெரிக்க விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

ஆறாம் நூற்றாண்டில் 30 மில்லியனுக்கும் அதிகமான மக்களைக் கொன்ற 'ஜஸ்டினியன் பிளேக்' எனப்படும் கொள்ளை நோயினால் பாதிக்கப்பட்டு இறந்த இரண்டு பேரின் பற்களில் இருந்து தடயங்களை வடக்கு அரிசோனா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் தனிமைப்படுத்தியுள்ளனர் .

14ஆம் நூற்றாண்டில் 50 மில்லியனுக்கும் அதிகமான மக்களைக் கொன்ற பிளாக் டெத்' எனப்படும் கொள்ளை நோயில் காணப்படாத ஒரு மாறுபட்ட பக்டீரியாக் கிருமி தான் இந்த ஜஸ்டினியன் பிளேக் மரணங்களுக்குக் காரணம் என்று அந்த விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். ஆனால் இந்த இரண்டு வகை பக்டீரியாக்களுமே ஒரே கிருமியிலிருந்து தான் உருவாகியுள்ளன என்று தெரிவிக்கும் ஆராய்ச்சியாளர்கள், இன்றைய எலிகள் போன்ற உயிரினங்களிடமிருந்து இவ்வகையான கொடூரமான நோய் உருவாகலாம் என்றும் கூறுகின்றனர்.

எனினும் அந்த நோய் பெரிய பாதிப்பை ஏற்படுத்துவதை நவீன சிகிச்சைகள் தவிர்க்கும் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.



*மத்திய நூற்றாண்டுகளில் புபானிக் ப்ளேக் என்ற கொள்ளை நோயைத் தோற்றுவித்த பக்டீரியா*

## சுடோக்கு

### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 3 | | 7 | | | | |
| 7 | | | 8 | 9 | 3 | 5 | | 6 |
| 1 | 9 | 5 | 6 | | | 7 | | |
| 5 | 1 | 2 | | | | | 7 | |
| | | | 7 | | 2 | | | |
| | 6 | | | | | 8 | 2 | 5 |
| | | 1 | | | 5 | 4 | 6 | 2 |
| 2 | | 9 | 1 | 8 | 6 | | | 7 |
| | | | | 4 | | 1 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 2 | 9 | 5 | 3 | 8 | 7 | 1 | 4 |
| 4 | 7 | 3 | 2 | 1 | 9 | 8 | 6 | 5 |
| 8 | 1 | 5 | 6 | 7 | 4 | 2 | 9 | 3 |
| 9 | 4 | 8 | 3 | 5 | 2 | 6 | 7 | 1 |
| 1 | 3 | 7 | 8 | 9 | 6 | 5 | 4 | 2 |
| 5 | 6 | 2 | 7 | 4 | 1 | 3 | 8 | 9 |
| 7 | 9 | 6 | 4 | 2 | 5 | 1 | 3 | 8 |
| 2 | 8 | 4 | 1 | 6 | 3 | 9 | 5 | 7 |
| 3 | 5 | 1 | 9 | 8 | 7 | 4 | 2 | 6 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள் தமது உயர் கல்வியை தாமாகத் தெரிவு செய்வது நன்மையே

நமது நாட்டைப் பொறுத்தவரையில் உயர்கல்வி மாணவர்களினது வாழ்க்கைக் கோலத்தை மாற்றியமைக்கின்ற ஒருமுக்கியமான கல்வி ஆகும்.

அந்த வகையில் மாணவர்கள் உயர் கல்வியைத் தமது விருப்பப்படி தாமே தெரிவு செய்வது மிகவும் முக்கியமானதொரு விடயமாகும்.

இன்றைய சூழலில் காணப்படும் வேலையின்மையால் பாதிக்கப்படுகின்ற பல இளைஞர் சரியான பாடத்தெரிவின்மையை உயர் கல்வியில் தெரிந்தமையாலேயே பல இன்னல்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

அந்த வகையில் ஒரு மாணவன் தனது விருப் பப்படி ஒரு பாடத்தை தெரிவு செய்வதன் ஊடாக அதனைச் சிறப்பாகக் கற்பதற்கும் வாய்ப்பு அமைகிறது.

பெற்றோரினது கட்டாயத்தினாலோ வேறொருவரின் வற்புறுத்தலாலோ ஒரு பாடத்தைத் தெரிவு செய்வானேயானால், அவனுக்கு அப் பாடத்தில் ஒரு வெறுப்பு நிலை, தெளிவின்மை என்பன உருவாகலாம்.

இதனால் கல்வியில் தொடர்ந்தும் சிறப்பாகக் கவனம் செலுத்த இயலாத நிலை ஏற்படும். அந்த வகையில் மாணவனது தெரிவுக்கு பெற்றோர் பக்கபலமாக இருக்க வேண்டுமே தவிர இக்கல்வி பெற்றோர்களுக்கோ நண்பர்களுக்கோ உரிய போட்டிப் பரீட்சை அல்ல என்பதை உணர வேண்டும். பெற்றோர் தமது கௌரவத்துக்காக தாம் விரும்பிய பாடத் தெரிவுகளை வலுக்கட்டாயமாகத் தமது பிள்ளைகள் கற்க வேண்டும் என நினைப்பது மிகத் தவறான விடயமாகும்.



**"எந்தவொரு பாடமும் தாழ்ந்த பாடம் அல்ல. அனைத்துப் பாடங்களிலும் தமது முழு முயற்சியோடு செயற்படும்போது மட்டுமே வெற்றி பெற முடியும்."**

எந்தவொரு பாடமும் தாழ்ந்த பாடம் அல்ல. அனைத்துப் பாடங்களிலும் தமது முழு முயற்சியோடு செயற்படும்போது மட்டுமே வெற்றி பெற முடியும்.

மாணவர்கள் தமது விருப்பப்படி பாடத் தெரிவுகளை மேற்கொள்வதால் மட்டுமே அதில்முழுமுயற்சியுடன்செயற்படமுடியும். சிறுபராயக் கல்வி போன்றதல்லாத இவ் உயர் கல்வியில் மாணவர்கள் அர்ப்பணிப்புடன் தமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொண்டு வெற்றி பெற வேண்டும்.

வை.வித்தியா,
புலோலி தெற்கு,புலோலி.

## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

மாணவர்கள் உயர்கல்வித்துறையை தாமாகத் தெரிவு செய்வது

**நன்மையா? தீமையா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-.................................................................

முகவரி :- ...........................................................

.................................................................

........................ ........................
திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## தேடலின் பயணம்



பிறப்பிலிருந்து தொடங்கியதே
இந்த மனிதனின் தேடல்!
இறப்பு வரை முடிவதில்லையே
இப் புவியில்- காரணம்
தான் என்ன?
மனிதன் முயன்றாலும்,
முடியாத பயணம் அது
தாயை வென்று
தன் முயற்சியால்
வந்தான் தாய் கர்ப்பம் தாண்டி

தந்தையை வென்று
தான் அதிகம்
முன்னேறவும் தொடங்கினான்
சூரிய வெளிச்சத்தை வென்று
மின்சாரத்தை கண்டறிந்தான்-
சுவாசக்

காற்றை வென்று
மின் விசிறியைத் தேடினான்
இன்னும் மனிதனின்
தேடல் பயணம் எத்தனை??
தொடர்ந்து கொண்டே
செல்கிறதே...!

ச.தனீஷன்,
யா/வேலணை ம.க.

## முதன் முதலாய்......

தியா.தர்மா
நல்லூர்



கண்கள் மூடினால்,
உந்தன் எண்ணம்....
காணும் கனவிலும்,
உந்தன் விம்பம்....

நினைவினிலும்,
நிஜத்தினிலும்,
நீயே நிஜமாக....
உணர்வினிலும்,
உயிரினிலும்,
நீயே உறவாக....
நான் வாழ்கிறேன்,
நிழலாக.....

நீ வந்தபோதெல்லாம்,
நான் அறியவில்லை.....
நீ சென்ற போதும் கூட,
பிரிவில் வலி இல்லை....
உன்னை உணர்ந்த போது,
அறிந்தேன்.....
எனக்குள் நீயாய்....

என் கண்கள் ஸ்பரிசித்த,
உன் உருவம்
தூரிகையில் உன்னை
தீட்டிவிட
நினைக்கும் போதெல்லாம்.....

முதன் முதலாய்.....
நான்.....
தோற்று நிற்கின்றேன்.....
இளங்காற்றே....!
உன்.....
இதமான காதலில்.....!

## வாழ்க்கை என்பது போருமல்ல, அமைதியுமல்ல



வாழ்க்கை என்பது போருமல்ல, அமைதியுமல்ல, அது புரிந்து கொள்ள முடியாத பலவற்றின் கலவை.

புரிந்து கொள்வதன் அடிப்படையில் உறவுகள் உருவாக வேண்டுமே தவிர, ஒருவரை ஒருவர் சாமர்த்தியமாக பயன்படுத்திக் கொள்வது எப்படி எனப் பார்க்கக் கூடாது.

சிக்கலுக்கு யார் காரணம் என்பதை விட உங்கள் தன்மை எப்படி இருக்கிறது என்று பாருங்கள்.

உங்கள் உடல், மனம், உணர்ச்சி, சக்தி நிலை மகிழ்வான தன்மையில் இருக்கும் போது, உறவுமுறைகளில் பிரச்சினை இருக்காது.

மனநிலை சிறப்பாக இருந்தால் மனம் சம்பந்தமான விடயங்களைக் கடந்து செல்வீர்கள். நிலையற்ற மனம் இருந்தால் துன்பமடைவீர்கள்.

உங்கள் உணர்வுகள் வலிமையாக, சமநிலையில் இருந்தால், வாழ்வின் உணர்வு நிலைகளை அற்புதமாக உணர்வீர்கள்.

உங்கள் ஆனந்தத்தை வெளியில் இருக்கும் சூழ்நிலையைக் கொண்டு உருவாக்க நினைத்தால், அது நிகழாது. வெளிச் சூழ்நிலை 100 வீதம் நாம் நினைத்தபடி நடப்பது இல்லை.

ஒருவன் நினைத்தால் 365 நாள்களும் அவனுக்கு வசந்த காலமாகவே அமைய முடியும்.

வி.சாந்தி

**"உங்கள் ஆனந்தத்தை வெளியில் இருக்கும் சூழ்நிலையைக் கொண்டு உருவாக்க நினைத்தால், அது நிகழாது. வெளிச் சூழ்நிலை 100 வீதம் நாம் நினைத்தபடி நடப்பதில்லை."**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற் பயிற்சிகள்

முல்லைத்தீவு, ஜன.30

கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாட சாலையில் இயங்கிவரும் தொழிற்பயிற்சி நிலையத்தில், மேலும் தொழிற் பயிற்சி வகுப்புக் கள் ஆரம்பமாகியுள்ளன.

இந்த இலவச தொழிற்பயிற்சி மூலமாக அழகுக் கலை, கணினிப் பயிற்சி, ஆங்கிலக் கற்கை ஆகிய பயிற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் 18-30 வயதிற்குட்பட்ட இளைஞர், யுவதிகள் பதிவுகளை மேற்கொண்டு பயின்று வருகின் றனர். ஏற்கெனவே பயிற்சியை முடித்து வெளி யேறியவர்கள் தொழில்களில் ஈடுபட்டு வரு கின்றமை குறிப்பிடத்தக்கது.

(க-500)


இன்று (30.01.2014) மணிவிழாக் காணும்

சேவையின் செம்மல்

உயர் திரு. கந்தையா சண்முகலிங்கம்- BA(Cey.)

சாவகச்சேரி மக்கள் வங்கிமுகாமையாளர்

அவர்களைப்

பாராட்டி வாழ்த்துகின்றோம்




சேவைக்காலம்-(1977- 2014)

நேரிய நோக்கும் கூரிய மதியும்
சீரிய சேவையும் காரியத்திறனும்
பண்பும் பணிவும் உதவிடும் பாங்கும்
துணிவும் கனிவும் உள்ளத் தூய்மையும்
அணியும் அணியாய் அழகு சேர்த்தவரே!
இனியும் உம் வாழ்வில் வசந்தங்கள் பூத்து
கனியும் பொழுதில் வளங்கள் கொழித்து
இனிதாய் வாழ இந்நாளில் வாழ்த்துகின்றோம்.

Best Wishes

வாழ்த்துபவர்கள்:

ஊழியர்கள், மக்கள் வங்கி சாவகச்சேரி,

கொடிகாமம் சேவை நிலையம்,

கைதடி சேவை நிலையம்.

(33044) (3.6.4)


# கோப்பாய் கல்வியியற் கல்லூரியில் இந்தியாவின் ஆங்கில ஆய்வுகூடம்

***மார்ச்சில் திறக்கப்படும் என்கிறார் இந்தியத் துணைத் தூதர்***

யாழ்ப்பாணம், ஜன.30

இந்திய அரசால், கோப் பாய் தேசிய கல்வியற் கல்லூரியில் எதிர்வ ரும் மார்ச் மாதம் ஆங் கில மொழி ஆய்வு கூடம் நிறுவப்பட வுள்ள தாக இந்தியத் துணைத் தூதர் வி.மகாலிங்கம் தெரிவித்தார்.

இந்த ஆண்டு பல்வேறு வேலைத் திட்டங்கள் இந்திய அரசால் வட மாகாணத்தில் முன் னெடுக்கப்படவுள்ள தாகக் குறிப்பிட்டார்.

மன்னாரிலுள்ள திருக் கேதீஸ்வரம் கோயிலை புனருத்தாரணம் செய் வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். இந் தக் கோயிலுக்கான விக்கிரகங்களையும், தூண்களையும் தமிழ் நாடு மகாபலிபுரத்தி லுள்ள சிற்பிகள் செதுக் குகின்றனர். அவை விரைவில் மன்னா ருக்கு கப்பலில் கொண்டு வரப்பட்டு ஆலயத்தில் ஒப்படைக்கப்படும்.

மேலும் கலாசார மேம் பாட்டுக்காக, வடக்கின் மிகமுக்கிய அடையாள மாக யாழ்ப்பாண கலா சார மையம் அமைக் கப்படவுள்ளது. யாழ். பொது நூலகத்துக்கு அருகில் அமைய இருக்கும் இந்தக் கட் டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இந்த ஆண்டு இடம்பெறும் என்று நம்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய அரசு, இலங்கை யின் ஒவ்வொரு மாகா ணத்திலும் ஒவ்வொரு ஆங்கில மொழி ஆய்வு கூடம் அமைக்கத் தீர் மானித்தன் பிரகாரம், வடக்குக்கான ஆய்வு கூடத்தை கோப் பாயில் அமைக்கத் திட்டமிட் டுள்ளோம். கோப்பாய் தேசிய கல்வியியற் கல் லூரியில் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாத மளவில் இது நிறுவப் படும்.

இதேபோன்று, வட மாகாண கைவினைக் கலைஞர்களுக்கும், கலைஞர்களுக்கான கைவினைக் கிரா மத்தை கைதடியில் இந்த ஆண்டு நிறுவத் திட்ட முன்மொழிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரி வித்துள்ளார்.

(வ-5)


## இறைவனிடம் சரணாகதி அடைதலாகிய கொள்கையை ஆராய்க!

நாம் எமது அனைத்து உடைமைகளையும் இறைவனுக்கு அர்ப்பணித்து விட்டதால், எமக்கு வேண்டியனவற்றை எல்லாம் இறைவன் செய்வார் என்று மூடத்தனமாக எண்ணிக்கொண்டு சகல செயற்பாடுகளையும் கைவிட்டு இருப்பது இறைவனிடம் சரணாகதி அடைதல் ஆகாது. இது வெறும் சோம்பல் தனமே யாகும்.

கடவுள் எமக்கு வழங்கியுள்ள பல வகைப்பட்ட ஆற்றல்கள், எமக்கென விதிக்கப்பட்ட கடமைகளைச் செய்வதற்கு வழங் கப்பட்ட சக்தி, என்பவற்றை உபயோகித்தலே சரணாகதியின் சரியான முறையாகும்.

இதே வேளை,

1. எமது செயல்கள் அனைத்தையும் இறைவனுக்கே அர்ப் பணித்தல்.
2. அவற்றை நானே செய்தேன் என எண்ணாதிருத்தல்.
3. எமது செயல்களுக்குப் பயனை எதிர்பார்த்து நில்லாது இருப்பது தான் சரணாகதி.



நன்றி

தெய்வீகம் மலரும் பொழுது

சாயி சிந்தனை


## மெய்வன்மைப் போட்டிகள்

நீர்வேலி சி.சி.த.க.பாடசாலை யின் வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதா னத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் இ.பசுபதீஸ் வரன் தலைமையில் நடை பெறும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவியும் யாழ். மருத்துவபீட மாணவியுமான செல்வி ஷம்பிகா இராசரத்தி னம் கலந்து கொள்வார். (வ)

◆◆◆

அச்சுவேலி மத்திய கல்லூரி யின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி இன்று வியா ழக்கிழமை கல்லூரி விளை யாட்டு மைதானத்தில் பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறும்.

கல்லூரி அதிபர் வே.அரசகேசரி தலைமையில் நடைபெறும் விளையாட்டுப் போட்டியில் வடக்கு மாகாண கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலன் பிரதம விருந்தினராகவும், கோப் பாய் கோட்டக் கல்வி அதிகாரி ஏ.எஸ்.சற்குணராசா சிறப்பு விருந்தினராகவும், யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் அதி பர் என்.மகேந்திரராசா கௌ ரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். (வ-11)

## இராணுவ அலுவலரின் மனைவி, மகள் விபத்தில் காயம்

வலி. வடக்கு. ஜன 30

ஓட்டோவில் யாழ்ப்பாணத்தைச் சுற்றி பார்க்க வந்த இராணுவ அலுவலரின் ஓட்டோ நாயுடன் மோதி தடம் புரண்டதில் இராணுவ அலுவலரின் மனைவியும் மகளும் படுகாயமுற்ற நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

பொலனறுவை, ரத்துகிரிய வைச் சேர்ந்த இராணுவ அலுவலரும் அவருடைய மனைவி மற்றும் இரு பிள் ளைகளும் மாதகல் சென்று விட்டு ஓட்டோவில் அச்சுவேலி நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கையில் மாவிட்ட புரத்தில் வெள்ளிக்கிழமை இரவு இந்த விபத்து ஏற்பட்டது.

உடனடியாக காயங்களுக்கு உள்ளா கியவர்களான மனைவி உபதிஷா ஜெயந்தி (வயது 37) மற்றும் உபதிஷா, எஸ்ஜி சாஜயான (வயது 12) ஆகியோரே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குறித்த இராணுவ அதிகாரி அச்சுவேலி இராணுவ முகாமில் கடமையாற்று வதாகவும் ஓய்வுக்காக குடும்பத்துடன் சுற்றுலா சென்ற நிலையில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. (வ-86)


## BOC மீட்கப்படாத அடகு நகைகளின் பகிரங்க ஏலவிற்பனை

யாழ் மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கிக் கிளைகளில் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

| கிளையின் பெயர் | அடகுத்திகதி | ஏலவிற்பனைத்திகதி இடம் நேரம் |
|---|---|---|
| பருத்தித்துறை கிளை<br>மந்திகை கிளை<br>மருதங்கேணி கிளை | 31.04.2013 இற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 31.10.2012 இற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் | 2014 பெப்ரவரி முதலாம், 2 ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) காலை 9.30 மணிக்கு பருத்தித்துறை கிளை |
| அச்சுவேலி கிளை<br>சிறுப்பிட்டி கிளை | 07.05.2013 இற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 07.11.2012 இற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் | 2014 பெப்ரவரி 8 ஆம், 9 ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) காலை 9.30 மணிக்கு அச்சுவேலி கிளை |
| வல்வெட்டித்துறை கிளை<br>நெல்லியடிகிளை<br>கரணவாய் கிளை | 17.05.2013 இற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 17.11.2012 இற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் | 2014 பெப்ரவரி 18 ஆம், 19 ஆம், 20 ஆம், 21 ஆம் திகதிகளில் காலை 9.30 மணிக்கு வடபிராந்தியக்காரியாலயம் |
| சுன்னாகம் கிளை<br>புன்னாலைக்கட்டுவன் கிளை | 21.05.2013 இற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 21.11.2012 இற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் | 2014 பெப்ரவரி 22ஆம், 23 ஆம், திகதிகளில் (சனி, ஞாயிறு) காலை 9.30 மணிக்கு சுன்னாகம் மேற்தரக்கிளை |

இந்த ஏலவிற்பனையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச்செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

செயற்பாட்டு முகாமையாளர்,

இலங்கை வங்கி (வடபிராந்தியம்) வடபிராந்திய காரியாலயம்,

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல.021 222 4683, 021 222 3126

(சி/11307)(3.6.4)


## உள்ளீர்ப்புக் கடிதம் கிடைக்காதோர் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜன.30

வடக்கு, கிழக்கு மாகாண சபையாக செயற்பட்ட காலங்களில் நியமனம் பெற்றவர்களில் இதுவரை வடக்கு மாகாண சபைக்கு உள்ளீர்க்கப்பட்ட கடிதம் கிடைக்காத உத்தியோகத்தர் களை அவற்றுக்காக விண்ணப்பிக்ள குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளீர்ப்புக் கடிதம் கிடைக்காத உத்தி யோகத்தர் தத்தமது திணைக்களத் தலைவர் ஊடாக எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறும் அறிவிக்கப் பட்டுள்ளது. (ஒ-9)

## சமாதான நீதிவானாக நியமனம்



வல்வெட்டித்துறை ஊரிக்காட் டைச் சேர்ந்த உத்தரவு பெற்ற நில அளவையாளர் கதிர் காமத் தம்பி விமலதாஸ் சமாதான நீதிவானாக அண்மையில் பதவி ஏற்றார்.

இவர் வல்வை சிவகுரு வித்தி யாசாலை மற்றும் வல்வை சிதம்பரகல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர் ஆவார்.

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி யின் நில அளவையியல் கற்கை நெறியை பயின்றவர். இலங்கை நில அளவை திணைக்களத்தில் 1974 இல் நில அளவையாள ராக இணைந்து பணியாற்றி, நில அளவை அத்தியட்சகராகப் பதவி வகித்து ஓய்வு பெற்றவர். இவர் சனசமூக நிலையம், பாட சாலைகள், ஆலயங்கள் மற் றும் கூட்டுறவு சார்ந்த பொது ஸ்தாபனங்கள் மூலம் சமூக சேவையில் ஈடுபட்டு வரு கிறார். (அ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **சுப்பிரமணியம் சுந்தரலிங்கம்**

மண்ணில்
29.04.1957

விண்ணில்
10.02.2013



ஓராண்டு முடிவுற்ற நிலையிலும்
முன்னே நிற்கிறது உங்கள் உருவம்
அள்ளி அணைக்கும்
அன்புக் கரங்களுக்காய்
வாடி நிற்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள் குடும்பத்தினர்.**
பிரதான வீதி, மானிப்பாய். (44118)(7.6)

# உயர்தர மாணவர்களின் கற்றல் செயற்பாட்டில் பெற்றோர் பாடசாலையுடன் தொடர்பு வேண்டும்

க.பொ.த.உயர்தர வகுப்பு மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் பெற்றோர், பாதுகாவலர்கள் பாடசாலையுடன் நெருக்கமான தொடர்புநிலையை பேணிக்கொள்ள வேண்டும். மாணவர்களுக்கான வகுப்பறைச் செயற்பாடுகளில் குறைபாடு காணப்படும் இடத்து எமது கவனத்துக்குத் தெரியப் படுத்த வேண்டும். அது உடன் சீர் செய்யப்படும். தேவை ஏற்படும் போது பாடசாலை ஆசிரியர் ஆளணிக்கு வெளியே இருந்து குறித்த பாடத்துறையில் நிபுணத்துவம் வாய்ந்தவர் அழைக்கப்பட்டு மாணவர்களின் கற்றல் தேவை பூர்த்தி செய்யப்படும். இவ்வாறு கூறினார் யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் அதிபர்.

வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் இருந்து இந்த வருடம் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவிகளின் பெற்றோர் பாதுகாவலர்களுக்கான கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலையில் நடைபெற்றது.

இதன் போது உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைய பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் 80 வீதமான நாள்கள் பாடசாலைக்கு வருகை தந்திருக்க வேண்டும். வருகை குறைவானவர்களை பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்க முடியாது. இந்த விடயத்தில் பெற்றோர் பாடசாலைகளுடன் ஒத்துழைக்க வேண்டும். பாடசாலைக்கு உரிய முறையில் பிள்ளைகள் வருவதை பெற்றோர் உறுதிசெய்ய வேண்டும்.

எமது பாடசாலையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த புலமைப் பரிசில் பெறுவதற்கு தகுதிபெற்ற மாணவிகள் உயர் புள்ளி அடிப்படையில் தரம் 6 இல் அனுமதிக்கப்படுகின்றனர். ஆனால் கடந்த வருடம் நடைபெற்ற உயர்தர பரீட்சையில் உயர் பெறுபேற்றினை பெற்றமை மகிழ்ச்சியானதாக இருந்த போதிலும் 38 மாணவிகள் பரீட்சைக்கு தோற்றிய சகல பாடங்களிலும் சித்தியடையவில்லை. இதில் 35 பேர் விஞ்ஞானப்பிரிவைச் சேர்ந்தவர்கள். பரீட்சைக்கு தோற்றியோரில் 90 பேர் ஆங்கில பாடத்தில் சித்தியடையவில்லை.

பரீட்சையில் மூன்று பாடங்களில் சாதாரண சித்தியும் ஆங்கில பாடம் உட்பட நான்கு பாடங்களில் சித்தி அடைந்தவர்கள் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் ஆங்கில பாடத்துறைக்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். எதிர்காலத்தில் அவர்கள் ஆங்கில ஆசிரியர் நியமனத்தைப் பெறமுடியும். உயர்தர வகுப்பு மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் பெற்றோர் பாதுகாவலர்கள் பாடசாலையுடன் நெருக்கமான தொடர்பு நிலையை பேணிக்கொள்ள வேண்டும். மாணவர்களின் கற்பித்தல்செயற்பாடு தொடர்பாக குறைபாடுகள் காணப்படும் போது அவற்றை தெரியப்படுத்த முன்வர வேண்டும். கற்றல் செயற்பாட்டில் தேவை ஏற்படும் போது பாடத்துறை ரீதியாக பாடசாலை ஆசிரிய ஆளணிக்கு வெளியே உள்ள ஆசிரியர்களில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களின் சேவை பெற்று ஈடு செய்யப்படும். மாணவிகளின் செயற்பாடுகளில் பெற்றோர் பாதுகாவலர்கள் விழிப்புணர்வோடு கவனம் செலுத்த வேண்டும். பெற்றோரின் கவனக்குறைவான நிலையே சமகால சமூகச் சீர்குலைவுகளுக்கு சாதகமாக அமைந்து விடுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (ந-11)

## யாழ்.மாவட்ட எழுத்தாளரின் சிறுகதைத் தொகுதி வெளியிட ஏற்பாடு

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாக அவர்களுடைய நூல்களை வெளியிட்டு உதவ திசைகாட்டி கலை இலக்கிய மன்றம் முன் வந்துள்ளது.

அதன் முதற் கட்டமாக, யாழ்.மாவட்ட எழுத்தாளர்களுடைய சிறுகதைத் தொகுதி ஒன்றை திசை காட்டி கலை இலக்கிய மன்றம் வெளியிட உள்ளது.

ஏற்கெனவே வெளியிடப்பட்ட தொகுதிகளில் இடம் பெற்ற சிறுகதைகள் கூடுமானவரை தவிர்க்கப்படும். இது வரை நூலுருப் பெறாத சிறுகதைகளுக்குத் தெரிவில் முன்னுரிமை அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தொகுதிக்கான சிறுகதைகளைதிசைகாட்டிகலை இலக்கிய மன்றம் நியமிக்கும் தேர்வுக் குழு தெரிந்தெடுக்கும் என்று தெரிவிக்கப்படு கிறது.

நூல்களை அச்சிட்டும், வெளியிட இயலாத சூழ்நிலையிலுள்ள எழுத்தாளர்களுடைய நூல்களை வெளியிடவும் திசைகாட்டி கலை இலக்கிய மன்றம் ஆதரவு வழங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பொதுச்சபை கூட்டமும் நிர்வாக சபை தெரிவும்

வட்டுக்கோட்டை கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டமும், புதிய நிர்வாக சபைத் தெரிவும் வட்டுக்கோட்டை பால் கொள்வனவுவிற்பனைநிலையத்தில் நாளை மறு தினம் [illegible] காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (வ)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

**கந்தையா நடராஜா**
(ஆறுமுகவடிவேல்)



தோற்றம்
07.04.1930

மறைவு
02.01.2014

எம்மையெல்லாம் வாழ்வாங்கு வாழவைத்து
கடந்த 02.01.2014 வியாழக்கிழமை எம்மைவிட்டுப் பிரிந்த
எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டிக்கிரியையும்
சபிண்டீகரணமும் 01.02.2014 சனிக்கிழமை எமது
இல்லத்தில் நடைபெறவுள்ளது.
இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள்,
அயலவர்கள் அனைவரையும்
கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து நேரடியாகக் கலந்து
கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல்
கூறியோருக்கும் மற்றும் பலவழிகளிலும்
உதவி புரிந்தோருக்கும் எமது நன்றியைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

பெரிய கிளானை,
வியாபாரி மூலை,
பருத்தித்துறை.
T.P : 021 320 1637

குடும்பத்தினர். (43082) (7.6.3)

# விண்ணக வாழ்வின் ஐம்பதாவது ஆண்டு நினைவஞ்சலி

**Joseph Andrew**



பிறப்பு
25.09.1901

இறப்பு
30.01.1964

"மருதமடு மாதாவே" .... "அடைக்கலமே" ... எனும்
அருமையான அருங்கவிகள் பலவற்றின் புகழ்தாங்கி
அரும்பெயர், "யோசவ் அண்ட்ரூ" எனும் நாமம் கொண்டு
அடைக்கல அன்னை (யாழ்) ஆலயத்தில் மறை இசைமழை
கடைசிவரை பொழிந்து கவர்ந்தாய் பல கோடி மக்களை
கடந்ததே உம்மறைவு ஐம்பது ஆண்டுகள்
எனினும் உம் நினைவு நிலைக்குமே
காலாதி காலம் வரை.


Mazenod House
7, 4th Cross Street,
Jaffna.

புத்திரிகள், மருமகள்,
பேரப்பிள்ளைகள். (44134) (7.6)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியை
செல்வி குமாரசாமி வில்வராணி
அவர்களின் தந்தை

**மார்க்கண்டு குமாரசாமி**



அவர்கள் 31.12.2013 அன்று இறைபதம் எய்தியதையிட்டு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.
யா/அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை
வட்டுக்கோட்டை (44071) (7.6.3)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர் **கனகரத்தினம் பரமேஸ்வரி**



கடந்த 31.12.2013 சிவபதம்
அடைந்த எங்கள் குடும்பத்தலைவி
அமரர் கனகரத்தினம் பரமேஸ்வரி
அவர்களின் சிவபதப்பேறு குறித்த
வீட்டுக்கிருத்தியக் கிரியைகள்
இன்று (30.01.2014) வியாழக்
கிழமை நண்பகல் 12.00
மணியளவில் அன்னாரது
இல்லத்தில் நடைபெறவுள்ளது.
அத்தருணம் தாங்கள்
வருகை தந்து அன்னாரின்
ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்,
மதியபோசனத்திலும் கலந்து
கொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
கணேஸ்வரம், அளவெட்டி. (44102)(12)(3.6)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
08.03.1926

மறைவு
01.01.2014

புதுக்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும்,
4ஆம் வட்டாரத்தை
வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்
**சின்னப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை**
(ஓய்வுபெற்ற ஊழியர்
கமநல சேவை நிலையம்)



எமது குடும்பத்தலைவர் அமரத்துவம் அடைந்த செய்தி
கேட்டு நேரில் வருகை தந்தோருக்கும் தொலைபேசி,
மின்னஞ்சல் மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும்
மற்றும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டவர்
களுக்கும் ஏனைய உதவிகளை வழங்கிய அனை
வருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு.
நாளை (31.01.2014) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில்
நடைபெறும் 31ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியையிலும்,
மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம்
உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரையும்
அழைக்கின்றோம்.
(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

4ஆம் வட்டாரம், அரசடி,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. (சா1320) (12.6)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



உடுவில் பிரதேச செயலகத்தில் 1990 - 1991 வரையான காலப்பகுதியில் உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய

### வேலுப்பிள்ளை வீரபத்திரபிள்ளை

அவர்கள் 2014.01.28 இல் காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். இவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்ப துடன், இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C/11335)(2.6)

பிரதேச செயலரும், உத்தியோகத்தர்களும்.
நலன்புரி சங்கம், பிரதேச செயலகம், உடுவில்.

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
23.04.1960



இறப்பு
30.01.2008

### அமரர் ரேவதி சிவஞானம்

பத்து மாதங்கள் எமை சுமந்தவளே
மூன்றெழுத்து மந்திரமே - நீ
எமைப் பிரிந்து மூவிராண்டு ஆனதென்ன
கண் இமைக்கும் நொடியில்
காலனிடம் சென்றவளே - காலன்
உனைப் பிரித்து ஆறாண்டுகள் ஆனதென்ன
மண்ணில் தவழ்ந்த எமை
மடியில் வைத்தவளே - ஒரு நொடியில்
எமை ஏமாற்றிவிட்டாயம்மா
கண்ணீருடன் நாம் காத்திருக்கிறோம்

123, கண்டி வீதி, யாழ்ப்பாணம். அகிலன், லக்ஷ்மன், டினோஜன்.

## கொக்குவில் இந்துவின் காவியப்பெண்

திருமதி சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம்
BA (London) (சுகிர்த ரீச்சர்)
அவர்களின்

### நினைவுமலர் வெளியீட்டு விழா



தோற்றம்: 30*09*1923
கொக்குவில்
மறைவு : 08*09*2011
கனடா

கால் பதித்த நாள் முதலாய் கடைசி மூச்சு
இருந்தவரை கொக்குவில் இந்து உச்சரித்த
உதடுகள் மௌனித்துக் கிடந்தாலும்
விழுதெறிந்த பல விழுதுகள் உம் வழித்தடம்
என்றும் தொடர்வர்! வாழ வழிகாட்டிய
கல்லூரி விளக்கே! உம்மில் தோன்றிய
சுடர்கள் நாம் என்றும் ஒளிர்வோம்
உம் வழியில்! நிஜமான நிழல் தேடி
நிம்மதியாய்த் தூங்கிடுவீர்!

**தலைவர் அ. பஞ்சலிங்கம்**
(ஓய்வுநிலை அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி)
**இடம்: கொக்குவில் இந்துக் கல்லூரி**
(பஞ்சலிங்கம் கேட்போர் கூடம்)
**காலம்: ஜனவரி 31. 2014 பிற்பகல்**

அன்னாரின் அபிமானிகள் அனைவரையும் இந்த நினைவுமலர் வெளியீட்டு விழாவில் கலந்து சிறப்பிக்குமாறும் அமரரின் குடும்பத்தினராலும் உறவினர்களாலும் வழங்கப்படும் நினைவுமலரினை அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ளுமாறும் விழா பூர்த்தியினைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்தில் கலந்து மகிழ்விக்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

(44135)(2.6)

திருமதி சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம்
(சுகிர்த ரீச்சர்)
குடும்பத்தினரும், உறவினர்களும்.

## கலை இலக்கிய போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

தென்மராட்சி, ஜன.30

தென்மராட்சி பிரதேச கலாசாரப் பிரிவினர் இந்த வருடத்துக்கான தேசிய கலை இலக்கியப் போட்டிகளுக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளனர். போட்டிகள் பாடசாலை, திறந்த பிரிவு என பிரதேச, மாவட்ட, தேசிய ஆகிய மூன்று படி நிலைகளாக நடத்தப்படவுள்ளன.

பாடசாலைப் பிரிவில் பாலர் பிரிவுக்கான கவிதைப் பாடல், கையெழுத்து ஆகிய போட்டிகளும் கனிஷ்ட பிரிவுக்காக கட்டுரை, கவிதை, கவிதை பாடல் போட்டிகளும் சிரேஷ்ட பிரிவுக்காக கட்டுரை, கவிதை, கவிதை பாடும் போட்டி, பாடல் நயத்தல் போட்டிகளும்,

திறந்த பிரிவில் பாடல் ஆக்கம், நாட்டார் கலை, இலக்கிய விவரணம், சிறுகதை, கவிதை, சிறுவர் கதை ஆக்கம் ஆகிய போட்டிகளும் நடத்தப்படவுள்ளன. போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்கள் பாடசாலை அதிபராலும் திறந்த போட்டியாளர்கள் அந்தந்தப் பிரிவு கிராம அலுவலர்களாலும் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை மார்ச் 3 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் நேரடியாகக் கையளிக்கலாம் அல்லது தபால் மூலமாக அனுப்பி வைக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகள் நடைபெறும் திகதி மற்றும் இடம் குறித்த விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

6 வயதுக்கும் 10 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் பாலர் பிரிவிலும் 16 வயதுக்குட்பட்டவர்கள் கனிஷ்ட பிரிவிலும் 16 வயதுக்கும் 19 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் சிரேஷ்ட பிரிவிலும் 19 வயதுக்கு மேற்பட்டவர்கள் திறந்த பிரிவிலும் பங்குபற்றலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## மோசமான நிலையில் அக்கராயன் வீதி

அக்கராயன், ஜன.30

கிளிநொச்சி அக்கராயனில் இருந்து பல்லவராயன் கட்டுச் சந்தி வரையான 20 கிலோமீற்றர் நீளமான வீதி மிகவும் மோசமான நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

கரைச்சி, பூநகரி ஆகிய இரு பிரதேச செயலர் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக இந்த வீதி காணப்படுகின்றது.

கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த வீதி புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

இந்த வீதியை ஜெயபுரம், வன்னேரிக்குளம், ஆனை விழுந்தான் குளம், துணுக்காய்ப்பிரதேசத்தைச் சேர்ந்த ஆரோக்கியபுரம் ஆகிய கிராமங்களில் வதியும் மக்கள் பயன்படுத்துகின்றனர்.

இந்த வீதியைப் புனரமைக்குமாறு நீண்ட காலமாகவே இந்தக் கிராமமக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சு-18)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
25.06.1967

இறைவன் அடியில்
22.01.2012

### அமரர் நடராசா காசிவேந்தன்

(M.A, B.com, Dip.in.Pds, Dip.in,mgt)
முன்னாள் முகாமைத்துவப் பணிப்பாளர்- சமுர்த்தி மகாசங்கம், உடுவில்

திதி: தை அமாவாசை (30.01.2014)

இல்லத்தின் குலவிளக்காய் நல்லொளி வீசிய உத்தமரே
மண்ணுக்குள் மனிதம் மறைந்ததால்
வாசமில்லா வாழ்வில் வதங்கியே ஏங்குகின்றோம்.
ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும்
ஈசன் பாதம் அமர்ந்திருந்து வருடிக் கொடுத்திடுவீர்!

வங்கியடி, இணுவில் கிழக்கு,
இணுவில். (44143)(10.6)
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### செல்லப்பா பாலசுப்பிரமணியம்

(இளைப்பாறிய கணக்காளர் - கடற்படை திருகோணமலை)



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், கச்சேரி கிழக்கில் வசித்தவரும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய செல்லப்பா பாலசுப்பிரமணியம் நேற்று முன்தினம் (28.01.2014) செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் சாவகச்சேரியைச் சேர்ந்த காலஞ் சென்ற செல்லப்பா - உமையம்மை தம்பதியரின் ஏக புத்திரனும், கச் சேரி கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற பஞ்சாட்சரம் (இளைப் பாறிய தபால் அதிபர்) தம்பதியரின் மூத்த மருமகனும், பாலாம் பிகையின் அன்புக் கணவரும், பாலராம் (கனடா), காலஞ்சென்ற வாசுகி (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ் சென்ற சிவபாலன் (சிங்கப்பூர்), ஜெயா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், நர்தனா, அருண் கரன் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
175, கண்டி வீதி,
சாவகச்சேரி.
ராதா நீலகண்டன், சந்தியாமா
இராமநாதன் (மருமக்கள்) (11334) (45.6)

## மரண அறிவித்தல்

### இராமச்சந்திரா ரவீந்திரன்

(முன்னாள் உரிமையாளர் - ஹேமல்டன் பார்மசி - தெல்லிப்பழை)



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட இராமச்சந்திரா ரவீந்திரன் நேற்று (29.01.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமச்சந்திரா - சீதாதேவி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான Dr.ஹரிலிங்கம் - ஆதிலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயவதியின் அன்புக் கணவரும், ஹரிராம், ஹரிபிரியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜனகன், சங்கீதா ஆகியோரின் அன்பு மாமனும், அஜித், அஸ்வின், அஞ்சலா, றாகேஷ், ரவிஷ் ஆகியோரின் அன்புப் பேரனும், கதிர்காமசேகரன், மணிமேகலா, மேனகா, ரவிச்சந்திரன், காலஞ்சென்ற உமா மற்றும் உஷா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பத்மா, காலஞ்சென்றவர்களான கமலா, லீலா மற்றும் பத்மநாதன், புனிதம், இரத்தினா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.02.2014 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தெல்லிப்பழை (பழைய A.G.A.கந்தோர் ஒழுங்கை)
T.P-076 782 7609/077 220 2390
(11136)(12.6)
தகவல்:
உஷா தேவநாதன் (சகோதரி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தண்டமாக ரூ.16,23,500 அறவீடு

முல்லைத்தீவு, ஜன.30

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங் களில் மதுவரித் திணைக்களத்தினால் கடந்த ஆண்டு 16 லட்சத்து 23 ஆயிரத்து 500 ரூபா தண்டமாக அறவிடப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக் களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கசிப்பு மற்றும் அனுமதிப் பத்திரமின்றி அரச சீல் சாராயம், கள்ளு ஆகியவற்றை விற்பனை செய்தமை சிறுவயதினருக்குப் புகையிலைப் பொருள்களை விற்பனை செய்தமை, உள்ளிட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதில் மேற்படி தொகை தண்டமாக அறவிடப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட போது கைது செய் யப்பட்ட ஒருவரும், கோடா வைத்திருந்த 05 பேரும், கசிப்பை வைத்திருந்த 35 பேரும், , அனுமதிப் பத்திரமின்றி அரச சீல் சாராயம் வைத் திருந்த 08 பேரும், பியர் வைத்திருந்த ஒருவரும், கள்ளு விற்பனை செய்த 14 பேரும், மேலதிக மாக கள்ளு வைத்திருந்த 233 பேரும், 21 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்குப் புகையிலைப் பொருள்களை விற்பனை செய்த 40 பேரும் என சுமார் 337 பேருக்கு எதிராக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் நீதிமன்றங் களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு தண்டம் அறவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-55)

## ஓய்வு பெறுகிறார் பீடாதிபதி

வவுனியா, ஜன.30

வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி க.பேனாட் எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை ஓய்வுபெறுகின்றார்.

இவர் கடந்த 7 வருடங்களாக பீடாதிபதியாகக் கடமையாற்றி வருகின்றார்.

எதிர்வரும் முதலாம் திகதியுடன் ஓய்வுபெறும் இவருக்கு கல்விச் சமூகமும் மக்கள் சமூகமும் மணி விழா ஒன்றை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் நடத்தவுள்ளன.

இதேவேளை உப பீடாதிபதியாகக் கடமையாற்றி வந்த கு.சிதம்பரநாதன் பீடாதிபதியாகப் பதவி யேற்கவுள்ளார். (க-421-402)

## சாவகச்சேரி நகராட்சிமன்றம்
## பொது அறிவித்தல் -2014

1. **வியாபார/தொழில் உரிமம் - 2014**

சாவகச்சேரி நகராட்சிமன்ற எல்லைக்குள் தொழில்/வியாபாரம் செய்வோர் 2014 ஆம் ஆண்டிற்கான உரிமம் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப் படிவத்தினை நகராட்சி மன்ற அலுவலகத்தில் பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பித்து உரிய கட்டணத்தைச் செலுத்தி உரிமத்தினை 31.03.2014 ஆம் திகதிக்குமுன் பெற்று வியாபார நடவடிக் கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அத்துடன் உரிமம் வியா பாரநிலையத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். 31.03.2014 ஆம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப் பத்திரத்தைபெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2. **விளம்பரங்களைஅமைத்தல்/காட்சிப்படுத்தல்.**

நகராட்சிமன்ற எல்லைக்குட்பட்டபிரதேசத்திற்குள் எந்தவொருநிறுவனத்தினதும் விளம்பரங்கள் காட்சிப்படுத்துவதாயினும் நகராட்சிமன்றத்தின் அனுமதி பெற்றுக் கொண்டதன் பின்பே காட்சிப்படுத்தப்பட முடியும். எமது நகராட்சிமன்றத்தின் எல்லைக்குட்பட்ட பொது வீதிகளின் இருமருங்கிலும் மற்றும் ஏனைய இடங்களிலும் காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கான கட்டணங்களை நகராட்சிமன்றத்தில் செலுத்தி அதற்கான அனுமதியினை 15.02.2014 ஆம் திகதிக்குமுன் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நகராட்சிமன்ற எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களின் முகப்புகளில் அந் நிறுவனத்திற்குரிய ஒருவிளம்பரம் மட்டும் கட்டணமின்றிநகராட்சிமன்ற அனுமதியுடன் பொருத்தப்படமுடியும். மேலதிகமாகச் காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்கள் ஒவ் வொன்றுக்கும் அதற்குரியகட்டணத்தினைச் செலுத்தி நகராட்சிமன்றத்தின் அனு மதியை 15.02.2014 ஆம் திகதிக்குமுன் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். அவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள் / வர்த்தக நிலைய உரிமையாளர்கள் / நிறு வனங்கள் மீதுசட்டநடவடிக்கைஎடுக்கப்படும் என்பதனை அறியத்தருவதுடன் சகல விளம்பரங்களும் 16.02.2014 ஆம் திகதிக்குப் பின்னர் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அகற்றப்படும் விளம்பரங்கள் உரியவர்களிடம் மீள ஒப்படைக்கப்படமாட்டா.

3. **வீடுகள், கிணறுகள், குழாய்க் கிணறுகள், மலசல கூடங்கள், மதில்கள், கடைகள், அரச, தனியார் கட்டடங்கள், பாடசாலைகள், மதஸ்தலங் கள், தொலைத்தொடர்பு கோபுரங்கள் போன்றவை அமைத்தல், புதுப் பித்தல் மற்றும் திருத்தவேலைகள்.**

1978 ஆம் ஆண்டின் நகர அபிவிருத்திகட்டளைச்சட்டத்தின் பிரிவு இல.41 திருத்திய 1982 ஆம் வருட இல.4ஆம் 8ஓ(2) பிரிவின் பிரகாரமும் 1987 ஆம் ஆண்டின் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் 255 இன் பிரகாரமும் நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் எந்தவொரு கட்டுமான வேலைகள் அல்லது புனரமைப்பு வேலைகள் மேற்கொள்வதாயினும் வீடுகள், நகராட்சிமன்றத்தில் கட்டட விண்ணப்பத்தைப் பெற்றுப் பூரணப்படுத்தி, காணி அளவிடைப்படம் (Survey Plan), கட்டடவரைபடம், காணிஉறுதிஎன்பவற்றுடன் சமர்ப்பித்து நகராட்சிமன்ற திட்டமிடல் குழுவின் அனுமதியினைப் பெற்றபின்னரே அவ் வேலைகளை மேற் கொள்ளல் வேண்டும். அனுமதியின்றி மேற்படி வேலைகள் செய்தல் சட்டத்தின் படி தண்டனைக்குரிய குற்றமென்பதை அறியத்தருகின்றேன்.

முன்னங்கீகாரம் பெறப்படாதுகட்டப்படும் மேற்படிகட்டடங்கள் யாவும் எதுவித நட்ட ஈடும் வழங்கப்படாது. இந் நகராட்சிமன்றத்தினால் அகற்றப்படும்.

நகராட்சிமன்றத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டஉரியகாலத்திற்குள் கட்டட வேலைகள் பூர்த்திசெய்யத்தவறும் பட்சத்தில் கட்டட அனுமதி கால நீடிப்பினை உரியமுறையில் விண்ணப்பித்து நகராட்சிமன்றத்தில் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

கட்டட வேலைகள் பூர்த்தியானதும் நகராட்சிமன்றத்தில் அமைவுச் சான்றிதழ் பெற்ற பின்னரே கட்டடம் பயன்படுத்தல் வேண்டும். இவ்வாறு சான்றிதழ் பெற்றுக் கொள்ளாத புதியகட்டடம் ஒன்றினைப் பயன்படுத்துவது குற்றமாகும். அத்துடன் புதிதாக அமைக்கப்படும் கட்டடங்கள், வீடுகள் விலை மதிப்பீட்டுத் திணைக்களத் தினால் விலைமதிப்பீடுசெய்வதற்குஅமைவுச்சான்றிதழ் அவசியமாகும்.

சட்டவிரோதமான முறையில் அமைக்கப்படும் கட்டடநிர்மாணங்கள், குடியிருப்பு மனைகள், எல்லைச் சுவர்கள்,கிணறுகள்,குழாய் கிணறுகள், மலசல கூடங்கள் தொடர்பான முறைப்பாடுகளை உரிய தருணத்தில் நகராட்சிமன்றத்துக்குத் தெரியப்படுத்தி நகர அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் நகராட்சி மன்றத்தின் வெற்றிகரமானசெயற்பாட்டிற்குபங்காளிகளாகவும் செயற்பட்டு எதிர் காலத்தில் ஒரு திட்டமிட்ட நகரத்தை உருவாக்க உதவிடுவீர்களாக.

**இறப்பியேல் தேவசகாயம்பிள்ளை,**
**தவிசாளர்,**
**நகராட்சிமன்ற அலுவலகம்,**
**சாவகச்சேரி. 2014-01-29**

(C/7638)(2.6)

**நகராட்சிமன்றம், சாவகச்சேரி.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 19 . 01 . 1931



உதிர்வு 31 . 01 . 2013

### அமரர் தாமோதரம்பிள்ளை சுப்பிரமணியம்
திதி: 30.01.2014


எமது குடும்பத்தின் குலவிளக்கே திறைசேரியில் நீர் வகித்த உத்தியோகத்தை உதறித்தள்ளி இலங்கைத் திருநாட்டில் தொழிலாள வர்க்கத்திற்காய் தொழிற் சங்கமதில் இணைந்து இடதுசாரிக் கட்சிகளில் கால் பதித்து பொதுத் தொண்டு புரிந்தவரே மக்கள் சேவையே மகேசன் சேவை என்று எமது குடும்பத்தை விட பொது நலனே மேன்மை என்றவரே, அரசியலில் சிறை சென்றும் தொழிற் சங்கவாதியென ரசிய மண்ணில் தடம் பதித்த உத்தமரே நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் உம் நினைவோடு வாழ்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

**அத்தாய், அல்வாய்.**

(C/11341)(10)

## மரண அறிவித்தல்



### நாகப்பு நல்லையா
(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், விவாகப் பதிவாளர்)

அல்வாய் வடக்கு, மாயக்கையைப் பிறப்பிடமாகவும், மாலாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகப்பு நல்லையா 28.01.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகப்பு-நாகம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற நடேசுவின் அன்புச் சகோதரனும்,காலஞ்சென்ற க.கிருஷ்ணபிள்ளை (ஓய்வுபெற்றஆசிரியர்) அவர்களின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், சரத்சந்திரன் (சுவிஸ்), ரவிசந்திரன் (லண்டன்), பாலகௌரி (ஜேர்மனி), பாலநந்தினி ஆகியோரின் அன்புப்பப்பாவும், புஸ் பராணி (சுவிஸ்), சிவகுமாரி (லண்டன்), குலேந்திரன் (ஜேர்மனி), சிவனேஸ்வரன் (உள்ளகக் கணக்காய்வாளர்-C.T.B) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரகவி (பொறியியல்மாணவி), சௌமி (ஜேர்மனி), ஆரகன், சாகியா (சுவிஸ்), கம்சவி, கர்சினி (லண்டன்), நிஷாகரி, அம்சனா ஆகியோரின் பாசத்துக்குரிய தாத்தாவும், சதீஸ்குமார் (ஆஸ்திரேலியா) அவர்களின் பெரியப்பாவும், காலஞ்சென்ற செல்வராசா மற்றும் மகேந்திரராசா, யோகேஸ்வரன், நல்லம்மா, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத் தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாலாவத்தை,
புலோலி வடமேற்கு, புலோலி.
T.P : 021 226 3984

தகவல் : **ந. சரஸ்வதி** *(மனைவி)*,
**மு. சிவனேஸ்வரன்** *(மருமகன்)*,
**க.யோகேஸ்வரன்** *(மைத்துனன்)*.

(சி/11340)(7.8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Institute of Junior
(Engeish Medium)

➡ Elocution Classes
எலக்கியூசன் வகுப்புக்கள்
➡ Spoken
➡ Written

Preschool Children
Grade - 01, 02, 03, 04

30.01.2014இற்கு முன் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

இல.926, பருத்தித்துறை வீதி, நல்லூர் (சட்டநாதா கோயில் முன்)
Email-Instituteofjunior 2013@gmail.com T.P:- 0771999630, 0212054052


## இந்துசமயப் பேரவை (யாழ்ப்பாணம்) பொதுக்கூட்டம்

இடம் :- இந்து சமயப் பேரவை, யாழ்ப்பாணம்.
காலம்:- 02.02.2014 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணி
தலைவர்:- பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் (தலைவர் இந்து சமயப் பேரவை)

★ தலைமையுரை ★ செயலாளர் ஆண்டறிக்கை ★ பொருளாளர் அறிக்கை
★ புதிய உத்தியோகத்தர் தெரிவு ★ தீர்மானங்கள் நிறைவேற்றல் ★ நன்றியுரை


தயவு செய்து இக் கூட்டத்தில் தவறாது பங்கு கொள்ளவும். நன்றி

முக்கிய குறிப்பு: தீர்மானங்களை எழுத்து மூலம் முன் கூட்டியே சமர்ப்பித்து உதவவும்

சி. க. சிற்றம்பலம் (தலைவர்)/ சி. சந்திரசேகரன் (கௌரவ செயலாளர்) தொ.பே:- 021 222 6048

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்



## துரை சுப்பிரமணியசிவம்

(முன்னாள் உரிமையாளர்- கொழும்பு ரெஸ்ற்ரோரன்ற் & சிவாஸ்கோ-யாழ்ப்பாணம், எஸ்மார்ட் - வெள்ளவத்தை)

யாழ்ப்பாணம், இணுவில், துரைவீதியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட துரை சுப்பிரமணியசிவம் 27.01.2014 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் யாழ். பிரபல வர்த்தகர் துரைராஜா - செல்லம்மா தம்பதியரின் புதல்வரும், அருந்தவ மலரின் கணவரும், கணபதிப்பிள்ளை (இராசா விதானையார்) இரத்தினம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சிவபாதம், ஜெயராணி (கனடா) ஆகியோரின் சகோதரரும், ராஜ்குமார் (UK), சுரேஷ்குமார், சுபாஜினி ஆகியோரின் தந்தையும், ஜெயகுமாரி, வைஷ்ணவி, மோகன்தாஸ் (பொறியியலாளர் -STDP) ஆகியோரின் மாமனும், ஜெயபாலசுந்தரி, கருணாகரன் (பொறியியலாளர் - கனடா), அன்னலட்சுமி, காலஞ்சென்ற நல்லையா (Income Tax Assessor), சுசிலாதேவி (இந்தியா), ஞானகலாராணி, காலஞ்சென்ற சரவணபவன், சர்வானந்தா ஆகியோரின் மைத்துனரும் விதுஷா, வினிஷா, பிரணேஷ்வர், சர்வேஷ்வர், விஸ்வேஷ்வர், அக்ஷயன், ஸ்வேதா, விபூஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூத வுடல் இன்று (30.01.2014 ) காலை 8.30 மணி முதல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் 2.00 மணிக்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்று பொரளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மகன்
077 225 1188/ 011 236 6368

(சி/11653)(45.6)


**துபாய்** குளிர்பான தொழிற்சாலை - வேலையாள்கள் 60 பேர் தேவை.
1200 - DRS
முன்பதிவு செய்வது அவசியம், ஆங்கிலம் பேசத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை.
வயதெல்லை 20-27 வரை
(43126) (10.6) தொடர்பு: 077 3957291

**மாலைதீவு - FISH CLEANER**
250 US Dollor + Overtime
20 பேர்
40 ஆயிரம் ரூபா மட்டும் அறவிடப்படும்.
(43126) (10.6) தொடர்பு: 077 3957291


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## திருமதி. கிருஷாந்தி ரவீந்திரா



யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னைநாள் நடனத்துறைத் தலைவர் திருமதி கிருஷாந்தி ரவீந்திரா அவர்கள் 28.01.2014 (நேற்று முன்தினம்) தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றமையையிட்டு மகிழ்ச்சியடைவதோடு

**யாழ்ப்பாணத்தின் முதலாவது-பரதநாட்டிய கலாநிதி**

என்ற பெருமையையும் அவர் பெற்றுக் கொண்டதையிட்டு பெருமை அடைகின்றோம்

மாணவர்கள்

(C-6373)

# VACANCY FOR TRAINEE ACCOUNTANTS & TRAINEE ASSISTANT ACCOUNTANTS

*Incredible opportunity has been created for Trainee Accountants & Trainee Assistant Accountants to join an established Group of companies based in Jaffna. The successful candidate will require to have the following qualification.*

*Applicant's skill set require having strong Microsoft Office and Excel skills, as well as strong numerical, good command in English and communication abilities. Knowledge in sinhala is an added Qualification.*

## TRAINEE ACCOUNTANTS

*Fully Qualified CHARTERED or CIMA Accountancy.*

## TRAINEE ASSISTANT ACCOUNTANTS

*Graduate of a University B.B.A-FM (Spl), B.Com-Acct (Spl) with class or AAT or HNDA with considerable experience.*

In return, the company is offering to Select the best Trainees to absob in to the permanent carder. The role is within a friendly team of professionals offering you a challenging but rewarding environment.

This is an urgent vacancy so please state your interest With in 7 days :

*The Group Finance Director,*
*Lukshmee Group of Companies,*
*23/1,4th Lane, Brown Road, Jaffna.*

*Email : agencylukshmee@gmail.com*

(C/11343)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்கு தேர்தல்களுக்கு 120 கோடி ரூபா செலவு

மேல் மற்றும் தென்மாகாண சபைத் தேர்தல்களை நடத்தி முடிப்பதற்கு சுமார் ஆயிரத்து 200 மில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு சர்வதேச கண்காணிப்பாளர்கள் அழைக்கப்பட மாட்டார்கள் என்று தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

மேல் மற்றும் தென்மாகாண சபைத் தேர்தல்கள் நடவடிக்கை தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முற்பகல் தேர்தல் செயலகத்தில் நடைபெற்றது. இதன் போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே ஆணையாளர் இவ்வாறு தெரிவித்தார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### எந்தவொரு

வொரு விசாரணை ஆணைக் குழுவும் சர்வதேச தரத்துக்கு அமைவாகச் செயற்படவில்லை.

கடந்த செப்ரெம்பர் மாதம், ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்குச் சென்று வந்த பின்னர் சமர்ப்பித்த அறிக்கையில், போர்க் குற்றச்சாட்டுகள் குறித்து முழுமையான விசாரணை நடத்துவதற்கான எந்த முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டதாகத் தமது பயணத்தின்போது கண்டறியவில்லை என்று குறிப்பிட்டிருந்ததையும் ஸுவைர் சுட்டிக் காட்டினார்.

கடந்த நவம்பரில் நடந்த பொதுநலவாயத் தலைவர்களின் உச்சி மாநாட்டின் போது, நம்பகமான தேசிய பொறுப்புக் கூறும் செயல்முறையை எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் முறைப்படி ஆரம்பிக்காது போனால், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அனைத்துலக விசாரணை அழைப்புக்குப் பயன்படுத்துவோம் என்று பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், ஜனாதிபதியிடம் தெளிவாக கூறியிருந்தமையையும் ஸுவைர் இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவூட்டினார்.

எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் உண்மையான - நம்பகமான செயல்முறைகள் ஆரம்பிக்கப்பட்டால், நாம் அதற்கு முழுமையான ஆதரவை வழங்குவோம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (த-5)

### அரச அதிபர்

ஜெனரல் உதய பெரேரா இந்த மாத ஆரம்பத்தில் பதவியேற்றிருந்தார். அதன் பின்னர் குடாநாட்டில் அமைக் கப்பட்டிருந்த பல்வேறு மினி முகாம்கள் தொடர்ச்சியாக அகற்றப்பட்டு வருகின்றன.

அத்துடன் எதிர்வரும் ஜெனிவா கூட்டத் தொடருக்கு முன்னர், வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து ஒரு சில கிராமங்கள் மீள்குடியமர்வுக்காக விடுவிக்கப்படலாம் என்றும் தெரியவருகின்றது.

இவ்வாறானதொரு நிலையில் புதிய இராணுவத் தளபதிக்கும், யாழ்.மாவட்ட அரச அதிபருக்கும் இடையில் மீள் குடியமர்வு தொடர்பில் அடுத்த வாரம் பலாலி கட்டளைத் தலைமையகத்தில் சந்திப்பு ஒன்று இடம்பெறவுள்ளது.

சந்திப்பு இடம்பெறவுள்ளதை உறுதிப்படுத்திய அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மீள்குடியமர்வுக்காக ஒரு சில பகுதிகள் விடுவிக்கக் கூடியதான சாத்தியப்பாடுகள் இருப்பதாகவும் தெரிவித்தார். (த-5)

### இலங்கைப்

விளக்குவார் என்றும் அதன் பின்னர், பிரிட்டனின் அனுசரணையுடன் அமெரிக்காவின் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஜெனிவாவில் சமர்ப்பிக்கும் நடவடிக்கைகளில் அவர் ஈடுபடுவார் என்றும் தெரியவருகின்றது.

**முதல் பயணம்**

தெற்கு மத்திய ஆசிய பிராந்திய விவகாரங்களுக்கான அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால், பதவியேற்ற பின்னர் முதல் தடவையாக இலங்கைக்கு நாளை வெள்ளிக்கிழமை வருகை தரவுள்ளார்.

இலங்கைக்கு வரும் அவர், முதலில் கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் அரச தரப்பினரைச் சந்திக்கவுள்ளார். அதன் பின்னர் மறுநாள் சனிக்கிழமை அவர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் வடக்கு முதலமைச்சரையும், சிவில் சமூகப் பிரதிநிதிகள், வடக்கு ஆளுநர் ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

**பிரிட்டன் பயணம்**

இலங்கைப் பயணத்தை முடித்துக் கொண்டு, பிரிட்டன் அரசுப் பிரதிநிதிகளை சந்திப்பதற்காகப் பிஸ்வால் எதிர்வரும் 3 ஆம் திகதி லண்டன் செல்வார்.

பின்னர் அவர் ஜெனிவா சென்று, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் எதிர்வரும் மார்ச் மாத அமர்வில் இலங்கை மீது கொண்டு வரவுள்ள தீர்மானம் குறித்த சந்திப்புகளை நடத்தவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

### 55

17 ஆவது தடவையாக நேற்றுப் புதன்கிழமை மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் மனிதப் புதைகுழி தோண்டப்பட்டது.

நேற்றுக் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை குறித்த புதைகுழி தோண்டப்பட்டபோது மேலும் இரண்டு எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

நேற்றுப் புதன்கிழமை குறித்த மனிதப் புதைகுழி தோண்டப்பட்டபோது அனுராதபுரம் சட்ட வைத்திய அதிகாரி டி.எல். வைத்தியரட்ண தலைமையிலான குழுவினர் குறித்த இடத்துக்கு சமூகமளிக்க வில்லை. இதனால் அடையாளம் காணப்பட்ட மனித எலும்புக்கூடுகள் மீட்கப்படவில்லை.

இதேவேளை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் (சி.ஐ.டி) 5 ஆவது நாளாகவும் நேற்று அங்கு விசாரணைகளை முன்னெடுத்தனர்.

மீண்டும் இன்று வியாழக்கிழமை புதைகுழி தோண்டும் பணிகள் இடம்பெறும். (த-56)

### 25 ஆயிரம்

முன்னோடி வீட்டுத் திட்டத்தில் 150 வீடுகள் அமைக்கப்பட்டன. அவை முற்றாக நிர்மாணிக்கப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இதன் பின்னர் முதலாம் கட்ட வீட்டுத் திட்டம் மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளில் முன்னெடுக்கப்பட்டது. இதில் 397 வீடுகள் முற்றாக நிர்மாணிக்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்டத்தில் 2 ஆயிரத்து 198 வீடுகளுக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் 70 சதவீதமான வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் வேகமாக இடம்பெற்று வருகின்றன.

மூன்றாம் கட்டத்தில் 6 ஆயிரத்து 105 வீடுகள் யாழ். மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ளன. இதனை விட ஆயிரம் வீடுகள் திருத்தப்படவுள்ளன. மூன்றாம் கட்ட வீட்டுத் திட்டத்தில் தெல்லிப்பழை மற்றும் நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு இதுவரை அனுமதி கிடைத்துள்ளது.

இந்திய வீட்டுத் திட்டத்தில் 9 ஆயிரம் வீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளபோதும், இன்னமும் 25 ஆயிரம் வீடுகள் யாழ்ப்பாணத்தில் தேவையாகவுள்ளதாக அரச அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இந்திய வீட்டுத் திட்டப் பணிகள் தொடர்பிலும், மூன்றாவதும் இறுதிக் கட்டமுமான வீட்டுத் திட்டப் பணிகள் தொடர்பிலும் இந்திய வெளிவிவகார அமைச்சின் விசேட செயலாளர் குழுவுக்கும், யாழ்.மாவட்ட அரச அதிபருக்கும் இடையில் நேற்று மாலை சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. (த-5)

### இந்திய வீடு

கக் கொட்டகைகளில் வசித்து வருகின்ற மக்களே இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தங்களுக்கு நீண்ட காலமாக இந்திய வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லை என்றும் வீட்டுத் திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவில் மோசடி நடைபெற்றுள்ளதாகவும் தெரிவித்தே மக்கள் போராட்டத்தில் குதித்தனர்.

வவுனியா காமினி மகா வித்தியாலயத்தில் இருந்து ஆரம்பமான ஆர்ப்பாட்டப் பேரணி வவுனியா மாவட்ட செயலகம் வரை சென்றது.

முற்பகல் 10.00 மணிக்கு ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் பங்கு பற்றிய மக்கள் பல்வேறு கோஷங்களை எழுப்பினர்.

போரினால் இடம்பெயர்ந்து பின்னர் மீளக்குடியேறிய கிராமங்களுக்கு இந்த வீட்டுத் திட்டம் வழங்கப்படவில்லை. அமைச்சர் ஒருவரின் சிபாரிசில் அவருக்கு வேண்டியவர்களுக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்படுவதாகப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் குற்றம் சாட்டினர்.

வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு ஏற்பாடு செய்திருந்த இந்த ஆர்ப்பாட்டத்தில்'எமக்கு வீட்டுத் திட்டத்தை தா', அமைச்சரே!அதிகாரிகள் உனது கைக் கூலிகளா?', 'இந்திய அரசே! வீட்டுத்திட்டத்தை யாருக்கு வழங்கினாய்?', 'அமைச்சர் பாராபட்சம் காட்டுகின்றார்', 'ஜனாதிபதி செயலணியின் செயலாளரே நீர் அமைச்சருக்கு வக்காளத்து வாங்காதே' என்ற வாசகங்களை மக்கள் தாங்கியிருந்தனர்.

வவுனியா மாவட்ட செயலகத்துக்கு முன்னால் நின்று கோசம் எழுப்பிய மக்கள், ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதற்கான மனு ஒன்றை வவுனியா அரச அதிபரிடம் கையளித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி. சிவமோகன், வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையின் உறுப்பினாகளான க.பரமேஸ்வரன், எஸ்.பார்த்தீபன், பிரஜைகள் குழுவின் தலைவர் எஸ். தேவராஜா உட்பட பலர் கலந்துகொண்டனர். (த-421-402-10)

### இடம்பெயர்ந்தோர்

யுள்ளனர் என்றும் அமெரிக்காவில் வைத்து ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க கடந்த திங்கட்கிழமை தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக மூன்றாவது தடவையாகவும் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் அமெரிக்காவினால் பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது. இது தொடர்பில் அமெரிக்க உயர் அதிகாரிகளைச் சந்திப்பதற்காக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க அமெரிக்காவுக்குச் சென்றுள்ளார்.

அமெரிக்காவில் வைத்து ஏ.பி செய்திச் சேவைக்கு வழங்கிய நேர்காணலிலேயே லலித் வீரதுங்க மேற்கண்ட கருத்தை வெளியிட்டுள்ளார்.

இறுதிக் கட்டப் போரில் இடம்பெயர்ந்த 3 லட்சம் மக்களில் 2 லட்சத்து 50 ஆயிரம் பேரை இலங்கை அரசு மீளக்குடியமர்த்தியுள்ளது. இலங்கை அரசின் அடைவுகளில் இது முக்கியமானது என்று லலித் வீரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கடந்த 2012 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 25 ஆம் திகதி, வவுனியா செட்டிக்குளம் நலன்புரி நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த மக்கள், அவசர அவசரமாகக் கேப்பாபிலவில். அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுமதிக்கப்படாமல் மீளக்குடியேற்றப்பட்டனர்.

இதன் பின்னர் வவுனியாவில் வைத்து கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இலங்கையில் அகதிகள் என்று எவருமே இல்லை என்றும், இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்றும் கூறியிருந்தார்.

ஆனால் வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் 23 வருடங்களாக மீளக்குடியமர்த்தப்படாமல் உள்ளமை தொடர்பில் அவர் எதுவும் தெரிவித்திருக்கவில்லை.

இவ்வாறானதொரு நிலையில் இரண்டு வருடங்களின் பின்னர் இலங்கையில் இன்னமும் 50 ஆயிரம் பேர் மீளக்குடியமர்த்தப்படவேண்டியுள்ளனர் என்று ஜனாதிபதியின் செயலாளர் அமெரிக்காவில் கூறியிருக்கிறார்.

**விசாரணைகள் தொடர்கின்றன**

காணாமற்போனவர்கள் தொடர்பில் 13 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் இது தொடர்பில் [illegible] விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார். அத்துடன் தமிழ் மக்கள் தலைமையிலான வடக்கு மாகாண சபை அமைக்கப்பட்டிருப்பது அரசியல் பரவலாக்கத்துக்கான ஆரம்பம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைக் கடந்த 18 மாதங்களாக நடைமுறைப்படுத்தி வருவதாகவும், அதனைச் செயற்படுத்துவதற்கு இன்னமும் காலம் வேண்டும். எனவும், இதை தவறாக நடைமுறைப்படுத்தினால் மீண்டும் மோதல் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**தீர்மானம் உறுதி**

லலித் வீரதுங்க அமெரிக்க இராஜாங்க திணைக்கள அதிகாரிகளைச் சந்தித்து வருகின்ற நிலையில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இலங்கைக் எதிராக மூன்றாவது பிரேரணை சமர்ப்பிக்கப்படுவது உறுதி என்று தெரிவித்துள்ளது.

இந்தப் பிரேரணையில் போர்க் குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணைக்கான கோரிக்கை விடுக்கப்படுமா என்பது தொடர்பில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், காணி அபகரிப்பு, மதங்களுக்கு எதிரான ஊக்கப்படுத்தப்பட்ட தாக்குதல்கள், ஊடகங்களுக்கு எதிரான தாக்குதல்கள் தொடர்பிலான விசாரணைகள் பூர்த்தியாக்கப்படாமை போன்றவற்றின் பிரதிபலிப்புக்களை உள்ளடக்கியதாகவே இந்தப் பிரேரணை அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

### இந்தியக்

திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் முன்னேற்றம் தொடர்பிலான கலந்தாய்வுக்காகவே இந்தக் குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளனர்.

இந்தியத் துணைத் தூதரகத்தில் துணைத் தூதுவர் வி.மகாலிங்கத்தைச் சந்தித்து, இந்திய வேலைத் திட்டங்கள் தொடர்பில் இந்தக் குழுவினர் கலந்துரையாடினர். சுமார் ஒரு மணி நேரம் வரையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

நண்பகல் அச்சுவேலி கைத்தொழிற்பேட்டைக்குச் சென்ற இந்தக் குழுவினர், அங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற புனரமைப்புப் பணிகளைப் பார்வையிட்டனர்.

அதன் பின்னர் மக்களின் மீள்குடியமர்வுக் கிராமமான வளலாய்க்குச் சென்று அங்கு அமைக்கப்பட்டுள்ள இந்திய வீடுகளைப் பயனாளிகளிடம் கையளித்தனர்.

இதன் பின்னர் நேற்று மாலை அரச அதிபர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இந்தக் குழுவினர் இன்று கிளிநொச்சியின் பெரிய பரந்தன் மற்றும் வவுனியாவின் புதுக்குளம் ஆகிய பகுதிகளுக்குச் செல்லவுள்ளனர்.

இந்தக் குழுவில் வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர் பினய் குமார், வெளிவிவகார அமைச்சின் நிதி இயக்குநர் அனுராக் சிறிவஸ்ராவா, வெளிவிவாகார அமைச்சின் கீழ் நிலைச் செயலாளர் ஜோன் மாய் ஆகியோரும் அடங்கியுள்ளனர். (த-5)

### ஆறு

கின்றது. ஜெனிவாவில் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை இலங்கை தொடர்பில் எழுப்பப்படும் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்க வேண்டியிருக்கின்றது. எப்படியிருப்பினும் நாடு சமாதானத்தின் பலாபலனை அனுபவிக்கிறது என்றார் ஜனாதிபதி.

விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் தேசிய ஒற்றுமையைப் பரப்பும் ஒரு மொழியாக விளையாட்டைப் பயன்படுத்த வேண்டும். விளையாட்டின் ஊடாகக் கட்டப்படும் இணைப்புப் பாலமானது மதங்களையும், இனங்களையும் இல்லாமல் செய்யும் என்றும் அவர் தெரிவித்தார். (த-5)

### புல்மோட்டை

தக் கவனவீர்ப்புப் போராட்டம் தீர்வு கிடைக்கும் வரை தொடரும் என அந்த மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான தடை உத்தரவுகள் தமது பிரதேச மீனவர்கள் மத்தியிலேயே பிரயோகிக்கப்படுவதாகவும் தாம் பாரம்பரியமாக 50 வருடங்களுக்கும் மேலாக மேற்கொண்டு வரும் இந்தத் தொழிலை தற்போது தடையெனத் தெரிவிப்பது திட்டமிட்ட சதி எனவும் புல்மோட்டை சிறு கடல் தொழிலாளர் அபிவிருத்தி மத்திய கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் இஸ்மாயில் சய்புதீன் தெரிவித்தார்.

இந்த நிலை தொடருமானால் மீனவர்களின் குடும்பங்களில் பட்டினிச் சாவு ஏற்படவும் வாய்ப்பு உள்ளதுடன் தமது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளிலும் அது தாக்கம் செலுத்தும் என அவர் மேலும் கூறினார். (த-40)

### ஜெனிவா


அனந்தி முன்மொழிந்திருந்தார்.

இந்தப் பிரேரணைக்கு ஏகமனதாக ஆதரவு வழங்கிய வடக்கு மாகாண சபை, ஜெனிவாவுக்குச் செல்வதற்குப் பொருத்தமானவர் அனந்தியே என்றும் தீர்மானித்திருந்தது.

இவ்வாறானதொரு நிலையில் நேற்றுக் கருத்து வெளியிட்டுள்ள திருமதி அனந்தி சசிதரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் ஜெனிவாவுக்குச் செல்ல வேண்டும் என்றே தான் பிரேரணையை முன்வைத்திருந்ததாகவும், தான் செல்ல வேண்டும் என்று எந்தவொரு இடத்திலும் குறிப்பிடப்படவில்லை என்றும் சுட்டிக் காட்டினார்.

அத்துடன் மாகாண சபை தனக்கு வழங்கிய அங்கீகாரத்தை ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்த அனந்தி, பல்வேறு சிக்கல்கள் காரணமாக ஜெனிவா அமர்வை தவிர்ப்பதாகக் கூறினார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி,இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம் ஆகியவற்றின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்றது. இதில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் ரி.குருகுலராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்கிறார். (த-86)

## கரப்பந்தாட்ட அரையிறுதியாட்டம்

தென்மராட்சி, ஜன.30

சாவகச்சேரி கோயிற் குடியிருப்பு ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தி வரும் தென்மராட்சி பிரதேச கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டியின் அரை இறுதிப் போட்டிகள் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

இன்று வியாழக்கிழமை நடைபெறும் முதலாவது அரை இறுதிப் போட்டியில் கைதடி வளர்மதி வி.க.அணியும் மட்டுவில் ஜங்கரன் வி.க.அணியும் நாளை வெள்ளிக்கிழமை இரண்டாவது அரை இறுதிப் போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் வி.க.அணியும் மீசாலை சீமா வி.க.அணியும் மோதவுள்ளன.

இறுதிப் போட்டி எதிர்வரும் நான்காம் திகதி இடம்பெறும். போட்டிக்கு விருந்தினர்களாக சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை, சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, சாவகச்சேரி நகர் படை கட்டளைத் தளபதி, கோயிற் குடியிருப்பு பிரிவு கிராம அலுவலர் ஆகியோர் கலந்து கொள்வர். (த-9)

## யாழ்.பிரதேச கரப்பந்தாட்டம்; வென்றது போஸ்ஸ்ரார் அணி

யாழ்ப்பாணம், ஜன.30

யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் போஸ் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி சம்பியனனாது.



கடந்த சனிக்கிழமை கொழும்புத்துறை ஜெட்லைனர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் போஸ்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜெட்லைனர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

5 செற்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் போஸ் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற செற் கணக்கில் வென்று சம்பியனானது. (த-23)

## கரம் போட்டி

யாழ்ப்பாணம், ஜன.30

நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் அங்கத்துவக் கழங்களுக்கு இடையே நடத்தும் 2014 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான ஆண் பெண் இருபாலாருக்கு மானகரம்போட்டி எதிர்வரும் சனிக்கிழமை கே.சி.சி. விளையாட்டுக்கழக மண்டபத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (த-23)

## ஜெகமீட்பர் வி.க. சம்பியனாகத் தெரிவு

யாழ்ப்பாணம், ஜன.30

பூநகரிப் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.



கடந்த ஞாயிற்றுக்கிழமை முழங்காவில் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் வலைப்பாடுஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அண்ணா இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணி 8:1 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. (த-23)

# கரைச்சிக் கிரிக்கெட் உதயசூரியன் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜன.30

கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான மென் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று சம்பியனானது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கனகபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் உதய சூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து செந்தணல் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.



முதலில் துடுப்பெடுத்தாடிய உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் தங்கராசா 31 ஓட்டங்களையும், குமார் 21 ஓட்டங்களையும், கஜந்தன் 13 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்துவீச்சில் செந்தணல் விளையாட்டுக் கழக அணி சார்பில் சதீஸ் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 25 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், கஜேந்திரன் ஒரு பந்துப் பரிமாற்றம் பந்துவீசி 7 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் தவதீஸ் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 16 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கினை வீழ்த்தினார்கள்.

91 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய செந்தணல் விளையாட்டுக் கழக அணி 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 56 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் தர்சன் 14 ஓட்டங்களைத் தனது அணி சார்பாகப் பெற்றார்.

பந்துவீச்சில் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி சார்பில் தங்கராசா 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 19 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் பில்லா 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 4 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், ராசா 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 25 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கினையும் வீழ்த்தினர். (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் வி. க நடத்தும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண் பர்கள் வி.க. மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்று வியாழக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நக்கீரன் வி. க. 'ஏ' அணியை எதிர்த்து சிறி அம்பாள் வி.க. அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சென். சேவி யர் வி. க. அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ் சர்ஸ் வி. க. அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

யாழ்.மாவட்டத் தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் அளவெட்டி பாரதி விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அள வெட்டி பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்று வியாழக்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் அறி வொளி விளையாட் டுக் கழக அணியை எதிர்த்து கண்ணகி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.(த-23)

★ ★ ★

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் முருகன் செல்லத்தம்பி அவர்களின் முதலாம் ஆண்டு நிறைவை யொட்டி மின்னொளியில் நடத்தும் 6 பேர் பங்கு கொள்ளும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளை யாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்று வியாழக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணி களின் விவரங்கள் வருமாறு:-

**இரவு - 7 மணி**

♦ பொலிகண்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகம் எதிர் சிறுப்பிட்டி கலை ஒளி விளையாட்டுக் கழகம்.

**இரவு - 8 மணி**

♦ அண்ணா சிலையடி விளையாட்டுக்கழக 'ஏ' அணி எதிர் சந்திரோதயா விளையாட்டுக் கழகம்.

**இரவு - 9 மணி**

♦ சிவகுமரன் விளையாட்டுக் கழக 'பி' அணி எதிர் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகம்.

**இரவு - 10 மணி**

♦ விவேகானந்தா வி.க. அணி எதிர் இமையாணன் மத்திய வி. க.

**இரவு - 11 மணி**

♦ கலைமதி விளையாட்டுக் கழக 'பி' அணி எதிர் குணசேகர விளையாட்டுக் கழக 'ஏ' அணி. (த-23)

## வென்றது மறுமலர்ச்சி வி.க.

யாழ்ப்பாணம், ஜன.30

யாழ். மாவட்டத் தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் அளவெட்டி பாரதி விளையாட்டுக் கழகம் மின்னொர்ளியில் நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அளவெட்டி பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் திங்கட்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலை மகள் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழக அணி 9:6 என்ற கணக்கில் பழங்களைப் பெற்று வெற்றி பெற்றது. (த-23)

## தெல்லிப்பழை பிரதேச செயலக கபடி இரு பிரிவுகளிலும் இளஞ்சுடர் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜன.30

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இரு பாலருக்குமான கபடி போட்டியின் இறுதியாட்டங்களில் இரு பிரிவுகளிலும் இளவாலை இளஞ்சுடர் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியனானது.

கடந்த சனிக்கிழமை இளவாலை இளஞ்சுடர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டங்களில் முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் இளவாலை இளஞ் சுடர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தெல்லிப் பழை கலை ஒளி விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.



இதில் இளவாலை இளஞ்சுடர் விளையாட்டுக் கழக அணி 48:10 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் சேந்தாங்குளம் இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை இளஞ்சுடர் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் இளவாலை இளஞ்சுடர் விளையாட்டுக் கழக அணி 55:53 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது. (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல்லில் இந்த வருடம் பங்குபற்றமாட்டார் சங்கா

இந்தியன் பிறீமியர் லீக் தொடரின் நடுப்பகுதியில் இலங்கை அணி இங்கிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில், அந்தத்தொடரைக் கருத்திற் கொண்டே குமார் சங்கக்காரவும், டினேஷ் சந்திமாலும் இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் பங்குபற்றாமல் தவிர்த்துள்ளனர் எனக் கருதப்படுகிறது.


சங்கக்கார

இந்தியன் பிறீமியர் லீக் தொடரின் இவ்வாண்டுக்கான தொடரில் இலங்கையின் குமார் சங்கக்கார பங்குபற்றமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று அறிவிக்கப்பட்டுள்ள ஏலத்தில் பங்குபற்றவுள்ளவர்களுக்கான பட்டியலிலேயே குமார் சங்கக்கார இடம்பெற்றிருக்கவில்லை.

உள்ளூர் இந்திய வீரர்களும், சர்வதேச வீரர்களுமாக மொத்தமாக 233 வீரர்கள் இந்த ஏலப்பட்டியலில் அறிவிக்கப்பட்டுள்ளனர். அறிவிக்கப்பட்டுள்ள பட்டியலில் இலங்கையின் குமார் சங்கக்கார தவிர, இலங்கையின் டினேஷ் சந்திமால், ஆஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க், மேற்கிந்தியத் தீவுகளின் வேகப்பந்து வீச்சாளர் கேமர் றோச் ஆகியோரும் இடம்பெற்றிருக்கவில்லை.

இந்தியன் பிறீமியர் லீக் தொடரின் நடுப்பகுதியில் இலங்கை அணி இங்கிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில், அந்தத்தொடரைக் கருத்திற் கொண்டே குமார் சங்கக்காரவும், டினேஷ் சந்திமாலும் இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் பங்குபற்றாமல் தவிர்த்துள்ளனர் எனக் கருதப்படுகிறது. எனினும் இலங்கையின் முன்னணி வீரர்களில் அஞ்சலோ மத்தியூஸ், மஹேல ஜெயவர்த்தன இருவரும் இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் பங்குபற்றவுள்ளனர்.

இதுவரை சர்வதேசப் போட்டிகளில் விளையாடிய வீரர்களாக இந்தியா, ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த தலா 46 வீரர்களும், இலங்கையைச் சேர்ந்த 39 வீரர்களும், மேற்கிந்தியத் தீவுகளைச் சேர்ந்த 29 வீரர்களும், தென்னாபிரிக்காவைச் சேர்ந்த 28 வீரர்களும், நியூஸிலாந்தைச் சேர்ந்த 18 வீரர்களும், இங்கிலாந்தைச் சேர்ந்த 11 வீரர்களும், சிம்பாப்வேயைச் சேர்ந்த 8 வீரர்களும், பங்களாதேஷைச் சேர்ந்த 7 வீரர்களும், நெதர்லாந்தைச் சேர்ந்த வீரரான றயன் ரென் டுஸ்காட்டாவும் காணப்படுகின்றனர்.

இதில் அதிகபட்ச அடிப்படைய விலையாக 2 கோடி இந்திய ரூபாக்களைக் கொண்ட வீரர்களாக 31 வீரர்கள் காணப்படுகின்றனர்.

2 கோடி இந்திய ரூபா அடிப்படை விலையைக் கொண்டோர் விவரம்:-

டினேஷ் சந்திமால், பிரவீன் குமார், அமித் மிஷ்ரா, ஆஷிஷ் நெஹ்றா, பிரக்ஜான் ஓஜா, யூசுப் பதான், விரேந்தர் செவாக், யுவ்ராஜ் சிங், சௌரவ் திவாரி, றொபின் உத்தப்பா, முரளி விஜய், ஜோர்ஜ் பெய்லி, பிரட் ஹடின், பிரட் ஹொக், மைக்கல் ஹசி, மிற்சல் ஜோன்சன், பிரட் லீ, ஷோன் மார்ஷ், ஜேம்ஸ் பற்றின்சன், ஸ்டீவன் ஸ்மித், மிற்சல் ஸ்ராா்க், அலெக்ஸ் ஹேல்ஸ், சமித் பட்டேல், கெவின் பீற்றர்சன், பிரெண்டன் மக்கலம், றொஸ் ரெய்லர், ஜக்ஸ் கலிஸ், திலகரட்ண டில்ஷான், மஹேல ஜெயவர்தன, அஞ்சலோ மத்தியூஸ், மார்லன் சாமுவேல்ஸ். (த)

## சர்வதேச கிரிக்கெட் சபையின் அதிகாரங்கள் 3நாடுகள் வசம்?

சர்வதேச கிரிக்கெட் சபையின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தின் முதல் நாள் அமர்வு டுபாயில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் ஐ.சி.சியின் எதிர்கால நிர்வாக வியூகம் தொடர்பிலான நிதி சம்பந்தப்பட்ட கொள்கைகள் சில ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. ஆற்றல்களைக் கருத்திற்கொண்டு சகல உறுப்பினர்களுக்கும் டெஸ்ட், ஒருநாள் மற்றும் 20/20 போட்டிகளில் விளையாட சந்தர்ப்பம் அளிக்கப்படும். இதில் எந்தவொரு நாட்டினதும் அங்கத்துவ நிலையில் மாற்றம் ஏற்படுத்தப்படமாட்டது.

2. டெஸ்ட் கிரிக்கெட்டை மேம்படுத்துவதற்காக இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து கிரிக்கெட் நிர்வாக சபைகளை தவிர எஞ்சிய பூரண உறுப்பினர்களுக்கு வருடாந்தம் பொதுவான கொடுப்பனவு கிடைக்கும் டெஸ்ட் கிரிக்கெட் நிதியம் ஒன்றை ஸ்தாபித்தல்.

3. இதன்போது ஐ.சி.சியின் முன்னிலை உறுப்பினர்கள் சம்பந்தமாக வலுவான தலைமையின் தேவையை ஏற்றுக்கொள்ளல். இந்தியக் கிரிக்கெட் சபை இதில் பிரிவுகளுக்காக வழங்கும் ஒத்துழைப்பின் பிரமாணத்தை அறிந்துகொள்ளல்.

5. நடைமுறை ரீதியிலான தலைமையை வழங்குவதற்காக நிறைவேற்றுக் குழுவொன்றும் நடுநிலையான தலைமைத்துவப் பொறுப்பை ஏற்க வேண்டும்.

4. அங்கத்துவ நிதி செலுத்துவதன் மூலம் பூரண அங்கத்தவர்கள் ஐ.சி.சியின் நிதி மற்றும் வர்த்தகச் செயற்பாட்டுக் குழுவும் ஸ்தாபிக்கப்படும். இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து உள்ளிட்ட 5 அங்கத்தவர்களைக் கொண்டதாக இந்தக் குழு அமையும்.

6. ஐ.சி.சியின் புதிய நிர்வாக வியூகம் மற்றும் ஊடக உரிமைகளுக்கான சுற்றுநிரூபத்தை நோக்கிச் செல்லும் இந்தப் பருவகாலத்துக்கான தலைமைத்துவம் இந்த வருட ஜூன் மாதத்திலிருந்து கிடைக்கவுள்ளது.

7. இந்திய கிரிக்கெட் சபையின் பிரதிநிதிகள் ஐ.சி.சியின் தலைமைத்துவத்தை வகிக்கும் அதேவேளை, ஆஸ்திரேலிய கிரிக்கெட் நிர்வாகத்தின் பிரதிநிதிகள் நிறைவேற்றுக் குழுவின் தலைமைப் பதவிக்கும் இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் பிரதிநிதிகள் நிதி மற்றும் வர்த்தக நடவடிக்கை குழுவின் தலைமை பதவிக்கும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

ஆகிய முக்கிய 7 விடயங்கள் உள்ளிட்ட மேலும் பல கொள்கைகள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளன. (த)

# மெஸ்ஸி விற்பனைக்கு அல்ல



லயனல் மெஸ்ஸி

உலகின் தலைசிறந்த உதைபந்தாட்ட வீரர்களில் ஒருவரான லயனல் மெஸ்ஸி விற்பனைக்கு அல்ல என பார்சிலோனா அணியின் தலைவர் ஜோசப் மரியா பர்டோமவ் தெரிவித்துள்ளார்.

கடந்த 2004ஆம் ஆண்டு முதல் பார்சிலோனா அணியில் இணைந்து விளையாடி வரும் மெஸ்ஸி, இதுவரையிலும் 331கோல்கள் அடித்துள்ளார்.

இவர் சமீபத்தில் இந்த அணிக்காக 400ஆவது போட்டியில் பங்கேற்றார். இந்நிலையில் பிரான்ஸைச் சேர்ந்த பரிஸ் செயின்ட்-ஜெர்மெய்ன் அணி ஒப்பந்தம் செய்ய முயற்சி செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து பார்சிலோனா தலைவர் ஜோசப் மரியா பர்டோமவ் கூறுகையில், பார்சிலோனா அணிக்காக இந்த பருவ காலத்தில் மட்டும் 36 கோல்களை அடித்துள்ளார், அவர் ஆடிய 20 ஆட்டங்களில் 16 இல் பார்சிலோனா அணி வெற்றி பெற்றது. எனவே புதிய ஒப்பந்தம் மேற்கொள்வது குறித்து ஆலோசனை நடந்து வருகிறது. அதனால், அவர் விற்பனைக்கு அல்ல என்று தெரிவித்துள்ளார். (த)


அண்டர்சன்

# அண்டர்சன் யாருக்கு?

புத்தாண்டு தினத்தன்று உலக சாதனை படைத்த அண்டர்சனை எடுக்க ஐ.பி.எல் அணிகள் போட்டி போட்டுக் கொண்டிருக்கின்றன.

சூதாட்டப் புகார்கள் உட்பட பல்வேறு சர்ச்சைகளுக்கு மத்தியில் விரைவில் தொடங்கவுள்ளது 7ஆவது ஐ.பி.எல். இப்போட்டிக்கான வீரர்களின் ஏலம் எதிர்வரும் 12ஆம் திகதி நடக்கிறது.

ஏற்கனவே சென்னை சுப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ், ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் ஐந்து நபர்களைத் தக்கவைத்துக் கொண்டுள்ளன. இந்நிலையில் மற்ற வீரர்களுக்கான ஏலம் நடக்கவுள்ளது. இதில் நியூசிலாந்து சகலதுறை வீரா கோரி அண்டர்சனை ஏலத்தில் எடுக்கக் கடும் போட்டி நிலவும் என்று தெரிகிறது.

சென்னையும், மும்பையும் அதிக அளவில் பணம் செலவழித்து விட்டதால் அண்டர்சனை ஏலத்தில் எடுக்கப் போட்டி போடுமா என்பது சந்தேகமே.

அதே நேரத்தில் யாரையும் தக்க வைத்துக்கொள்ளாத டில்லி டேர்டெவில்ஸ் மற்றும் சன் ரைசர்ஸ் ஐதராபாத், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் ஆகிய அணிகள் அண்டர்சனை எடுக்க ஆர்வம் காட்டும். புத்தாண்டு அன்று அவர் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியில் 36 பந்தில் சதம் அடித்து அப்ரிடி சாதனையை முறியடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# பந்து வீச்சாளர்களே காரணம்

தென்னாபிரிக்காவைத் தொடர்ந்து நியூசிலாந்துக்கு எதிரான தொடரையும் இந்தியா இழந்து விட்டது. நியூசிலாந்து சென்றுள்ள டோனி தலைமையிலான இந்திய அணி மூன்று ஒருநாள் போட்டிகளில் தோல்வி அடைந்து தொடரை இழந்துள்ளது. முதலாவது ஆட்டத்தில் 24 ஓட்டங்கள் வித்தியாசத்திலும், 2ஆவது ஆட்டத்தில் 15 ஓட்டங்கள் வித்தியாசத்திலும், 3ஆவது போட்டி சமநிலையிலும்லும், 4ஆவது போட்டியில் 7 இலக்குகள் வித்தியாசத்திலும் நியூசிலாந்து வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய இந்திய அணியின் அணித் தலைவர், தோல்விக்கு பந்து வீச்சாளர்கள் சரியாக விளையாடததே காரணம் என்று தெரிவித்துள்ளார். மேலும் கூறுகையில், வெளிப்படையாகச் சொல்ல வேண்டும் என்றால் எங்களது பந்து வீச்சு மிக மோசமாக இருந்தது. வேகப்பந்து வீச்சாளர்கள் அதிக அளவில் ஓட்டங்களை விட்டு கொடுத்து விட்டார்கள் என்று நான் நினைக்கிறேன், சுழற்பந்து வீச்சாளர்கள் சிறந்த முறையிலேயே பந்து வீசினார்கள் என்று தெரிவித்துள்ளார். (த)


மகேந்திர சிங் டோனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசத்துகிறது இலங்கை அணி

பங்களாதேஷுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும் பங்களாதேஷ் அணிக்கும் இடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட்த் தொடரின் முதலாவது போட்டியின் மூன்றாம் நாள் முடிவில் இலங்கை அணி மஹேல ஜெயவர்த்தனவின் உதவியுடன் இன்னிங்ஸ் வெற்றியொன்றை நோக்கிப் பயணிக்கிறது.

5இலக்குகளை இழந்து 375 ஓட்டங்களுடன் நேற்று ஆட்டத்தைத் தொடர்ந்த இலங்கை அணி 6 இலக்குகளை இழந்து 730 ஓட்டங்களுடன் தனது முதல்இனிங்ஸை இடைநிறுத்தியது. 6ஆவது இலக்குக்காக மஹேல ஜெயவர்தன, அஞ்சலோ மத்தியூஸ் இருவரும் 179 ஓட்டங்களைப் பகிர்ந்ததோடு 7ஆவது இலக்குக்காக மஹேல ஜெயவர்த்தன, கித்துருவன் விதானகே இருவரும் 175 பந்துகளில் பிரிக்கப்படாத 176 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக தனது 7ஆவது இரட்டைச் சதத்தைப் பூர்த்தி செய்த மஹேல ஜெயவர்த்தன ஆட்டமிழக்காமல் 203 ஓட்டங்களையும் கௌஷல் சில்வா 139 ஓட்டங்களையும் தனது கன்னிச்சதத்தைப் பூர்த்தி செய்த கித்துருவன் விதானகே ஆட்டமிழக்காமல் 103 ஓட்டங்களையும் அஞ்சலோ மத்தியூஸ் 86 ஓட்டங்களையும் குமார் சங்கக்கார 75 ஓட்டங்களையும் திமுத் கருணாரத்ன 53 ஓட்டங்களையும் டினேஷ் சந்திமால் 40 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பாக ஷகிப் அல் ஹசன் 3 இலக்குகளையும் சொஹக் கஸி 2இலக்குகளையும் அல் அமின் ஹுசைன் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.


498 ஓட்டங்களால் பின்னிலை வகித்த நிலையில் தனது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் பங்களாதேஷ் அணி நேற்றைய மூன்றாம் நாள் முடிவில் ஒரு இலக்கை இழந்து 35 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. பங்களாதேஷ் அணியின் அதிரடி வீரர் தமிம் இக்பாலின் இலக்கை ரங்கன ஹேரத் கைப்பற்றினார்.

ஷேரே பங்களா மைதானத்தில் இடம்பெறும் இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடியிருந்த பங்களாதேஷ் அணி 232 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்திருந்தது. இதன்படி, 9 இலக்குகள் கைவசமுள்ள நிலையில் இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதற்கு பங்களாதேஷ் அணிக்கு இன்னமும் 463 ஓட்டங்கள் தேவைப்படுகின்றன. இன்று போட்டியின் நான்காம் நாளாகும். (த-400)


இரட்டைச் சதம் அடித்த மஹேல

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# வெற்றிப் பயணத்தை தொடர்கிறது ஆஸி.


கமரன் வைட்

ஆஸ்திரேலியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும் ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட 20/ 20 சர்வதேசப் போட்டித் தொடரின் முதலாவது போட்டியில் ஆஸ்திரேலிய அணி வெற்றிபெற்றுள்ளது.

ஹோபார்ட்டில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 213 ஓட்டங்களைக் குவித்தது.

ஆரம்பத்திலிருந்தே அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஆஸ்திரேலிய அணி, முதலாவது இலக்குக்காக 10.4 பந்துப்பரிமாற்றங்களில் 106 ஓட்டங்களைக் குவித்திருந்தது. தொடர்ந்து வந்த வீரர்களும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த, அவ்வணி 213 ஓட்டங்கள் என்ற சிறப்பான நிலையை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலிய அணி சார்பாக கமரன் வைட் 43 பந்துகளில் 75 ஓட்டங்களையும் ஆரொன் பின்ச் 31 பந்துகளில் 52 ஓட்டங்களையும் அறிமுக வீரர் கிறிஸ் லின் 19 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 37 ஓட்டங்களையும் கிளென் மக்ஸ்வெல் 13 பந்துகளில் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஸ்ருவேர்ட் புரோட், ரவி போப்பாரா, ஜேட் டேர்ண்பக், லூக் றைட் ஆகியோர் தலா ஒரு இலக்கைக் கைப்பற்றினர். 214 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 20 பந்துப் பரிமாற்றங்களில்9 இலக்குகளை இழந்து 200 ஓட்டங்களைப் பெற்று 13 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

ஆரம்பத்திலிருந்து வேகமாக ஆட முனைந்த இங்கிலாந்து அணி 13 ஓட்டங்களுக்கே முதலாவது இலக்கை இழந்தது. இரண்டாவது இலக்குக்காக 3பந்துப்பரிமாற்றங்களில் 30 ஓட்டங்களைக் குவித்த போதிலும் அதன் பின்னர் இலக்குகளை இழந்தது.

4 இலக்குகளை இழந்து 51 ஓட்டங்களுடன் காணப்பட்ட அவ்வணி சார்பாக 5ஆவது இலக்குக்காக 47 ஓட்டங்களும் 7ஆவது இலக்குக்காக மற்றொரு 47 ஓட்டங்களும் பெறப்பட்ட போதிலும் அதன் பின்னர் இலக்குகள் வீழ்த்தப்பட்டன.

இறுதியில் ரவி போப்பாரா அதிரடியாக ஆடிய போதிலும் அவ்வணியால் வெற்றிபெற முடிந்திருக்கவில்லை.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக ரவி போப்பாரா 27 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 65 ஓட்டங்களையும் ஜோ றூட் 24 பந்துகளில் 32 ஓட்டங்களையும் அலெக்ஸ் ஹேல்ஸ் 12 பந்துகளில் 22 ஓட்டங்களையும் ஜொஸ் பட்லர் 14 பந்துகளில் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஆஸ்ரேலிய அணி சார்பாக நேதன் கோர்ட்டர் நைல் 4 இலக்குகளையும் மொய்ஸஸ் ஹென்றிக்கஸ் 2 இலக்குகளையும் கிளென் மக்ஸ்வெல்இ அறிமுக வீரர் ஜேம்ஸ் முவ்றிஹெட் மூவரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். இப்போட்டியின் நாயகனாக கமரன் வைட் தெரிவானார். (த-400)

# மரண அறிவித்தல்



## வெற்றிவேலு செல்லையா இராசரத்தினம்

(இளைப்பாறிய துறைமுக களஞ்சியக்காப்பாளர்)

இருபாலை கிழக்கு, கும்பப்பிள்ளை இரத்தினவாசம் பிறப்பிடமாகவும், கொழும்பு, கொலிங்வூட் இல. 10, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட வெ. செ. இராசரத் தினம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு செல்லையா-இராசம்மா (வள்ளியம்மை) தம்பதியரின் அன்பு மகனும், திருமதி இராசரத்தினம் குணபூசணியின் அன்புக் கணவரும், ஹேமலதா, ஹெலன்ராஜ், ஹெலன்குமார், ஹெலன்சுரேஷ், ஹெலன்சங்கர் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஆ. தங்கராஜா, ஹீமசுதா, சிவனேஸ்வரி, ஜெனிற்றா, வனித்தா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2014) வியாழக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு முனிகோயிலடியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியை களுக்காக இருபாலை கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

உடன் பிறப்புகள், பேரப்பிள்ளைகள், மைத்துனர், மைத்துனிகள், உறவினர்கள், பெறாமக்கள்.

நல்லநிலையில் உள்ள பாவித்த லப்டொப்கள் தேவை
GUNAA BEST PC 0779086737
52.HOSPITAL ROAD,JAFFNA.

யாழ்..... விக்னா கணிதப் புகழ்
MR.C.K.B. தயாளன்
மீண்டும் பெப்ரவரி தொடக்கம்
யாழ்.நகரின் பிரபல கல்வி நிறுவனங்களில்
O/L Day class, O/L.10,9 (Paper class)
தொடர்புகளுக்கு :- 0777 - 492794

NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. | இரு இடத்திலும் | மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.
A/L 2016
கலை,வர்த்தக,கணித, உயிரியல்,தொழில்நுட்ப பிரிவுகள்
ஆரம்பம்
01-02-2014 சனி காலை 9.00மணி
A/L 2014,2015, Day Class வகுப்புக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.

கருத்தரங்குகள்
Feb-2 சட்டமாணி
தெரிவுக்கு நாளை (வெள்ளி), சனி
மு.ப. 9.00 - 4.00 மணிவரை
விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்
ஒவ்வொரு சனியும் 1.00 மணி
விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்
ஒவ்வொரு ஞாயிறும் 1.00 மணி
வங்கி மற்றும் ஏனைய பரீட்சைகளுக்கான
IQ. GK.
ஒவ்வொரு ஞாயிறும் 1.00 மணி
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு, யாழ் நகர்.
075 4164564

SAAMSON Language School
SPOKEN ENGLISH
தொழில் தேடுவோர், மாணவர்கள், பல்கலை மாணவர்கள், இளைஞர் யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
3 மாதங்களில் எவராவது சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்.
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் : 01.02.2014 சனிக்கிழமை
பிரிவு 1. காலை 08.00 - 10.00 பிரிவு 3. மு.ப 11.30 - 01.00
பிரிவு 2. காலை 10.00 - 12.00 பிரிவு 4. மாலை இடமில்லை
வார நாள் பிரிவுகள் ஆரம்பம் 03.02.2014 (திங்கள்,புதன்)
1. காலை 09.00 - 11.00 2. காலை 11.00 - 01.00
SAAMSON 379,ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்ப்பாணம். 077 621 4567

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.01.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.